விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email: kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 புரட்டாதி 17 திங்கட்கிழமை (03.10.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 289



யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் முதல்முறையாக இடம்பெற்ற 42ஆவது தேசிய விளையாட்டு விழாவின் இறுதிநாள் நிகழ்வில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர, எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன், வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அழைத்து வரப்படுவதை படத்தில் காணலாம்.

## மாகாணப் பிளவுகள் வேண்டாம்; இலங்கையர்களாக இணைவோம்

### யாழில் ஜனாதிபதி உரை

(யாழ்ப்பாணம்)

இங்கிலாந்து அரசு பிரித்து தந்த ஒன்பது மாகாணங்களுக்காக நாம் ஏன் சண்டை பிடிக்க வேண்டும் என கேள்வி எழுப்பியுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, விளையாட்டுக்காக நாட்டினை மாகாண ரீதியாக பிரிக்க முடிந்தாலும் நாம் அனைவரும் இலங்கையர் என்ற மனோநிலையில் இருக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

தேசிய விளையாட்டு விழாவின இறுதி நாள் நிகழ்வு நேற்று யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இந்த விளையாட்டு மைதானத்தில் நாட்டின் அனைத்து மாணவர்

23ஆம் பக்கம் பார்க்க....

## இனவாதிகள் எதிர்க்கிறார்கள் என்பதற்காக


# உரிமையைக் கேளாமல் நாம் இருக்க முடியாது

## சித்தார்த்தன் எம்.பி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

எழுக தமிழ் மக்கள் பேரணி அரசாங்கத்துக்கோ அல்லது எந்தவொரு நபருக்கோ எதிரானது அல்ல. தமிழ் மக்களுக்கான உரிமையைக் கோரும் கவனயீர்ப்பு போராட்டமே ஆகும். தீர்வொன்றை வழங்கக்கூடாது என கண்டியிலிருந்து பேரணி நடத்த முடியுமாயின் தீர்வொன்றை வழங்குங்கள் எனக் கூறி பேரணி நடத்துவதற்கு எமக்கு உரிமை இல்லையா என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் கேள்வி எழுப்பினார்.

23ஆம் பக்கம் பார்க்க....



## 42ஆவது தேசிய விளையாட்டு விழாவில் மேல் மாகாண அணி சம்பியன்



யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் கடந்த 4 நாட்களாக நடைபெற்று வந்த 42ஆவது தேசிய விளையாட்டு விழாவில் மேல் மாகாண அணி சம்பியன் பட்டத்தை சுவீகரித்து கொண்டது.

## சிறை செல்லவுள்ளவர்களுக்கு என்னில் அரசியல் வியாபாரம்

### முதலமைச்சர் விக்னேஸ்வரன் சாடல்

(யாழ்ப்பாணம்)

தென்பகுதியில் சிறைத்தண்டனைக்கு இலக்காக வேண்டிய அரசியல்வாதிகள் பலர் என்னை வைத்து அரசியல் வியாபாரம் செய்து வருகின்றனர் எனச் சாடியுள்ள வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், மக்களிடையே தேவையற்ற விதத்தில் பிரிவினைகளையும் முரண்பாடுகளையும் ஏற்படுத்துவது முறையல்ல எனவும் குறிப்பிட்டுள்ளார்.

42ஆவது தேசிய விளையாட்டு விழாவின் இறுதிநாள் நிகழ்வுகள் நேற்றைய தினம் யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே முதலமைச்

23ஆம் பக்கம் பார்க்க....

## உடல் நலத்தில் ஜெயா முன்னேற்றம்

(தமிழகம்)

சென்னை கிரீம்ஸ் சாலையிலுள்ள அப்பலோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்ற தமிழ் நாட்டின்

23ஆம் பக்கம் பார்க்க....

## யாழ்.பல்கலைக்கு ஜனாதிபதி விஜயம்



24ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதி, பிரதமர் இந்தியா விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ள உள்ளனர்.

எதிர்வரும் இரண்டு வார காலப பகுதியினுள் இவர்களது விஜயம் இடம்பெறும் என தெரிவிக்கப்படுகிறது. ஜனாதிபதியும் பிரதமரும் ஒரே காலப்பகுதியில் விருந்தினர்களாக அண்டை நாட்டிற்கு செல்வது மிக

23ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கில் விளையாட்டுத்துறை மலர்ச்சியுறச் செய்யப்படும்

### அமைச்சர் தயாசிறி உறுதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

விளையாட்டுத்துறை கலாசாரமொன்றை வடக்கில் மலர்ச்சியுறச் செய்வதற்கான பல வழிவகைகளை நாம் ஏற்படுத்தி வருகின்றோம்.

அதன்படியே தேசிய விளையாட்டு விழாவை இம்முறை யாழ். மாவட்டத்தில் நடத்தியுள்ளோம் என விளையாட்டுதுறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்

42ஆவது தேசிய விளையாட்டு வழாவின் இறுதி நாள் நிகழ்வு நேறறைய தினம் யாழ்.துரையப்பா

24ஆம் பக்கம் பார்க்க....

## பெர்னான்டோவிடம் தீவிர விசாரணை!

(கொழும்பு)

பிரித்தானியாவில் நடைபெறவுள்ள மனித உரிமை மாநாடு ஒன்றில் பங்கேற்கச் சென்ற இலங்கையின் மனித உரிமைச் செயற்பாட்டாளர் ருக்கி பெர்னான்டோ, கட்டுநாயக்க விமான நிலையத்தில் புலனாய்வுப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டு தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். பிரித்தானியாவின்

24ஆம் பக்கம் பார்க்க....

## கோத்தாவுக்கு சீனா அழைப்பு; நீதிமன்றத்தின் கையில் முடிவு!

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ சீனாவுக்குப் பயணம் மேற்கொள்வதற்கு அனுமதி அளிப்பதா என்பது குறித்து நீதிமன்றம் இன்று முடிவு செய்யவுள்ளது.

இலங்கை அரசுக்குக் கிடைத்திருக்க வேண்டிய சுமார் 11.4 பில்லியன் வருமானத்தை அவன்ட் கார்ட் நிறுவனத்தின் மூலம், இழப்பு

24ஆம் பக்கம் பார்க்க....

## புதிய அரசியலமைப்பில் சமத்துவம் அவசியம்!

### எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன்

(யாழ்ப்பாணம்)

நாடு பிளவுபடாமல் அனைத்து இன மக்களும் சமத்துவமாக ஒரே நாட்டிற்குள் ஒற்றுமையாக வாழக்கூடிய வகையில் புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.


தேசிய விளையாட்டு விழாவின் இறுதி நாள் நிகழ்வுகள் நேற்றைய தினம் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டில் ஆட்சியை நடத்துபவர்களின் சிந்தனை மாற்றத்தை இந்த நிகழ்வு எடுத்துக்காட்டுகின்றது என நான் கருதுகின்றேன். இவை நடப்பதற்கு இந்த நாட்டில் நல்லிண

24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 190 ஆம் நினைவு நாள்



சூராவத்தை சுன்னாகத்தை
பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் அம்பலவாணர் சிவலோகநாதன்

பிறப்பு : 27.11.1948
இறப்பு : 27.03.2016

படைக்கும் கடவுளின் முகமாக- எங்களை படைத்த
உந்தன் அன்புமுகம் கண்டோம்
மென்மையாய் பேசுபவனே பணிவினைக் கற்பித்தவனே

அன்பு ஒன்றை வாடகையாய்க் கொடுத்து
எங்கள் நெஞ்சினில் வாழ்கிறாய் இன்று
பள்ளிக்கு பின்பே பல்கலை கழகம் செல்வார்கள்
பல்கலை கழகமே உன்னிடம் பயின்றபின் தான்
நாங்கள் பள்ளிக்குச் சென்றோம்

ஆண்டவன் உன்னை அதிகம் நேசித்து விட்டானோ?
விரைந்து உன்னை அவனிடம்
அழைத்துக்கொண்டானே? எங்களை உலகிற்கு
அளித்தவனே இன்று உன் பிரிவால் - நாங்கள்
சிந்தும் கண்ணீருடன் உன்னிடம் வரம்
ஒன்று யாசிக்கின்றோம்.

எங்கள் வயிற்றில் நீ வந்து பிறந்திட வேண்டும்
பிற்காலத்திலும் எங்களை நீதான்
காத்திட வேண்டும் அப்பா!!
- குடும்பத்தினர்

(6101)

## வீடு வாடகைக்கு

வெள்ளவத்தையில் 42-ம் வீதியில் 3-ம் இலக்கத்தில் இரண்டு அறைகள் இணைந்த குளியலறையுடன் கூடிய தொடர்மாடி நாள்,கிழமை,மாத வாடகைக்குண்டு.

T.P 077 8378597

(5997)

## காணி விற்பனை

ஏ9 வீதி நுணாவில் சந்தியில், மட்டுவில் தெற்கு பருத்தித்துறை வீதியில், துர்க்கை அம்மன் ஆலய வீதி ஆரம்பத்தில், திருத்தக் கூடிய உடைந்த 5 பரப்பில் உள்ள வீடும், 3 1/2 பரப்பு காணியும் விற்பனைக்குண்டு. (6099)

077 873 0129

# சூதாட்டம்; நால்வர் கைது

சூதாடிய குற்றச்சாட்டின் பேரில் 4 பேரை அம்பாறை, பாலமுனை முள்ளிக்குளத்து மலைக்கு அருகில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை கைதுசெய்ததுடன், அவர்களிடமிருந்து பணம், சிகரெட் உள்ளிட்டவற்றைக் கைப்பற்றியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இடத்தில் சிலர் சூதாடுவதாக தமக்கு தகவல் கிடைத்த நிலையில், அங்கு சென்று தேடுதல் நடத்திய போது, மேற்படி 4 பேரும் சூதாடிக் கொண்டிருந்தமை தெரியவந்தது.

இதனை அடுத்து 38, 40, 42, 55 வயதுகளையுடைய இச்சந்தேக நபர்களைத் தாம் கைதுசெய்ததாகவும் விசாரணையின் பின்னர் இவர்களை பொலிஸ் பிணையில் விடுவித்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர். (செ)

## மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்



திரு.சுப்பையா சண்முககுலகுமாரன்
(SLPS Diploma in Education, Med, குருபிரதீபா)



உடுவில் கல்விக் கோட்டத்தில் ஆசிரியராக - அதிபராக - கோட்டக் கல்வி அலுவலராக. பணியாற்றி 2016.10.03 இல் ஓய்வு பெறும் திரு.சுப்பையா சண்முககுலகுமாரன் அவர்கள் குடும்பத்துடன் வளமாக வாழ வாழ்த்துகிறோம்.

உடுவில் கல்விக்கோட்ட
அதிபர் சங்கம்

(C-5967)

# மரண அறிவித்தல்

## கௌரவ அன்ரனி ஜெகநாதன்

### (பிரதி அவைத் தலைவர் - வட மாகாணசபை)



முல்லைத்தீவை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற கோட்டக்கல்வி அதிகாரியும் வடக்கு மாகாணசபை முல்லை மாவட்ட உறுப்பினரும் வடமாகாண சபையின் பிரதி அவைத்தலைவருமாகிய கௌரவ அன்ரனி ஜெகநாதன் அவர்கள் நேற்று முன்தினம் (01.10.2016) அன்று காலமானார்.

அன்னார் முன்னைநாள் முல்லைத்தீவு பட்டின சபைத் தலைவர் மரியாம்பிள்ளை- திருமதி மேரி திரேசா ஆகியோரின் மூத்த புதல்வனும், காலம்சென்ற மேரி அமலோற்பவநாயகி அவர்களின் அன்புக் கணவரும், பீற்றர் இளஞ்செழியன், றெஜி இளஞ்சோழன், காலஞ்சென்ற கிறிஸ்டி இளஞ்சேந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மேரி ஆன் பிரான் ஸிஸ்கா (லீலா), அலோஷியஸ் நேசராஜா (குலசிங்கம்), மேரி பிறிம்ரோஸ் (புசி), அன்ரனிப்பிள்ளை (அன்ரன்), மேரி கொன்செப்ரா (பேபி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், செபமாலை செபமணி (லங்கநாதன்), மேரி ரோஸ் ஜசிந்தா (சின்னா), வின்சன் ஞானமணி, மேரி புளோரன்ஸ் (பபா), பூபாலசிங்கம், பெஞ்ஜமின் அருமைநாயகம், மேரி ராணி, சேவியர் குலநாயகம், விக்டர் தனிநாயகம், மேரி நிர்மலா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 06.10.2016 (வியாழக்கிழமை) முல்லைத்தீவில் இடம்பெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல் : குடும்பத்தினர்.

தொடர்புகளுக்கு :
மணற்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

077 756 6804 (லங்கநாதன்),
077 070 8578 (குலசிங்கம்),
077 665 2106 (அன்ரன்)

(சி-5966)

# சிங்கள பௌத்த தேசியவாதத்தை சரிவரப் புரிந்துகொள்ள வேண்டும்

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிப்பு



(கொழும்பு)

**சிங்கள, பௌத்த தேசிய வாதத்தையும் அவர்களுடைய இலக்குகளையும் நாங்கள் சரிவரப் புரிந்து கொள்ளாவிட்டால் எம் மக்களை முட்டாள்களாகவே வழிப்படுத்துவோம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.**

மூத்த அரசியல் ஆய்வாளர் மு.திருநாவுக்கரசுவின் "இலங்கை அரசியல் யாப்பு" நூல் வெளியீடும் ஆய்வரங்கமும் நேற்று முன்தினம் யாழ். சரஸ்வதி மண்டபத்தில் இடம் பெற்றது. இதில்கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்.

பூகோள அரசியல் தான் இலங்கையில் பல விடயங்களைத் தீர்மானிக்கின்றது. விசேடமாக இனப் பிரச்சினை தொடர்பாக பேசுகின்றவர்கள் பூகோள அரசியலை விளங்கிக் கொள்ளாமல் ஒரு போதும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது எனும் கருத்தை வரவேற்கிறேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வெளியேறித் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை உருவாக்கிய காலத்திலிருந்து நாங்கள் மேற்கண்ட விடயத்தைத் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம்.

சர்வதேச சட்டம் என்ற ஒன்று கிடையாது. சர்வதேச அரசியல் தான் இலங்கையில் நடைபெறும் விடயங்களைத் தீர்மானிக்கிறது என நான் தெளிவாகக் கூறியிருந்தேன். சர்வதேச அரசியலை நாங்கள் விளங்கிக் கொள்ளாமலிருந்தால் கிடைக்கிற சந்தர்ப்பங்களை நாங்கள் நழுவ விடுவோம். இந்த மக்களுக்கு நாம் மிகப் பெரிய துரோகத்தைச் செய்து விடுவோம் என்ற விடயத்தை அப்போதே தெரிவித்திருந்தேன்.

இலங்கைத் தீவு மிக முக்கியத்துவம் வாய்ந்ததொரு கேந்திர நிலையத்திலிருக்கிறது. இந்தத் தீவின் முக்கியத்துவம் எதிர்கால உலகத்தில் எந்தத் தரப்பு மிகவும் வலிமையான வல்லரசாக அமையும் என்ற விடயத்தைத் தீர்மானிக்குமளவுக்கு இந்த முக்கியத்துவம் அமைந்துள்ளது.

கடந்த காலங்களில் இலங்கையில் ஆட்சிக்கு வந்த அனைத்துத் தரப்புக்களும் மேற்குச் சார்ந்த தரப்புக்களாகவே இருந்து வந்தார்கள். மேற்குக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள்.

சிங்கள. பௌத்த தேசிய வாதத்தையும், அதனுடைய உண்மையான சிந்தனைகளையும் திட்டங்களையும் இலக்குகளையும் நாங்கள் சரிவரப் புரிந்து கொள்ளா விட்டால் முட்டாள்களாக இந்த மக்களை வழிப்படுத்துவோம்.

மேலும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு இந்தியாவிற்கோ, மேற்கிற்கோ, சீனாவிற்கோ அடிபணிவதற்குத் தயாராகவிருக்கவில்லை. அந்த வகையில் தமிழீழ விடுதலைப் புலிகளை அடிபணிய வைப்பதற்காகவே கடந்த காலப் போரை நடத்தினார்கள்.

பூகோளப் போட்டி நடைபெறுகின்ற ஒவ்வொரு காலகட்டத்திலும் தமிழருக்கு கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தமிழருக்காகப் பேரம்பேசும் ஒரேயொரு தரப்பாகவிருந்த நிலையில் முதற்கட்டமாக அந்த அமைப்பை அழிக்க வேண்டும்.

அந்த அமைப்பை அழிப்பதன் ஊடாக மக்களை அடிபணிய வைத்து அவர்களுக்கு பின்னாலிருக்கக் கூடிய அரசியல் தலைவர்களை எடுபிடிகளாகப் பாவிப்பதற்கானதொரு சந்தர்ப்பத்தை உருவாக்குவதற்குத் தான் அன்றைய காலகட்டத்தில் காய்கள் நகர்த்தப்பட்டன என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-9)

## அரசிற்கு எதிராக பிரசாரம் நடத்த ஜே.வி.பி.திட்டம்



அரச நிறுவனங்களை மறைமுகமாக தனியார் மயமாக்க முயற்சித்து வரும் அரசாங்கத்திற்கு எதிராக பெரிய பிரசாரம் ஒன்றை நடத்த ஜே.வி.பி. திட்டமிட்டு வருகின்றது.

இவ்வாறு அரச நிறுவனங்களை தனியார் மயமாக்கு வதால் அதிக ஆபத்து ஏற்படக் கூடிய வாய்ப்பு இருப்பதாக ஜே.வி.பியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

எனவே. இதற்கு எதிராக அரச நிறுவன ஊழியர்கள். தொழிற்சங்கங்கள் இணைந்து பெரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தனியார் மயமாக்க முயற்சித்து வரும் அரச நிறுவனங்களில் கொழும்பு துறைமுகம். கட்டுநாயக்க விமான நிலையம் கல்பிட்டி லகூன். அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலையில் உள்ள எண்ணெய் தாங்கி நிலையங்கள் ஆகியன உள்ளடங்குவதாகவும் இவ்வாறு தனியார் மயமாக்கினால் ஆபத்தை சந்திக்க நேரிடும் என திஸாநாயக்க எச்சரித்துள்ளார்.

மேலும் தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாகவே வருமானத்தை உயர்த்தும் நோக்கில் இவ் வாறு அரச நிறுவனங்களை தனியார் மயமாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக அவர் குற்றம் சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கோர விபத்து; இருவர் பலி!

பிங்கிரிய - தும்மலசூரிய வீதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற கோர விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர். கெப் ரக வாகனம் ஒன்று வேகத்தினை கட்டுப்படுத்த முடியாமல் இரண்டு மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டதிலே இந்த கோரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது பிங்கிரிய பிரதேசத்தினை சேர்ந்த 57 வயதுடைய நபரும் ஹொரகஸ்ஸார பிரதேசத்தினை சேர்ந்த 39 வயதுடைய நபரும் பலியாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்விபத்து தொடர்பாக பிங்கிரிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-7)

## பொலிஸார் மீது குண்டு வீச்சு

அதுருகிரிய பிரதேசத்தில் பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்த சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரை நோக்கி குண்டொன்றை வீசிவிட்டு தப்பிச்சென்றுள்ளார்.

குறித்த சந்தேகநபரை நேற்று பிற்பகல் கைது செய்ய முற்பட்ட போதே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதனையடுத்து. சந்தேக நபரை நோக்கி பொலிஸார் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

எனினும். சந்தேக நபர் காயங்களுக்குள்ளான நிலையில் தப்பிச்சென்றுவிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## கையூட்டல் மற்றும் மோசடி தொடர்பில் பாடசாலை மாணவர்களுக்கு விளக்கம்

இந்த மாதம் முழுவதும் கையூட்டல் மற்றும் மோசடி தொடர்பில் பாடசாலை மாணவர்களுக்கு விளக்கமளிக்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.

மேலும் பாடசாலை பாடவிதானங்களில் மோசடி தவிர்ப்பு தொடர்பான விடயங்களை இணைத்துக்கொள்ள எதிர்பார்த்திருப்பதாக அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார். (இ-7)

## நியூசிலாந்து முதலீட்டாளர்களை சந்தித்தார் பிரதமர்





(கொழும்பு)

நியூசிலாந்திற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அங்குள்ள முதலீட்டாளர்களை நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்து சமுத்திரத்தின் முக்கிய தளமாக அபிவிருத்தியடைந்து வரும் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவதாக பிரதமர் இதன் போது தெரிவித்தார்.

ஒக்லேண்ட் நகரில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது என பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயம், கடற்றொழில் மற்றும் சுற்றுலாத்துறை ஆகியவற்றில் நியூசிலாந்து முன்னெடுக்கும் புதிய யுக்திகளை இலங்கை பெற்றுக்கொள்ளும் வழிவகைகள் குறித்தும் இதன்போது ஆராயப்பட்டுள்ளதாக குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-7)

# 42ஆவது தேசிய விளையாட்டு விழா
# மேல் மாகாணம் சம்பியன்



42 ஆவது தேசிய விளையாட்டு விழாவில் மேல் மாகாண அணி சம்பியன் பட்டத்தை சுவீகரித்து கொண்டது.

மேல் மாகாணம் 113 தங்கம், 74 வெள்ளி, 67 வெண்கலப் பதக்கங்களை பெற்று முதலிடத்தையும் தென் மாகாணம் 33 தங்கம், 29 வெள்ளி, 43 வெண்கல பதக்கங்களைப் பெற்று 2ஆவது இடத்தையும் மத்திய மாகாணம் 28 தங்கம், 38 வெள்ளி, 41 வெண்கல பதக்கங்களைப் பெற்று 3 ஆவது இடத்தையும் பெற்றன.

தேசிய விளையாட்டு விழாவின இறுதி நாள் நிகழ்வுகள் நேற்றைய தினம் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கலந்து கொண்டிருந்ததோடு விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர, எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் உட்பட பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

42ஆவது தேசிய விளையாட்டு விழா கொண்டாட்டத்தின் ஆரம்ப நிகழ்வுகள். சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் ஆரம்பமாகியிருந்தன. தேசிய நல்லிணக்கத்துக்கு இந்த விளையாட்டு விழா ஒரு முக்கிய அம்சமாக இருக்கும் என விளையாட்டு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

முதல் தடவையாக வட மாகாணத்தில் இந்த போட்டிகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

**ஆடவர் பிரிவு**


**கோலூன்றி உயரம் தாண்டுதல்**

1.இஷாரா சந்தருவான் (மேல் மாகாணம்) 5.10 மீட்டர் (புதிய தேசிய சாதனை) 2.கே.கே. பாலசூரிய (வட மேல் மாகாணம்) 4.50 மீற்றர் 3.கே. கனதீபன் (வட மாகாணம்) 4.40 மீற்றர்.

**800 மீற்றர்**

1.இந்துனில் ஹேரத் (ஊவா மாகாணம்) 1:51.9 வினாடி, 2.A.D. குமார (மேல் மாகாணம்) 1:52.3 வினாடி, 3.குபுன் குஷாந்த (ஊவா மாகாணம்) 1:52.9 வினாடி

**குண்டெறிதல்**



1. சமித ஜெயவர்தன (வடமேல் மாகாணம்) 14.69 மீற்றர், 2. T.M. ஆசிக் (கிழக்கு மாகாணம்) 13.79 மீற்றர், 3.H.C. பெர்டினான்டெஸ் (மேல் மாகாணம்) 13.64 மீட்டர்

**4X100 மீட்டர்**

1.வடமேல் மாகாணம் 41.6 வினாடி 2. தென் மாகாணம் 41.7 வினாடி 3. சப்ரகமுவ மாகாணம் 42.2 வினாடி.


**நீளம் பாய்தல்**

1.மொஹமட் மிஃப்ரான் (கிழக்கு மாகாணம்) 7.72 மீற்றர் 2. K.M. குமார (வடமேல் மாகாணம்) 7.64 மீற்றர் 3. மடுக்க லியன பதிரான (மேல் மாகாணம்) 7.60 மீற்றர்.

**பெண்கள் பிரிவு**

**800 மீட்டர**

1. நிர்மலி லியனாராச்சி (சப்ரகமுவ மாகாணம்) 2:03.5 வினாடி (புதிய தேசிய சாதனை) 2. காயந்திகா அபேரத்ன (தென் மாகாணம்) 2:03.7 வினாடி 3. A.D. சந்தகாந்தி (தென் மாகாணம்) 2:08.4 வினாடி.




**வட்டெறிதல்**

1. ஆயிஷா மதுவந்தி (ஊவா மாகாணம்) 38.20 மீற்றர் 2. மதுரங்கி பெரேரா (மேல் மாகாணம்) 38.03 மீற்றர் 3. V.V. லக்மாலி (வடமத்திய மாகாணம்)

**ஈட்டி எறிதல்**


1. டில்ஹானி லேகமகே (சப்ரகமுவ மாகாணம்) 52.01 மீட்டர் 2. கௌசல்யா லக்மாலி (தென் மாகாணம்) 41.67 மீட்டர் 3. P.S. கிளரென்ஸ் (ஊவா மாகாணம்) 40.75 மீற்றர்.



**நீளம் பாய்தல்**

1.சாரங்கி சில்வா (மேல் மாகாணம்) 5.99 மீற்றர் 2.A.D. தனஞ்சனி (தென் மாகாணம்) 5.85 மீற்றா 3. அஞ்சனி புலவன்ச (மேல் மாகாணம்) 5.76 மீற்றர்.

**4X100 மீட்டர்**




1. மேல் மாகாணம் 48.0 வினாடி 2. தென் மாகாணம் 48.5 வினாடி 3. ஊவா மாகாணம் 49.5 வினாடி. (க)

# ரோஹித், ஹோலி, சஹாவின் பங்களிப்பால் வலுவான முன்னிலையுடன் மீண்டது இந்தியா

ரோகித், ஹோலி, சஹா கூட்டணியின் துடுப்பாட்டம் கைகொடுக்க, நியூஸிலாந்து அணிக்கு எதிரான கொல்கத்தா டெஸ்ட் போட்டியின் நேற்றைய 3ஆம் நாள் ஆட்டநேர நிறைவில் இந்திய அணி 2 விக்கெட்டுக்கள் கைவசமிருக்கும் நிலையில் 339 ஓட்டங்களால் வலுவான முன்னிலை பெற்றுள்ளது.

முன்னதாக தமது முதல் இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி புவ்னேஸ்வர் குமார், மொஹமட் சமியின் மிரட்டலான பந்துவீச்சில் சிக்கி 204 ஓட்டங்களுக்கு பரிதாபகரமாக ஆட்டமிழந்தது.

துடுப்பாட்டத்தில் நியூஸிலாந்து அணி சார்பில் தாக்குப்பிடித்து ஆடிய ஜீதன் பட்டேல் 47, அணித் தலைவர் ரோஸ் ரெய்லர் 36, லூக் ரோஞ்சி 35 ஓட்டங்களை அதிகபட்ச ஓட்டங்களாக எடுத்தனர்.

தொடர்ந்து 112 ஓட்டங்கள் முன்னிலையில் தமது 2ஆவது இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடியது இந்தியா.

**தவான், விஜய் மீண்டும் ஏமாற்றம்**

2ஆவது இன்னிங்ஸிலும் டிரெண்ட் போல்ட், மட் ஹென்றி ஆகியோர் தங்கள் வேகம் மற்றும் ஸ்விங் மூலம் தவான், விஜய்க்கு கடும் சிரமங்களைக் கொடுத்தனர், குறிப்பாக முரளி விஜயின் கால் நகர்த்தல்களில் சந்தேகத்தை ஏற்படுத்தினார் மட் ஹென்றி. விஜய் அடித்த முதல் பவுண்டரியே லேட் ஸ்விங்கில் மட்டையின் விளிம்பில் பட்டு கலி வழியாக அபாயகரமாக நான்கு ஓட்டத்துக்கு சென்றது.

போல்ட் பந்து ஒன்று உள்ளே வந்து சற்றே எதிர்பாராமல் எழும்ப தவான் கையில் அடிபட்டது. மருத்துவச் சிகிச்சைக்குப் பிறகு எதிர்கொண்ட அடுத்த பந்தே மீண்டும் உள்ளே வந்த சற்றே பவுன்ஸ் கூடுதலான பந்தை எம்பி தடுத்தாடிய தவானின் மட்டை உள் விளிம்பில் பட்டு பின் தொடையைத் தாக்கியது. மீண்டும் அதேபோன்ற பந்து உள்ளே புகுந்து போக விக்கெட் கீப்பர் கேட்சிற்காக ஒரு பெரிய முறையீடு எழுந்தது, ஆனால் பந்து மட்டையில் படவில்லை. தவான் தொடர்ந்து தடவு தடவென்று தடவினார்.

இந்நிலையில் 6ஆவது ஓவரை ஹென்றி வீச விஜயின் துன்பம் முடிவுக்கு வந்தது. மீண்டும் பந்து உள்ளே ஒரு கோணத்தில் வந்து சற்றே வெளியே லேட் ஸ்விங் ஆக விஜய் முன்னால் வந்து ஆட முயன்றார் அவ்வளவே, எட்ஜ் ஆகி 2ஆவது ஸ்லிப்பில் கப்திலிடம் சரணடைந்தது.

புஜாரா இறங்கி முதல் 2 ஹென்றி பந்துகளின் பவுன்ஸில் திணறிப்போய் விட்டார். இந் நிலையில்தான் தவான் போல்டை 2 பவுண்டரிகள் அடித்து நம்பிக்கை பெற்றார். இடையே புஜாரர் ஹென்றியின் உள்ளே வந்த பந்தை கால் காப்பில் வாங்க எல்.பி.ஆனார். ஆனால் இது ஐயத்துக்குரிய தீர்ப்பாகத் தெரிந்தது.



தவான் 17 ஓட்டங்கள் எடுத்த நிலையில் போல்ட் பந்து ஒன்று கூர்மையாக உள்ளே வர கால் நகர்த்தல்களை மறந்த தவான் கால்காப்பில் வாங்க எல்.பி.என்று தீர்ப்பளிக்கப்பட்டார். ரஹானே ஒரு ஓட்டத்துடன் ஹென்றியின் ஷோர்ட் பிட்ச் பந்தை புல் ஷொட் ஆட மட்டையில் பந்து சரியாக சிக்காமல் லெக் திசையில் பிடியாக வெளியேற இந்தியா 43/4 என்று ஆனது.

**ஹோலியின் மீட்பும் ரோஹித், சஹாவின் சதக் கூட்டணியும்**

இதற்கிடையே அணித் தலைவர் விராட் ஹோலி, ஹென்றியின் ஒரே ஓவரில் இரண்டு தன் பாணி கவர் டிரைவ் பவுண்டரிகளை அடித்து தனது ஓட்டக்கணக்கை தொடங்கினார். கோலி பாசிட்டிவாக ஆடி ஜீதன் படேலின் ஒரே ஓவரில் மீண்டும் தனது கவர் டிரைவ் பவுண்டரி ஒன்றையும் லெக் திசையில் சற்றே அதிர்ஷ்டகரமான பவுண்டரியையும் அடித்து 65 பந்துகளில் 7 பவுண்டரிகளுடன் 45 ஓட்டங்கள் எடுத்த நிலையில் போல்ட் பந்து ஒன்று ஷோர்ட் பிட்ச் ஆகி மிகவும் தாழ்வாக ஆட முடியாத அளவில் வர கோலி கால் காப்பில் வாங்கி எல்.பி.டபிள்யூ என்று தீர்ப்பளிக்கப்பட்டார், பந்து கால்காப்பில் பட்ட இடம் லேசாக ஓஃப் ஸ்டம்புக்கு வெளியே இருந்தது.

ஹோலி களமாடியபோது போல்ட்டும், ஹென்றியும் அளித்த நெருக்கடியை மற்றைய வீச்சாளர்கள் அளிக்கவில்லை. ரெய்லரின் தலைமைத்துவமும் அடிக்கடி மாற்றிய களவியூகமும் ஹோலிக்குச் சாதகமாக அமைந்தது. ரவிச்சந்திரன் அஸ்வின் 5 ஓட்டங்களில் சாண்ட்னரிடம் எல்.பி. டபிள்யூ ஆனார். இதில் சந்தேகம் எதுவும் இல்லை.

இதன்போது இந்தியா 6/106 என்ற இக்கட்டான நிலையிலிருந்தது. எனினும் இந்த பிடியை அதன்பின்னர் நியூஸிலாந்து தவறவிட்டது என்றே கூற வேண்டும்.

ரோஹித் சர்மா இறங்கியவுடனேயே முதலில் ஸ்லாக் ஸ்வீப் சிக்ஸ் அடித்துத் தொடங்கினார். ரோஹித் சர்மாவும் சஹாவும் இணைந்து 7ஆவது விக்கெட்டுக்காக பெறுமதி வாய்ந்த 103 ஓட்டங்களை எடுத்தனர். ரோஹித் சர்மா 9 பவுண்டரிகள் 2 சிக்ஸர்களுடன் 82 எடுத்த நிலையில் ரோஞ்சியிடம் பிடிகொடுத்து சாண்ட்னரிடம் வீழ்ந்தார். அதே ஓவரில் ஜடேஜா இறங்கி ஒரு அபாரமான சிக்ஸரை அடித்து அடுத்த ஸ்லாக்கில் நீஷமிடம் பிடிகொடுத்து இதே ஓவரிலேயே ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் நேற்றைய 3ஆவது நாளாட்டம் நிறைவுக்கு வந்தபோது இந்திய அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 227 ஓட்டங்களை எடுத்துள்ளது.

ஆட்டநேர முடிவில் சஹா 39, புவ்னேஷ்வர் குமார் ஒரு சிக்ஸருடன் 8 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளனர். போட்டியின் 4ஆவது நாள் ஆட்டம் இன்றாகும்.

# தமிழர் தம் அடையாளத்தை பாதுகாப்பதற்கே எழுக தமிழ் எழுச்சிப்பேரணியை நடத்தினார்கள்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் சுட்டிக்காட்டு


(யாழ்ப்பாணம்)

**தமிழர்கள் தமது அடையாளத்தை பாதுகாப்பதற்கே எழுக தமிழ் பேரணியை நடத்தினார்கள். இந்த பேரணி தொடர்பில் தெற்கில் இனவாத அமைப்புக்கள் வெளியிட்டு வரும் இனவாத கருத்துக்களுக்கு பதில் சொல்லாமல், பேரணிக்கும் தமக்கும் சம்பந்தமில்லை என தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் சென்றால் அது ஒட்டுமொத்த தமிழினத்துக்கும் இழைக்கும் துரோகமாகும் என தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

மு.திருநாவுக்கரசின் நூல் வெளியீட்டு நிகழ்வு நேற்று முன்தினம் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

இலங்கை தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை சர்வதேச அமைப்புக்கள். நாடுகள் கையாள்வதில் யதார்த்தம் இருக்கின்றது. அது இந்திய- இலங்கை ஒப்பந்தம் வந்த போது இந்தியா மேலதிகாரமாக தலையிட்டது. இதன் பிற்பாடு அமெரிக்கா, ஐக்கிய நாடுகள் சபை இலங்கையை கொண்டு சென்றது.



இதற்காக பல நாடுகளின் ஒப்புதல்களை பெற்றார்கள். இது மாத்திரமல்ல பத்து இலட்சத்திற்கு மேற்பட்ட புலம்பெயர் தமிழர்கள் மேற்கு நாடுகளில் உள்ளனர். கனடாவில் ஒரு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளார். இதேபோல் பிரித்தானியாவில் தேர்தல்களில் செல்வாக்கு செலுத்தும் அளவில் தமிழர்கள் இருக்கின்றனர்.

இந்த விடயம் காரணமாக தான் பொதுநலவாய மாநாடு நடைபெற்ற போது பிரித்தானிய பிரதமர் யாழ்ப்பாணம் வரவேண்டிய நிலை வந்தது. அல்லது இந்திய பிரதமர் இலங்கை வந்த போது யாழ்ப்பாணம் வருகை தரவேண்டிய நிலை வந்தது.

இவை எல்லாம் சாதாரணமான விடயங்கள் அல்ல.

இலங்கை சர்வதேச சக்திகளால் தங்களின் நலன் சார்ந்தே பாவிக்கப்படுகின்றது. இது புதிதான விடயம் அல்ல. ஐ.நா.அமர்வில் ஒரு தீர்மானம் இலங்கை மீது கொண்டுவரப்பட்டது. இதில் முதலாவது தீர்மானம் நீக்கப்பட்டு அல்லது முழுமையாக மாற்றி அமைக்கப்பட்டு. இரண்டாவது தீர்மானம் இலங்கைக்கு ஆதரவாக கொண்டுவரப்பட்டது.

ராஜபக்ஷவிற்கு எதிராக தீர்மானம் கொண்டுவர வேண்டும். அதற்கு போர்க்குற்றம் இனப்பிரச்சினை என்ற விடயம் கையாளப்பட்டு அதனூடாக ராஜபக்ஷ அரசிற்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது. இதற்கு சமாந்தரமாக ராஜபக்ஷ அரசினை கவிழ்க்கும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வந்தன. இதன் பின்னர் மேற்குலக சார்பு கொண்ட ஐக்கிய தேசிய கட்சி துணையுடன் ஆட்சிக்கு கொண்டு வரப்பட்டது.

ஆகவே சீனாவைகொண்டு வந்த அரசு நீக்கப்பட்டு மேற்குலக நலன் சார்ந்த அரசு இலங்கையில் ஏற்படுத்தப்பட்டது. இதன் பின்னர் புதிய அரசுக்கு எதிராக செயற்பட்டால் மீண்டும் ராஜபக்ஷ வந்துவிடுவார். அமெரிக்க நலன்களுக்கு பாதிப்பு ஏற்பட்டு விடும். அவர்களை பாதுகாக்க வேண்டும். இது தான் அவர்களது நோக்கம். இதற்குள் தமிழர்களுடைய பிரச்சினைகளை அவர்கள் பார்க்கவில்லை.

சர்வதேச விசாரணை ஒன்றின் மூலமே தமிழ்மக்கள் தீர்வை பெற்றுக்கொள்ள முடியும் என ஆரம்பத்தில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சர்வதேச நாடுகளுக்கு தெளிவாக கூறியிருந்தார். ஆனால் இறுதியில் அவருடைய வாயும் அடைக்கப்பட்டது. சர்வதேச விசாரணை இன்று இலங்கை அரசிடம் கையளிக்கப்பட்டுள்ளது. தற்போது இலங்கை அரசினால் கொண்டுவரப்படவுள்ள புதிய அரசியல் சாசனம் எவ்வாறானதொரு அரசியல் சாசனமாக இருக்க போகின்றது.

சமஷ்டி என்பது இன்று நேற்று அல்ல செல்வநாயகம் காலத்திலிருந்து பேசப்பட்டு வருகின்றது. மகிந்தவுடன் பதினெட்டு தடவைகள் பேசியுள்ளோம். தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் தமிழ் மக்களுடைய உரிமை. இறையாண்மை, இறைமை. சுய நிர்ணய உரிமை என்பன ஒவ்வொரு விடயங்களாக உள்ளன.

இவை எல்லாவற்றையும் இலங்கை ஏற்றுக் கொண்டு தான் எமது தரப்பு பேசுகின்றதா? என்பதற்கும் இங்கு மறுமொழி சொல்லப்படவில்லை.

இவை அனைத்தும் ஏற்றுக் கொள்ளப்பட்டு பேச்சுக்களில் ஈடுபட்டால் தமிழ் மக்களுக்கு அதிகாரப்பகிர்வை பெற்றுக்கொள்ள முடியும். ஆனால் இன்று சூழ்நிலை வேறு. வடக்கில் சிங்கள பௌத்த மேலாதிக்கம் தொடர்ந்து கொண்டே செல்கின்றது.

அதற்கு எதிராக தான் பேரணியும் இடம்பெற்றது. பொதுபல சேனாவின் மனோநிலையில் தான் ஜனாதிபதியும் பிரதமரும் இருக்கின்றார்கள்.அதனால் தான் இங்கு பௌத்த விகாரைகள் வந்து கொண்டு இருக்கின்றன. இலங்கை பல மொழிகள். இனங்கள் கொண்ட நாடு என ஜனாதிபதியும் பிரதமரும் ஏற்றுக்கொண்டு இருந்தால் வடக்கில் புத்தர் சிலைகள் வராது. அரசியல் சாசனம் என கூறிக்கொண்டு வடக்கில் பௌத்த மயமாக்கலை நடத்தி கொண்டு உள்ளன.

ஆகவே ,இவ்வாறான ஒரு சூழ்நிலையில் தமிழ் மக்கள் செய்ய வேண்டியது என்ன? என்பது ஆராயப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)




## இராசி பலன்

03.10.2016

(புரட்டாதி 17,திங்கட்கிழமை)

சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு
துதியை காலை 8.58 மணிவரை
சுவாதி பின்னிரவு 5.14 மணிவரை
சுபநேரம் 12.02-1.32 மணிவரை
இராகுகாலம் 7.32-9.02 மணிவரை
சர்வதேச மது ஒழிப்பு,
உயிரினங்கள் தினம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் | | |
| | ரேவதி | | ராகு |
| செவ் | சனி | சுக் சந் | சூரி, குரு புத |

**மீனம்** — ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், வேலையில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும்.

**மேடம்** — வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், உடல் நலன் சீராகும், குடும்ப மகிழ்ச்சியுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்திதரும்.

**இடபம்** — தொழில் சம்பந்தமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், விட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**மிதுனம்** — பிள்ளைகளின் கல்வி நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், உறவினர் வழியில் மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம்.

**கும்பம்** — அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், உறவினர்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம், பயணங்களால் பலனுண்டு, ஆன்றோர்களின் சந்திப்புண்டு.

**கடகம்** — புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், போசன சுகமுண்டு.

**மகரம்** — தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், ஆர்வத்துடன் தொழிலில் ஈடுபாடு காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**சிம்மம்** — சிந்திக்காமல் செய்த காரியங்களில்கூட சிறப்படைவீர்கள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**தனுசு** — தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், அரசியல்வாதிகளால் அனுகூலமுண்டு, பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** — பயணங்களால் மன உளைச்சல் ஏற்படலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், சயனசுகக் குறைவான நாள்.

**துலாம்** — புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, பயணத்தால் பலன் கிடைக்கும், சுப செலவுகள் அதிகரிக்கும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**கன்னி** — பணியாளர் தொல்லை அகலும், வார்த்தைகளால் பிறரைக் கவர்வீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள், திறமை மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.





விவசாயிகளுக்கான சலுகை மின்கட்டண தேசிய அங்குரார்ப்பண விழா நீர்வேலியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.மத்திய மின்சக்தி மற்றும் மீள்புத்தாக்க சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் மின்வலு மற்றும் மீள்புத்தாக்க சக்தி பிரதியமைச்சர் அஜித் பி.பெரேரா, வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே, வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், பாராளுமன்ற உறுப்பினர்கள் மாவை. சேனாதிராசா, ஈ.சரவணபவன், டக்ளஸ் தேவானந்தா, அங்கஜன் இராமநாதன், வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர். (படங்கள்: உ.சாளின்)

# பனை மரத்துடன் சென்றவருக்கு 5ஆயிரம் ரூபா அபராதம் விதிப்பு

(கரணவாய்)

அனுமதிப்பத்திரமின்றி பனை மரங்களை உழவு இயந்திரத்தில் எடுத்துச் சென்ற நபருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து பருத்தித்துறை மாவட்ட நீதிபதி பெருமாள் சிவகுமார் உத்தரவிட்டார்.

கரவெட்டிப் பகுதியில் வைத்து நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட அதே பகுதியைச் சேர்ந்த நபரைப் பொலிஸார் கடந்த 30 ஆம் திகதி பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தியபோது 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். (இ-60)

# டெங்கு நுளம்பு பரவும் சூழல்; ஐவருக்கு அபராதம் விதிப்பு

டெங்கு பரவும் சூழலை வைத்திருந்த ஐவருக்கு அபராதம் விதித்து பருத்தித்துறை மாவட்ட நீதிபதி பெருமாள் சிவகுமார் தீர்ப்பளித்தார்.

டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் சோதனை நடவடிக்கையின் போது அகப்பட்ட ஐவர் கடந்த 30ஆம் திகதி நீதிமன்றில் முற்படுத்தியபோது வழக்கின் தன்மையைப் பொறுத்து மூவருக்கு தலா ஆயிரம் ரூபா வீதமும் இருவருக்கு தலா 500 ரூபா வீதமும் அபராதம் விதித்தார் நீதிபதி. (இ-60)

# நோயாளர்கள் பெரும் சிரமம்

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச வைத்தியசாலையில் நோயாளர் கிளினிக்குகள் மேல் மாடியில் நடைபெறுவதனால் வயோதிபர்கள் பெரும் சிரமப்படுகின்றனர். கிளினிக்கிற்கு வரும் நோயாளர்களில் வயது முதிர்ந்தவர்களே அநேகமானவர்கள் உள்ளனர்.அவர்கள் கிளினிக்குகளிற்கு வரும் போது மேல் மாடியில் கிளினிக்குகள் நடைபெறுவதனால் மாடிப்படிகளில் ஏற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இவ்விடயத்தில் தலையிட்டு மேல் மாடியில் நடக்கும் கிளினிக்குகளை கீழ் தளத்திற்கு மாற்றுவதனூடாக வயோதிபர்கள் பெரும்நன்மை அடைவர் என சுட்டிக்காட்டப்படுகிறது. (இ-7)

# வடமாகாணத்தின் கல்வி வீழ்ச்சிக்கான காரணங்கள் தொடர்பாக ஆராயப்பட்டன



வடக்கு மாகாணத்தின் கல்வி வீழ்ச்சி தொடர்பாக அதற்கான காரணங்களை முன்வைத்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினர்களும், வடக்கு மாகாணத்தின் பிராந்திய செயலாளர்களும் அண்மையில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் வடமாகாண கல்வி அமைச்சு செயலாளர் இரா.ரவீந்திரன் .வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் சு.உதயகுமார் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடினர். மூன்று மணிநேரம் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் பல்வேறு விடயங்கள் எடுத்துரைக்கப்பட்டதோடு கல்வி வீழ்ச்சிக்கான காரணங்களும் ஆராயப்பட்டன.

கல்வி வீழ்ச்சிக்கான காரணத்தை தனியே அதிபர்கள், ஆசிரியர்கள் மீது சுமத்துவதை சங்கம் ஏற்றுக் கொள்ளாது என்றும் மாகாணத்தில் உள்ள பல்வேறு குறைபாடுகளே முழுக்காரணமும் என சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் எடுத்துரைத்தார்.

குறிப்பாக மாணவர்களிடையே பெருகிவரும் போதைப் பாவனை, கலாசாரப் பிறழ்வுகள் என்பன பற்றி விளக்கி வடக்கு மாகாணத்தில் நடைபெறும் முறையற்ற நியமனங்கள், பதவியுயர்வுகள் என்பனவும் காரணம் என விளக்கினார்.

அத்தோடு அதிபர்கள், ஆசிரியர்களின் நியமனங்களில் முறையற்ற தன்மைகள் நிலவுவதையும் அதனால் பலர் விரக்திநிலை அடைந்துள்ளதையும் சுட்டிக்காட்டினார்.

விசேடமாக அதிபர்கள், ஆசிரியர்களுக்கு வழங்கப்படவேண்டிய பதவி உயர்வுகள், சம்பள நிலுவைகள் இதுவரை வழங்கப்படாதிருப்பது பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது. அத்தோடு அதிகரித்துள்ள ஆசிரியர்களுக்கான செயலமர்வுகளால் தனியொரு ஆசிரியரின் ஆளுமை வெகுவாக பாதிக்கப்படுவதோடு மாணவர்களுக்கு முழுமையான கல்வி வழங்க முடியாதுள்ளதையும் சுட்டிக்காட்டினார்.

அதிகரித்துள்ள அரசியல் தலையீடுகள் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு மாணவர்களின் கல்வியில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன என்றும் அது எதிர்காலத்தில் எமது தமிழ் இனத்தின் கல்வியை கேள்விக்குறியாக்கும் எனவும் எடுத்துரைக்கப்பட்டது.

இவற்றுக்குப் பதிலளித்த வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இரா.இரவீந்திரன் கல்வியில் பாரிய பின்னடைவு ஏற்பட்டதனை ஏற்றுக்கொண்டதோடு..

ஆசிரியர்களின் பதவியுயர்வுகள் வலயங்களில் உள்ள குறைபாடுகளாலேயே சீர் செய்ய முடியாதுள்ளதாகவும் அவ்வாறு சீர்செய்யப்படாத ஆசிரியர்களின் பெயர் விபரங்கள் எம்மிடம் உள்ளன எனவும் அவர்களை உரிய ஆவணங்களை சமர்ப்பித்து கோவையைப் பூரணப்படுத்த அறிவுரை வழங்குமாறும் கேட்டுக்கொண்டார். ஆசிரியர்களுக்கு வழங்கவேண்டிய நிலுவைகளுக்கு போதிய பணம் இல்லையென்றும் அதற்கான நடவடிக்கைகளைத் தாம் எடுத்திருப்பதாகவும் கூறினார். மாகாணத்திற்கு வழங்கப்படுகின்ற நிதியில் வேதனம் உள்ளிட்டவற்றை வழங்குவதற்குக் கூட மிகவும் கடினமான நிலை உள்ளமையை கவலையுடன் வெளிப்படுத்தினார்.

அத்தோடு அதிபர்கள், ஆசிரியர்களின் கடமைப்பணிகளில் பாரிய மாற்றம் தேவையென்றும் புதிய உலகமயமாக்கலுக்கு ஏற்ப ஆசிரியர்கள் தம்மை தயார்படுத்த வேண்டும் எனவும், 21ஆம் நூற்றாண்டில் மாணவர்களின் எதிர்பார்ப்புகள் வித்தியாசமானவை எனவும் அவற்றைத் தகுந்த முறையில் நாம் நிறைவேற்ற வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இனிவரும் காலங்களில் வடமாகாணத்தின் கல்வி வளர்ச்சிக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் உறுதுணையாக இருக்கும் எனவும் அதற்காகப் பல பணிகளை சங்கம் முன்னெடுத்து வருவதனையும் சங்கத்தின் பத்திரிகைச் செயலாளர் சு.உதயகுமார் எடுத்துக் கூறினார்.

இக்கலந்துரையாடலில் சங்கத்தின் சார்பில் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன், சங்கத்தின் பெண்கள் விவகாரங்களுக்குப் பொறுப்பான ஆலோசகரும் சர்வதேசகல்விபகத்தின் பெண்கள் வலையமைப்பின் இலங்கைக்கான தலைவருமான திருமதி.ஈ.ஜெ.மகேந்திரா, நிதிச் செயலாளர் சி.தேவகுமார், பத்திரிகைச் செயலாளர் சு.உதயகுமார், பிரசார செயலாளர் ஏ.மடுத்தீன், துணைநிதிச் செயலாளர் க.தேவநேசன், யாழ்.மாவட்டச் செயலாளர் சொ.லோகேஸ்வரன், துணுக்காய் வலயச் செயலாளர் ரி.ஜெ.ஜேசுதானந்தர், யாழ்.வலயச் செயலாளர் சி.கணேசலிங்கம், நல்லூர் கோட்ட செயலாளர் செ.சிவபாலசுந்தர், வலிகாமம் வலயச்செயலாளர் பா.மகாலிங்கசிவம், வடமராட்சி வலயச் செயலாளர் கி.இந்திரன், கிளிநொச்சி வலயச் செயலாளர் ஜெ.நிசாகர், தீவக வலயச் செயலாளர் ரி.தயாபரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-7)

# மலரும் இஸ்லாமியப் புதுவருடம்


(ஹிஜ்ரி 1437-1438)

உலக முஸ்லிம்களின் ஹிஜ்ரி ஐ பூர்த்தி செய்து கொண்டு ஹிஜ்ரி 1438 ஆம் ஆண்டுக்குள் பிரவேசிக்க ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறார்கள்.பிறக்க இருக்கும் இஸ்லாமியப் புது வருடம் இலங்கையில் 03.10.2016 அன்று எதிர்கொள்ளப்பட இருக்கிறது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு நபித்துவம்(நுபுவத்) கிடைத்த பின் 13வருடங்கள் மக்காவிலேயே இஸ்லாமியப் பணிகளில் ஈடுபட்டார்கள். இங்கு பல துன்பங்களைத் தாங்கி பின் அல்லாஹ்வின் கட்டளைப்படி மதீனா நோக்கி தூய இஸ்லாத்தை எடுத்துச் சென்ற "ஹிஜ்ரத் நிகழ்வு, இஸ்லாமிய வரலாற்றில் மாபெரும் திருப்பு முனையாக அமைந்தது. இந் நிகழ்வில் இருந்தே இஸ்லாமிய வருடம் கணிக்கப்படுகிறது.

இஸ்லாம் தனித்துவம் மிக்க மார்க்கமாகும். அவ்வாறே இஸ்லாமிய வருடக் கணிப்பும் தனித்துவத்துடன் காணப்படுகிறது. சூரிய சுழற்சியை அடிப்படையாகக்கொண்டே தமிழ், சிங்கள, ஆங்கில வருடங்கள் கணிக்கப்படுகின்றன. சந்திர சுழற்சியை அடிப்படையாகக் கொண்டே இஸ்லாமிய வருடம் கணிக்கப்படுகிறது.

எமது தாய் நாடு இலங்கையில் முஸ்லிம்களாகிய நாம், எமது கடந்து போகும் ஹிஜ்ரி



வருட அனுபவங்களை மீட்டிப் பார்த்து, பெற்ற உயர்வுகளை மதித்து, பட்ட காயங்களை மறந்து-ஏனைய சமூகங்களுடன் இஸ்லாம் கூறும் சகோதரத்துவம் பேணி பரஸ்பர புரிந்துணர்வுடன் ஒற்றுமை பேணி வாழ்வோமாக.

எல்லாம் வல்ல இறைவனே! பிறக்கும் இந்த புத்தாண்டில் உனது படைப்பான உலக மக்கள் குறிப்பாக இலங்கை மக்கள் கடந்த காலப் பயங்கரங்களையும் இழப்புக்களையும் விட்டுத் தம் சொந்தக்காலில் எழுந்து நிற்க ஆவன செய்வாயாக.நீ எமக்கு வாக்களித்தபடி உன்னை மன்றாடி நிற்கும் எமது பாவங்களை மன்னித்து அமைதியடையச்செய்வாயாக. இதுவே இப் புது வருடத்தில் உன்னிடம் இலங்கை வாழ் முஸ்லிம்களின் பிரதான பிரார்த்தனையுமாகும். இதற்காகவே இப் புத்தாண்டில் எம் இருகரங்கள் ஏந்தி உன் முன் நிற்கிறோம்.

அல்ஹாஜ். மௌலவி. ஏ.எ ம்.அஸீஸ்
யாழ்.கிளிநொச்சி மாவட்ட உலமா சபை
சர்வமதத்தலைவர்



# சீரடி சாயி மந்திரின் 8வது வருட பிரம்மோற்ஷவம் 2016

அன்பான அடியார்களே!

கொடியேற்றம் –03.10.2016 (மாலை 5 மணிக்கு)

❖ விஜயதசமி (சமாதி தினம்) –11.10.2016 (மாலை 2 மணி முதல் ஆரம்பமாகும்

வேட்டைத்திருவிழா –12.10.2016 (மாலை 5.30 மணிக்கு)
(றக்கா வீதி எழும் விநாயகர் ஆலயத்தில் இடம்பெறும்)
சப்பைரதத்திருவிழா–13.10.2016 (மாலை 6 மணிக்கு)

✦ தேர்த்திருவிழா (14.10.2016)
மாலை 4.30 மணிக்கு–வசந்தமண்டப பூசை
மாலை 5.00 மணிக்கு–தேரோட்டம்

✦ தீர்த்தத்திருவிழா –(15.10.2016) மாலை 4 மணிக்கு

✦ வெண்டிதோட்ட உற்சவம் – (16.10.2016) மாலை 5 மணிக்கு

✦ பைரவர் மடை (17.10.2016) மாலை 6 மணிக்கு

314, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
077 722 2568

(6006)

ஆலயத்தினர்


## நவராத்திரி பாமாலை

வீரத்துக்கு இன்று மூன்றாம் நாள்



### வீரத்தின் இருப்பிடமே

வீரத்தின் இருப்பிடமே
வீரசிங்கத்தில் அமர்ந்தவளே
உள்ளத்தில் குடிகொண்டவளே
உலகத்தை ஆள்பவளே!

அழகின் திருவுருவ மானவளே
அன்பு மழைதனைப் பொழிபவளே
நற்குணங்களின் இருப்பிடமானவளே
நாள் தோறும் உன்னை வணங்கிடுவேனே!

ச.கஜுசிகா,
கல்வியங்காடு.

# டொலரின் பெறுமதி மீண்டும் அதிகரிப்பு

## தள்ளாடும் ரூபாவின் பெறுமதி

(கொழும்பு)

ரூபாவை ஒப்பிடும் போது டொலரின் பெறுமதி கடந்த நாட்களில் மீண்டும் அதிகரித்துள்ளது. நேற்றுமுன்தினம் வரையில் டொரின் கொள்முதல் விலை 144 ரூபாய் 66 சதமாக பதிவாகியுள்ளது. டொலரின் விற்பனை விலை 148 ரூபாய் 46 சதமாக பதிவாகியிருந்தது.

நாட்டில் காணப்படுகின்ற பொருளாதார நிலைமை மற்றும் மத்திய வங்கியின் செயற்பாடு இதற்கு காரணமாக அமைந்துள்ளதாக பொருளாதார ஆய்வாளர் அசந்த சிறிமான தெரிவித்துள்ளார்.


ரூபா பலவீனமடைந்தால் இலங்கையின் ஏற்றுமதி அதிகரிக்கும் என தோன்றுகின்றதென அவர் தெரிவித்தார். எனினும் அது தற்காலிக நிலைமையாகும்.

இதனால் மக்களின் ஊதியங்களின் உண்மையான மதிப்பு இல்லாமல் போகும். அதன்பின்னர் பணவீக்கம் அதிகரிக்கும். அதனை தொடர்ந்து மக்கள் அதிக சம்பளம் கோரி மீண்டும் இறங்கும் நிலைமை ஏற்படும் என கூறியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் வழங்கியுள்ள இலக்கை அடைய முற்படும் போதும் இவ்வாறான நிலைமைகள் ஏற்படும் என பொருளாதார ஆய்வாளர் அசந்த சிறிமான மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# 1500 நாள் பொருளாதாரத் திட்டத்தை பிரதமர் ரணில் முன்வைக்கவுள்ளார்

## மத்திய வங்கி ஆளுநர் தகவல்



(கொழும்பு)

1500 நாள் பொருளாதாரத் திட்டமொன்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்வைக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் நாட்களில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த பொருளாதாரத் திட்டத்தை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ளார்.

நாட்டின் அபிவிருத்தியை முன்னிலைப்படுத்தி இந்த திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.

இந்த திட்டத்தின் அடிப்படையில் அரசாங்கம் எதிர்கால பொருளாதார கொள்கைகளை எவ்வாறு அமுல்படுத்தும் என்பது பற்றி தெளிவுபடுத்தவுள்ளது.

கடந்த காலங்களில் அரசாங்கம் பல்வேறு சாதகமான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார். (இ-7)


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984இந்து<br>நட்சத்திரம்:திருவோணம்<br>கி.பா:6.25 உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:Civil Engineer<br>எதிர்பார்ப்பு:சைவபோசனம்<br>தொ.இ: B/5178 | பிறப்பு: 1977இந்து<br>நட்சத்திரம்:மகம் 2<br>கி.பா: 54.25<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு:உத்தியோகம் அல்லது சொந்ததொழில்<br>தொ.இ: G/2195 |
| பிறப்பு: 1988இந்து<br>நட்சத்திரம்:மூலம்<br>கி.பா: 43<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:U.K (NotPR) A/L<br>தொ.இ: B/5179 | பிறப்பு: 1985இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 3<br>கி.பா: 41<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:A/Lகணனி இயக்குநர்<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/2197 |
| பிறப்பு: 1980இந்து<br>நட்சத்திரம்:பூசம் 3<br>கி.பா: 29<br>உயரம்:173 cm<br>தகைமை/தொழில்:டென்மார்க் (PR)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு/உள்நாடு (வெளிநாடு கூடிய விருப்பம்)<br>தொ.இ: B/5180 | பிறப்பு: 1970இந்து<br>நட்சத்திரம்:பூசம் 2<br>கி.பா: 38<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு: வியாபாரம்<br>தொ.இ: G/2198 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 3<br>கி.பா: 68<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:UK(NOT PR) MSc Following<br>தொ.இ: B/5182 | பிறப்பு: 1986இந்து<br>நட்சத்திரம்:பூரம் 1<br>கி.பா: 34.75 செவ் 8 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:A/L (G/A/Q)<br>எதிர்பார்ப்பு: சுயதொழில்<br>தொ.இ: G/2201 |

# கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005,021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதையும் அறியத்தருகின்றோம்)



லண்டன் ஓம் சரவணபகவா சேவா அறக்கட்டளை நிதியத்தினால் முல்லைத்தீவு மாவட்ட அமரா குடும்பத்தலைமை தாங்கும் பெண்களின் ஒன்றியத்தின் பயனாளிகளுக்கு 10 இலட்சம் ரூபா பெறுமதியான 37 துவிச்சக்கரவண்டிகள், 118 குடும்பங்களுக்கு உடு புடைவைகள் ,108 குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள் என்பனஅன்பளிப்பாக வழங்கப்பட்டன. (படம்:-மல்லாவி செய்தியாளர்)

# ஒட்டுசுட்டான் பகுதியில் 45 விவசாயக் குளங்கள் புனரமைக்காமையால் நீரைத் தேக்க முடியவில்லை

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் சேதமடைந்த நிலையில் காணப்படும் 45 குளங்கள் புனரமைக்கப்படாமல் காணப்படுவதாகவும் இதனை புனரமைத்துத் தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஒட்டுசுட்டான் பிரதேச மக்களுடன் சந்திப்பை மேற்கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சாந்தி சிறிஸ்கந்தராஜா, சாள்ஸ் நிர்மலநாதன்,சிவஞானம் சிறிதரன் ஆகியோரிடம் குறித்த கோரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் 27 கிராம அலுவலர் பிரிவுகளையும் 114 கிராமங்களையும் கொண்டு காணப்படும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 45 வரையான சிறிய விவசாயக்குளங்கள் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றன.

இவ்வாறு காணப்படும் குளங்களை புனரமைத்து தருமாறும் இந்தக்குளங்களை புனரமைத்துக் கொள்வதன் மூலம் இதன் கீழ் உள்ள பயிர்ச் செய்கை நிலங்களில் பயிர்ச் செய்கைகளை மேற்கொண்டு தமது வாழ்வாதாரத்தை கொண்டு நடத்த முடியும் என கோரிக்கை விடுத்துள்ள இப்பகுதி மக்கள் இக்குளங்களின் கீழ் உள்ள குறைந்தளவு நிலப்பரப்புக்களில் தற்போது பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதும் காலபோகத்தில் மட்டும் இச் செய்கையை மேற்கொள்ளமுடியும் குளங்களில் தண்ணீரை தேக்கமுடியாத நிலையில் மழையை நம்பியே செய்கைகளை மேற்கொள்ள முடியும். எனவே தமது வாழ்வாதாரத்தை கருத்திற்கொண்டு குளங்களைப் புனரமைத்து தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-15)

# பொலிஸாரின் அட்டகாசம் குறித்து அறிவிக்க தொலைபேசி இலக்கம்

பொது மக்களின் நலன் கருதி பொலிஸ் அதிகாரிகளின் செயற்பாடுகளின் நடத்தை தொடர்பில் அறிவிக்க புதிய தொலைபேசி இலக்கம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் அட்டகாசம் தொடர்பில் 24 மணிநேரம் இயங்கும் 071-036 1010 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிவிக்குமாறு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளர் என்.ஆரியதாச பொதுமக்களிடம் வேண்டுகோள் முன்வைத்துள்ளார்.

மேலும் பொதுமக்களுக்கு பொலிஸ் அதிகாரிகளால் ஏற்படும் பிரச்சினை குறித்து கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப சூழலில் இருக்கும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் பிரதான அலுவலகத்தில் முறைப்பாட்டை முன்வைக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முறை 8 மாகாணங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாகவும், அங்குள்ள அலுவலகங்களில் இந்த முறைப்பாடுகளை தெரிவிக்க முடியும் எனவும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளர் என். ஆரியதாச மேலும் தெரிவித்துள்ளார். (2)




# பயனுள்ள கூட்டமாக மாற்றியமைத்து தீர்வைப் பெறும் களமாக மாற்றுங்கள்

வவுனியா பிரதேச சிவில் பாதுகாப்புகுழு கூட்டங்கள் பயனற்றுப்போவதாக சமூக ஆர்வலர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

வவுனியா பிரதேச செயலகத்தில் ஒவ்வொரு மாதமும் இறுதி வெள்ளிக்கிழமைகளில் சிவில் பாதுகாப்புகுழு கூட்டம் இடம்பெற்று வருகின்றது. ஆரம்ப நாட்களில் பயனுள்ள செயற்பாடுகளை இதனூடாக முன்னெடுக்க கூடியதாக இருந்தது. குறிப்பாக பிரதேச செயலாளர், நகரசபை செயலாளர், பொலிஸ் உயரதிகாரிகள் என பலரும் இதில் கலந்துகொள்வதனால் பல சமூக விடயங்கள் தொடர்பாக தீர்வுகள் காணப்பட்டு வந்தன.

எனினும் தற்போது இக் கூட்டங்களில் உயரதிகாரிகள் எவரும் பங்கேற்காமையினால் பயனற்ற கூட்டமாக இது மாறியுள்ளதுடன் பலர் வேலைப்பளுக்களுக்கு மத்தியில் சமுகமளிக்கவேண்டியேற்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே சிவில் பாதுகாப்பு குழு கூட்டத்தை பயனுள்ள கூட்டமாக மாற்றி பிரச்சினைகளுக்கு தீர்வை பெறக்கூடிய களமாக மாற்றவேண்டும் எனவும் அவர்கள் கோருகின்றனர். (2-250)

# மூத்த ஓய்வூதியர்கள் நன்மதிப்பு நிகழ்வு

கிளிநொச்சி மாவட்ட அரச சேவை மூத்த ஓய்வூதியர்கள் நன்மதிப்பு நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி டிப்போச் சந்திக்கு அருகாமையிலுள்ள கூட்டுறவு மண்டபத்தில் கிளி.மாட்ட அ.சே.ஓ.ஊ.ந.நிதியத்தலைவர் அ.கனகரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது. முதன்மை விருந்தினராக கிளி. மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம், சிறப்பு விருந்தினர்களாக கிளி.மாவட்ட மேலதிகச் செயலர் சி.சத்தியசீலன், உதவி மாவட்டச்செயலர் த.பிருந்தாகரன், திட்டப் பணிப்பாளர் ச.மோகனபவன், பிரதம கணக்காளர் ஜே.கில்பேட்குணம், கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன், கண்டாவளை பிரதேச செயலர் த.முகுந்தன், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் திருமதி.ஜெ.பரமோதயன், பூநகரி பிரதேச செயலர் ச.கிருஸ்ணேந்திரன் ஆகியோர்கலந்து சிறப்பிக்கவுள்ளனர். கௌரவ விருந்தினர்களாக முன்னாள் மாவட்டச் செயலர் தி.இராசநாயகம், உதவித்தலைவர் எஸ்.சுப்பிரமணியம், அம்பாறை முன்னாள் வலயக் கல்விப் பணிப் பாளர் எஸ்.செல்லத்துரை ஆகியோரும பங்குபற்றவுள்ளனர். (2-5-254)

## தேராங்கண்டல் குள கமக்கார அமைப்பிற்குட்பட்ட

# காலபோக நெற்செய்கையை மேற்கொள்ளவுள்ள 257 விவசாயிகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டன

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் சமூக மட்ட வாழ்வாதார உதவித்திட்டத்தின் கீழ் 30 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் துணுக்காய் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட தேராங்கண்டல் குள கமக்கார அமைப்புக்குட்பட்ட 257 விவசாயிகளுக்கு 2016-2017ஆம் ஆண்டு கால போக நெற்செய்கையை மேற்கொள்வதற்கான விதை நெல் மற்றும் தரை பண்படுத்தல் என்பனவற்றுக்கான உதவிகள் வழங்கும் நிகழ்வு கடந்த 29ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தேராங்கண்டல் கிராம சேவையாளர் எஸ்.சண்முக நாதன் தலைமையில் நடைபெற்றது.

இது தொடர்பில் தெரியவருவதாவது, பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கியுள்ள தேராங்கண்டல் கிராம மக்களின் வாழ்வாதாரத்தை வளப்படுத்தும் நோக்குடன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் சமூக மட்ட வாழ்வாதார உதவித்திட்டத்தின் கீழ் 257 விவசாயிகளுக்கு தலா 3 புசல் நெல் வீதம் மொத்தம் 771 புசல் நெல் 18 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 257 விவசாயிகளுக்கும் தரை பண்படுத்தலுக்காக தலா 5ஆயிரத்து 500 ரூபா வீதம் மொத்தம் 11 இலட்சம் ரூபா வழங்கப்படவுள்ளது.

மேலும் விவசாயிகளின் நலன்கருதி ஒரு இலட்சம் ரூபா பணப்பெறுமதியில் ஆறு மருந்து தெளி கருவிகள் தேராங்கண்டல் கமக்கார அமைப்பினிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மற்றொரு வேலைத்திட்டமான நீர் மற்றும் பாதுகாப்பு பிரிவு வேலைத் திட்டத்தின் கீழ் தேராங்கண்டல்குளம், கரம்பைக்குளம் ஆகியவற்றின் பிரதான நீர் விநியோக கால்வாய்கள் உட்பட கிளை வாய்க்கால்கள் என்பனவற்றுக்கான புனரமைப்பு 35 இலட்சம் ரூபா செலவில் மேற்கொள்வதற்கான திட்ட வரைபு ஒன்றும் தயாரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிகழ்வின் போது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி ,துணுக்காய் பிரதேச செயலாளர் இ பிரதாபன் ஆகியோர் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு விவசாயிகளுக்கான உள்ளீடுகளை வழங்கி வைத்துள்ளனர்.

நிகழ்வில் துணுக்காய் கமநல சேவை நிலைய கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர், துணுக்காய் பிரதேச திட்டமிடல் பணிப்பாளர், கமக்கார அமைப்பின் பிரதிநிதிகள், விவசாயிகள் எனப் பல தரப்பினர் கலந்து கொண்டிருந்தனர். (2-15)






பாக்கியம் அறக்கட்டளை நிறுவனத்தின் அனுசரணையில் ஓமந்தை கிராமசேவையாளர் திருமதி எஸ். அனுசியாவின் ஒழுங்கமைப்பில் ஓமந்தை பொது நோக்கு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சர்வதேச முதியோர் தின நிகழ்வைப் படங்களில் காணலாம்.(படங்கள்:- பனிக்கன்குளம் செய்தியாளர்)

# ஏழு கிராமங்களுக்கு நிரந்தரமாக கிராம அலுவலர்கள் நியமிக்கப்படவில்லை

## பிரதேச செயலக ஆளணி வெற்றிடத்தையும் நிரப்புமாறு மக்கள் கோரிக்கை

துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவில் 7 கிராமங்களுக்கு நிரந்தரமாக கிராம அலுவலர்கள் நியமிக்கப்படாதுள்ளதுடன் பிரதேச செயலகத்தில் நிரந்தரமாக சமூக சேவைகள் உத்தியோகத்தர், சன சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் உட்பட திடீர் மரண விசாரணை அதிகாரியும் நியமிக்கப்படாதிருப்பதால் கிராம மக்களின் அடிப்படைத் தேவைகள் தொடக்கம் பொது சன உதவித்திட்டங்கள் வரையான உதவிகளைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொண்டு வருவதாக மேற்படி பிரதேச மக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவானது 326.6 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக்கொண்டுள்ளதுடன் இங்குள்ள 20 கிராம அலுவலர் பிரிவுகளிலும் மக்களின் இடப்பெயர்வின் பின்னர் மீள்குடியேற்றத்தின்போது 3 ஆயிரத்து 748 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 790 அங்கத்தவர்கள் மீள்குடியேறி வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் மக்கள் மீள்குடியேறி 7 வருடங்களைக் கடந்த நிலையிலும் பொதுப்போக்குவரத்து வசதிகள், ஏனைய போக்குவரத்து வசதிகள் என்பன எதுவும் இன்றி இருக்கும் ஐயங்கன்குளம், பழைய முறிகண்டி, அமைதிபுரம், தென்னியன்குளம், உயிலங்குளம் உட்பட யோகபுரம், யோகபுரம் மத்தி ஆகிய 7 பிரிவுகளுக்கும் நிரந்தரமாக கிராம அலுவலர்கள் நியமிக்கப்படவில்லை. இக்கிராம மக்களின் தலைமைகளை அயல் கிராமங்களில் கடமையாற்றும் கிராம அலுவலர், தமது கிராமங்களின் வேலைப்பளுவிற்கு மத்தியிலும் பதில் கடமையாற்றி வருகின்றனர்.

பதில் கிராம அலுவலர் தமது கிராமங்களுக்கு வருகை தராத நாட்களில் தமது தேவைகளுக்காக அவரைத் தேடி பல மைல் தூரம் வரை நடந்து சென்று தேவைகளை நிறைவேற்ற வேண்டிய நிலை காணப்படுகின்றது.


இதேபோல் பிரதேச செயலகத்திலும் மேற்கூறப்பட்ட ஆளணிகளுக்கான கடமைகளை அங்கு கடமையாற்றுகின்ற ஏனைய முகாமைத்துவ உதவியாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தமது வேலைப்பளுவின் மத்தியிலும் பிரதேச மக்களின் நலன் கருதி கடமையாற்றி வருகின்றனர்.

எனவே முல்லைத்தீவு மாவட்டத்தில் பின்தங்கிய பிரதேசங்களான மேற்படி பிரதேச செயலகத்திற்குரிய கிராமங்களுக்கான நிரந்தர கிராம அலுவலர்களை நியமித்து தருவதுடன் பிரதேச செயலகத்தில் காணப்படும் ஆளணி வெற்றிடத்தையும் நிரப்பித்தர வேண்டுமென பாதிக்கப்பட்டுள்ள பிரதேச மக்கள் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-15)




# பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு தெரிவான 700 பேருக்கு காணி ஆவணங்கள்

## வழங்கி வைத்தார் வடக்கு மாகாண முதலமைச்சர்



கிளிநொச்சி கரைச்சியில் 700 பேருக்கு காணி ஆவணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவுக்குள் அடங்கும் பல கிராமங்களைச் சேர்ந்த 700 பேருக்கு காணி ஆவணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வடக்கு மாகாண சபையும், கிளிநொச்சி மாவட்டச் செயலகமும் இணைந்து நடத்திய குறை நிவர்த்தி நடமாடும் சேவையின் நிகழ்வின் போதே இந்த காணி ஆவணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே காணிக்கச்சேரிகள் நடத்தப்பட்டு பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இந்த நிகழ்வில் வைத்து காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதனை உத்தியோக பூர்வமாக வடக்கு மாகாண முதலமைச்சர் வழங்கி வைத்துள்ளார். (2-281)





வடக்கு மாகாணசபை, கிளிநொச்சி மாவட்ட செயலகம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த குறைநிவர்த்தி நடமாடும் சேவை நேற்று முன்தினம் காலை 9மணியளவில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந் நிகழ்விற்கு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்தார்.
(படங்கள்: மல்லாவிச் செய்தியாளர்)

# வவுனியா ஆர்ப்பாட்டத்திற்கு இ.போ.சபை பேருந்துகளை பயன்படுத்திய பொதுபல சேனா

வடக்கு மாகாண முதலமைச்சருக்கு எதிராக வவுனியாவில் கடந்த 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை பொதுபல சேனாவின் ஏற்பாட்டில் நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியின் பேரணிக்கு இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்துகள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

போராட்டத்தில் மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் குடியேற்றம் செய்யப்பட்ட கலாபோபஸ்வேவ பகுதியில் குடியிருக்கும் சிங்கள மக்களே கலந்து கொண்டனர். வவுனியாவின் ஏனைய பகுதிகளில் வசிக்கும் சிங்கள மக்கள் இதில் கலந்து கொள்ளவில்லை. இந்நிலையில் இவ் ஆர்ப்பாட்ட பேரணிக்கு மக்களை ஏற்றி இறக்குவதற்கு இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்துகளே பயன்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு ஆர்ப்பாட்டம் முடிந்ததும் வீதியோரத்தில் ஆட்டோ ஒன்றில் இருந்து மதுபானப் போத்தல்களும், பணமும் வழங்கப்பட்டதாகவும் அவற்றை கொடுத்தே குறித்த மக்களை வரவழைத்துள்ளதாகவும் சம்பவத்தை நேரில் அவதானித்தவர்கள் தெரிவித்துள்ளனர். (2-250)



முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மருதமடு கைவேலி காந்தன் முன்பள்ளியில் நேற்று முன்தினம் சிறுவர் தின நிகழ்வு நடைபெற்றபோது...(படம்: பனிக்கன்குளம் செய்தியாளர்)

# வாவெட்டிப் பகுதியில் சட்டவிரோதமான கருங்கல் அகழ்வால் கட்டடங்கள் பாதிப்பு

## நிறுத்துமாறு தெரிவிக்கப்பட்ட போதிலும் கல் அகழ்வு தொடர்கின்றது

முல்லைத்தீவு ஒட்டு சுட்டான் வாவெட்டிப்பகுதியில் சட்டவிரோத கருங்கல் அகழ்வினால் இதனைச் சூழவுள்ள பகுதியில் உள்ள வீடுகள், கட்டடங்கள் என்பன வெடிப்புக்குள்ளாகி வருவதாகவும் குடிநீர்ப் பற்றாக் குறையும் நிலவி வருவதாகவும் இப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

முல்லைத்தீவு ஒட்டு சுட்டான் பிரதேசத்தில் ஒட்டு சுட்டான், சின்னசாளம்பன், சம்பளங்குளம், சிவநகர் ஆகிய பகுதிகளுக்கு அருகிலுள்ள வாவெட்டிப்பகுதியில் என்றுமில்லாதவாறு கருங்கல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது. இதனால் இதனைச் சூழவுள்ள மேற்படி பகுதிகள் பாதிக்கப்படுகின்றன.

குறிப்பாக கருங்கல் அகழ்வுகள் வெடி மருந்துகள் பாவித்து கல்லுடைக்கப்படுவதனாலும் கனரக வாகனங்களினால் அகழ்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதனால் எழும் தூசிப்படலத்தால் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

இதேவேளை அயலில் உள்ள வீடுகள், கட்டடங்கள் வெடிப்புக்களுக்கு உள்ளாகி வருகின்றன. அத்துடன் நிலத்தடி நீரின் அளவு குறைந்து குடிநீருக்கும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. இதனை விட வாவெட்டிப்பகுதியில் இந்து ஆலயம் ஒன்றுள்ளது. இது ஒட்டுசுட்டான் சிவாலயத்துடன் தொடர்புபட்ட ஆலயமாகவும் காணப்படுகின்றது. இதுவும் கல் அகழ்வு காரணமாக பாதிக்கப்பட்டுள்ளது என்றும் இப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக கடந்த 26ஆம் திகதி ஒட்டுசுட்டான் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் குறித்த விடயம் தொடர்பாக ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத் தலைவர்களின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதையடுத்து இதனை உடனடியாக நிறுத்துமாறு தெரிவித்த போதும் தொடர்ந்தும் கல் அகழ்வு இடம்பெறுவதாகவும் இப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (2-15).

# பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கான கடைகள் விரைவில் நிர்மாணிக்கப்பட்டு வழங்கப்படும்

## கரைச்சி பிரதேச செயலாளர் தெரிவிப்பு

(பரந்தன்)

எதிர்வரும் மாதங்களில் பண்டிகைக்காலம் நெருங்கி வருவதால் குறித்த கடைத்தொகுதியை விரைவாக நிர்மாணித்து வர்த்தகரிடம் கையளிக்கவுள்ளதாக கரைச்சி பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பொது சந்தையில் அண்மையில் பாரிய தீ விபத்து ஏற்பட்டது. 124 கடைகள் முற்றாக அழிவடைந்து 221 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டது. இதன் பின்னர் கரைச்சி பிரதேச சபையினர் உடனடியாக செயற்பட்டு 20 ஆயிரம் ரூபா அவசர நிதி தலா 124 பேருக்கும் வழங்கி வைத்தனர். பின்னர் இவர்கள் வியாபாரத்தை ஆரம்பிக்கும் பொருட்டு 22 பழக் கடைத் தொகுதிகளை அமைத்தனர்.

அவர்களுக்கான வாழ்வாதார உதவியாக தலா 15 ஆயிரம் ரூபா எஸ்.கே.நாதன் என்பவரால் வழங்கப்பட்டு இவர்கள் வியாபாரத்தை தொடங்கினார்கள்.

மிகுதியாக இருந்த புடைவை மற்றும் மளிகைக் கடைகளை மீள இயக்குவதற்காக வடக்கு மாகாண முதலமைச்சரினால் 9.3 மில்லியன் ரூபா விசேட நிதி ஒதுக்கப்பட்டது.

இதற்கான அடிக்கல் நேற்று முன்தினம் நண்பகல் 12 மணிக்கு முதலமைச்சரினால் நாட்டப்பட்டது. அதன் பின்னர் கருத்துக்கூறும் போது அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

எதிர்வரும் காலம் பண்டிகை காலமாகையால் குறித்த கடைத்தொகுதியை விரைவாக நிர்மாணித்து வர்த்தகர்களிடம் கையளிக்கவுள்ளதாக கரைச்சி பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

அடிக்கல் நாட்டும் நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர், வடக்கு மாகாண சபை கல்வி அமைச்சர், பிரதம செயலாளர், முதலமைச்சரின் செயலாளர், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர், பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-15)

# சமஷ்டித் தீர்வில் தமிழ் மக்கள் ஆர்வம் கொண்டிருக்கவில்லை

## லால் விஜயநாயக்க கூறுகிறார்

(கொழும்பு)

**சமஷ்டித் தீர்வில் தமிழ் மக்கள் ஆர்வம் கொண்டிருக்கவில்லை என்று அரசியலமைப்பு திருத்தத்துக்கான மக்கள் கருத்தறியும் குழுவின் அறிக்கையில் பரிந்துரைத்துள்ளதாக, அந்தக் குழுவின் தலைவர் லால் விஜேநாயக்க தெரிவித்துள்ளார்.**

கண்டியில் நேற்று முன்தினம் மல்வத்தை பீடத்தின் மகாநாயக்க தேரரைச் சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசியலமைப்பு பல்வேறு சந்தர்ப்பங்களில் திருத்தப்பட்டுள்ளது. இனிமேலும் அதில் திருத்தங்கள் செய்யப்படக் கூடாது. மக்களால் எளிதாக விளங்கிக் கொள்ளக் கூடியதான சாதாரணமான அரசியல் அமைப்பு ஒன்றை அறிமுகப்படுத்துவதில் அரசாங்கம் அக்கறை கொண்டிருந்தது.

அரசியலமைப்பு மக்களுக்கானது என்பதால் அவர்களின் கருத்துக்கள் முக்கியமானது. தென்னாபிரிக்க அரசியலமைப்பு மிகச் சாதாரணமானது. இலகுவாக விளக்கிக் கொள்ளக்கூடியது.

சமஷ்டித் தீர்வில் தமிழ் மக்கள் ஆர்வம் கொண்டிருக்கவில்லை என்பதையும், ஆனால் மாகாணசபை முறை மாற்றப்பட வேண்டும் என்பதில் கவனம் செலுத்தினர் என்பதையும் எமது பரிந்துரைகளில் குறிப்பிட்டுள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு நியூசிலாந்து பாராட்டு

பிராந்திய மற்றும் சர்வதேச தொடர்புகளில் இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை நியூசிலாந்து பிரதமர் ஜோன் கீ பாராட்டியுள்ளார்.

இலங்கையில் மேற்கொள்ளப்படும் அரசியல் யாப்பு மறுசீரமைப்பு மற்றும் தேசிய நல்லிணக்க வேலைத்திட்டத்தையும் நியூசிலாந்து பிரதமர் வரவேற்றுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் இலங்கை அரசாங்கம் கண்டுள்ள முன்னேற்றத்தின் மூலம் அமைதியான அபிவிருத்தியைக் கொண்ட நாடாக சரியான வழியில் இலங்கை பயணிப்பதை காணக்கூடியதாகவுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒக்லண்ட் நகரத்தின் அரச மாளிகையில் இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் நியூசிலாந்து பிரதமர் ஜோன் கீக்குமிடையிலான இருதரப்புப் பேச்சுவார்த்தைக்குப் பின்னர் ஊடகங்களுக்கு நியூசிலாந்து பிரதமர் கருத்துத் தெரிவித்தார்.

விவசாயம், கால்நடை, கல்வி ஆகிய துறைகளில் மாத்திரமின்றி ரக்பி, கிரிக்கெட் விளையாட்டுக்கள் தொடர்பிலும் இலங்கைக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதற்கு தமது நாடு தயாராக இருப்பதாகவும் நியூசிலாந்து பிரதமர் கூறினார்.



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் நியூசிலாந்து பிரதமர் ஜோன் கீ ஆகியோர் கூட்டாக இந்த செய்தியாளர் மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

பிராந்திய மற்றும் சர்வதேச தொடர்புகளில் இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளையும் அவர் பாராட்டினார். இருநாடுகளுக்கும் இடையில் காணப்படும் உடன்பாடு மற்றும் உடன்படிக்கைகளை முழுமையாக செயற்படுத்துவதற்கு இருதரப்பினரும் உடன்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

உலகில் பல்வேறு நாடுகளுடன் இருதரப்பு உடன்படிக்கைகளை மேற்கொண்டு நாட்டின் அபிவிருத்திக்காக வலுவான அடிப்படை வகுக்கப்பட்டு வருவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இங்கு கருத்துத் தெரிவிக்கையில் குறிப்பிட்டார். இவ்வாறான உடன்படிக்கைகளை நூற்றுக்கு 100 வீதம் செயற்படுத்துவதன் மூலம் இருதரப்பினரும் வெற்றியை பெற்றிருப்பதாகவும் தெரிவித்தார்.

புதிய அரசியல் யாப்பை வகுக்கும் பணியில் நியூசிலாந்தில் தற்பொழுது வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வரும் கலப்பு விகிதாசார முறை தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக இந்த நடைமுறை குறித்து இலங்கை அரசியல் யாப்பை வகுப்போருக்காக தெளிவுபடுத்துவதற்கென திட்டமொன்று முன்னெடுக்கப்படும் என்று இருநாட்டு பிரதமர்களும் இதன் போது தெரிவித்தனர்.

இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நியூசிலாந்திற்கான கல்வி சுற்றுலாப் பயணத்தில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பம் கிடைப்பதுடன் நியூசிலாந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் இலங்கைக்கு விஜயம் செய்து செயலமர்வுகளை ஏற்பாடு செய்வார்கள்.

நியூசிலாந்து ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்வியொன்றுக்கு பதிலளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இந்து சமுத்திர பிராந்தியத்திலிருந்து மத்திய கிழக்கு வரையான நாடுகளுக்கு உணவை விநியோகிக்கும் கேந்திர நிலையமாக வரலாற்றுக் காலத்திலிருந்தே இலங்கை செயற்பட்டுவருவதாக தெரிவித்தார்.

2050 ஆம் ஆண்டளவில் இத்தகைய நாடுகளின் பெரும் பாலானவற்றுக்கு உணவு மற்றும் சேவைகளை வழங்கும் பிராந்தியத்தின் முக்கிய பங்காளியாக மீண்டும் வரலாற்றில் பெருமை கொண்ட நாடாக இலங்கை இடம்பெறும் என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கை தொடர்பான அடுத்த பிரேரணைக்கு தயாராகிறது ஜெனிவா

எதிர்வரும் 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமை பேரவையின் 34 ஆவது கூட்டத்தொடரில் ஒருசில உறுப்பு நாடுகள் இணைந்து இலங்கை தொடர்பாக மற்றுமொரு பிரேரணையை தாக்கல் செய்யும் சாத்தியம் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. அமெரிக்காவை தவிர்த்து ஐரோப்பிய நாடுகள் இந்த முயற்சியில் ஈடுபடலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நிலையில் 34 ஆவது கூட்டத் தொடரில் ஏற்படவுள்ள நிலைமைகளை சமாளிக்கும் வகையில் அரசாங்கம் தற்போதிருந்தே எதிர்கொள்ளும் திட்டங்களை வகுத்து வருகின்ற நிலையில் அரசாங்க தரப்பினரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளும் மார்ச் மாதம் ஜெனிவாவில் முகாமிடுவதற்கு தயாராகி வருகின்றனர்.

விசேடமாக 34 ஆவது அமர்வில் இலங்கை தொடர்பாக பிரேரணைகள் கொண்டு வரப்படாமல் தடுக்கும் நோக்கில் அரசாங்கம் இராஜ தந்திர ரீதியில் காய் நகர்த்தவுள்ள நிலையில் தமிழர் தரப்பு பிரதிநிதிகள் ஜெனிவா பிரேரணை அமுலாக்கம் குறித்து வலியுறுத்தவுள்ளனர்.

எவ்வாறெனினும் கடந்த வருடம் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான ஜெனிவா பிரேரணையின் அமுலாக்கம் குறித்த இறுதி எழுத்து மூல அறிக்கையை ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் செயிட் அல் ஹுசேன் சமர்ப்பிக்கவுள்ளார். அந்த எழுத்துமூல அறிக்கையானது பிரேரணையாக முன்வைக்கப்படும் சாத்தியம் உள்ளதாகவே தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை அடுத்த வருடம் பெப்ரவரி மாதமாகும் போது நான்கு பிரதான அம்சங்களைக்கொண்ட உள்ளக விசாரணை பொறிமுறையின் வடிவத்தை தயாரித்து விடுவதற்கு அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. அதாவது காணாமல் போனோர் குறித்த அலுவலகம், உண்மையை கண்டறியும் ஆணைக்குழு, நட்டஈடு வழங்கல், மீள்நிகழாமையை உறுதிப்படுத்தல் ஆகிய நான்கு அம்சங்களை பிரதானமாகக் கொண்டே அரசாங்கம் உள்ளக விசாரணை பொறிமுறையை தயாரித்து வருகின்றது.

அடுத்தவருடம் பெப்ரவரி மாதமாகும்போது உள்ளக விசாரணை பொறிமுறையின் இறுதி வடிவம் தயாரிக்கப்பட்டுவிடும் என்றும் அதன் பின்னர் சட்டமூலங்கள் நிறைவேற்றப்பட்டு உள்ளக விசாரணை பொறிமுறை தொடர்பான வரைபு ஜெனிவா மனித உரிமை பேரவைக்கு சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒக்டோபர் மாதம் நடுப்பகுதியில் விசாரணை பொறிமுறையின் இறுதி வடிவத்தை தயாரிக்கும் பணிகளை அரசாங்கம்ஆரம்பித்து பெப்ரவரி மாதமாகும்போது இறுதி வடிவத்தை தயாரித்து விடும் என்று எதிர்பார்க்கின்றது.

அரசாங்கத்தின் பொறுப்புக்கூறல் விசாரணை பொறிமுறையின் முதலாவது கட்டமாக காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் அமைக்கப்படவுள்ளது. அதற்கான சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும் விரைவில் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு நிறுவப்படவுள்ளது. அடுத்ததாக மனித உரிமை மீறல்கள் மற்றும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈடு வழங்கும் செயற்பாடும் இடம்பெறவுள்ளது. மேலும் மீள்நிகழாமை தொடர்பான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவுள்ளன. இறுதியாக புதிய அரசியலமைப்பை உருவாக்கி அதனூடாக சிறுபான்மை மக்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைக் காண உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பல்வேறு மட்டங்களில் விசாரணை பொறிமுறை முன்னெடுக்கப்படவுள்ளது. கடந்த வருடம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கு அமைவாகவே பொறுப்புக்கூறல் பொறிமுறை முன்னெடுக்கப்படவுள்ளது. அந்த வகையில் கடந்த ஜூன் மாதம் ஜெனிவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 33 ஆவது கூட்டத் தொடரில் பிரேரணை அமுலாக்கம்தொடர்பான வாய்மூல அறிக்கையை ஐ.நா. மனிதஉரிமை ஆணையாளர் செயிட் அல் ஹுசேன் சமர்ப்பித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வரவிருக்கும் அரசியல் சாசனம் திருப்திகரமானதாக இருக்காது

## சவால்விடுகிறார் ஆனந்தசங்கரி



*(கொழும்பு)*

***வரவிருக்கும் அரசியல் சாசனம் திருப்திகரமானதாக வெளியிடப்படமாட்டாது என்பதை சவாலாக கூறுகிறேன் என தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.***

மூத்த அரசியல் ஆய்வாளர் மு.திருநாவுக்கரசுவின் "இலங்கை அரசியல் யாப்பு" நூல் வெளியீடும் ஆய்வரங்கமும் நேற்று முன்தினம் யாழ். சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்றது. இதில்கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

பல உண்மைகள் வெளியாகிவிடும் என்ற பயத்தில் என்னை தற்போது பலர் மதிப்பதில்லை. அரசியல் தொடர்பாக ஆலோசனைகள் வழங்குகிறார்கள். பல கருத்துக்களை வெளியிடுகிறார்கள். எமது நாட்டில் மறைக்கப்பட்டு வரும் வரலாறு, இவ்வாறு ஆக்கங்கள் மூலம் மக்கள் மத்தியில் தெரியவர வேண்டும். சோல்பரியாப்பை சிங்கள தலைவர்களும் தமிழ் தலைவர்களும் சரியாக மனிதாபிமானத்துடன் ஏற்றிருந்தால் அதை போல் திறமான யாப்பு இருக்க முடியாது. கண்மூடித்தனமாக எதிர்த்ததால் தான் நாடு தற்போது குட்டிச்சுவராகியுள்ளது. எத்தனையோ தலைவர்கள் அரசியல் யாப்பைப்பற்றி பேசுகிறார்கள். ஆனால் நான் அடித்துக் கூறுகிறேன் இந்த அரசியல் சாசனம் உருப்படியாக வெளியே வர மாட்டாது. இதை நான் சவாலாகக் கூறுகிறேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

# அமைச்சு செயலர்களின் கொடுப்பனவுகளை உயர்த்தத்திட்டம்

அமைச்சு செயலாளர்களின் கொடுப்பனவுகள் உயர்த்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சு செயலாளர்களின் வாடகை வாகனங்களுக்கான மாதாந்த கொடுப்பனவை உயர்த்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அமைச்சின் செயலாளர்கள் மற்றும் அதற்கு நிகரான பதவிகளை வகிக்கும் அதிகாரிகளுக்கான வாகனக் கொடுப்பனவு இவ்வாறு உயர்த்தப்படவுள்ளது.

இதுவரை காலமும் மாதம் ஒன்றுக்கு மூன்று இலட்சம் ரூபா வழங்கப்பட்டு வந்தது.

இந்த தொகை தற்போது நான்கு இலட்சத்து இருபத்து ஐயாயிரம் ரூபாவாக உயர்த்தப்படவுள்ளது.

இதேவேளை, அமைச்சுக்களின் மேலதிக செயலாளர்கள், அரசாங்க நிறுவனங்களின் பணிப்பாளர் நாயகங்கள் மற்றும் தலைவர்களுக்கு இதுவரையில் வழங்கப்பட்ட மாதாந்தக் கொடுப்பனவு ஒரு இலட்சத்து 19 ஆயிரத்திலிருந்து 2 இலட்சம் ரூபாவாக உயர்த்தப்படவுள்ளது.

அரசாங்க நிறுவனமொன்றில் பணிப்பாளர் பதவியை வகிப்போருக்கு இதுவரை காலமும் வாகனக் கொடுப்பனவாக மாதாந்தம் 98 ஆயிரத்து 790 ரூபா வழங்கப்பட்டது. இந்த தொகை ஒரு இலட்சத்து 25 ஆயிரம்ரூபாவாக உயர்த்தப்படவுள்ளது.(இ-7)

# ஒருநாளில் மாநாடு நடத்தப்பட்டாலும் இலங்கை அதில் பங்கேற்க வேண்டும்

## முன்னாள் அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு



சார்க் மாநாட்டில் கலந்து கொள்ளப் போவதில்லை என இலங்கை அரசாங்கம் எடுத்த தீர்மானம் வருத்தமளிப்பதாக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கை ஒன்றின் மூலமாகவே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் பாகிஸ்தானில் சார்க் மாநாடு நடத்தப்படவிருந்தது. இந்த மாநாட்டில் பங்கேற்காமல் இருக்க அரசாங்கம் எடுத்த தீர்மானம் தொடர்பில் தமக்கு திருப்தி கிடையாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் சார்க் மாநாடு நடத்தக்கூடிய அளவிற்கு பிராந்திய வலயத்தில் சூழ்நிலை கிடையாது என இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

வெறும் ஒருநாளில் மாநாடு நடத்தப்பட்டாலும் இலங்கை அதில் பங்கேற்க வேண்டுமெனவும் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (இ-7)

# மஸ்கெலியாவில் பதற்ற நிலை

சம்பள உயர்வு கோரி மஸ்கெலியா நகரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆர்ப்பாட்டத்திற்கு நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவை பிறப்பித்ததையடுத்து, நேற்று மஸ்கெலியா நகரில் மக்கள் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ள முயற்சித்தமையால் பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. (இ-7)



வடமாகாண சபை உறுப்பினர் எஸ். அகிலதாஸினால் வல்வெட்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலைக்கு ஒருதொகுதி விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வடமாகாண சபையின் 2016 ஆம் ஆண்டிற்கான நிதியொதுக்கீட்டில் இருந்து கிடைக்கப்பெற்ற 25000 ரூபாவிற்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

அண்மையில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இவ் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

(படம்:-கரணவாய் செய்தியாளர்)

# புதிய வற் சட்டமூலம் நாளை சமர்ப்பிப்பு

## நிதியமைச்சர் அறிவிப்பு




வற் என்ற பெறுமதிசேர் வரி திருத்தச்சட்டமூலத்தை நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க நாளை செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளார்.

இதன்படி குறித்த சட்டமூலப் பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் இரண்டாவது தடவை இதுவாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலப் பிரேரணை, அமைச்சரவை அங்கீகாரம் பெறாமை காரணமாக அரசியல் அமைப்புக்கு ஏற்புடையதாக இல்லை என்று உயர் நீதிமன்றம் தெரிவித்திருந்தது. இந்தநிலையில் புதிய சட்டமூலம் கடந்த செப்டெம்பர் மாதம் 13 ஆம் திகதியன்று அமைச்சரவையில் அங்கீகரிக்கப்பட்டது. இதில், முன்னைய சட்ட மூலத்தை காட்டிலும் பல திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. (இ-7)

# மகாத்மா காந்தியின் 147வது பிறந்த நாளை முன்னிட்டு ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் அஞ்சலி



மகாத்மா காந்தியின் 147 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு இந்தியா முழுவதும் அவரது உருவ சிலைகளுக்கு மாலை அணிவித்தும் மற்றும் உருவ படத்திற்கு மலர்தூவியும் மரியாதை செலுத்தினர். ராஜ் காட்டில் உள்ள அவரது நினைவிடத்தில் நேற்றுக்காலை தலைவர்கள் திரண்டு மரியாதை செலுத்தினர்.

ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, துணை ஜனாதிபதி ஹமீது அன்சாரி, பிரதமர் மோடி, மத்திய அமைச்சர் வெங்கையா நாயுடு, டில்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால், முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் குலாம் நபி ஆசாத், பா.ஜ.க. மூத்த தலைவர் அத்வானி உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர். பின்னர் முன்னாள் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரியின் நினைவிடத்திற்கு சென்ற மோடி, மலர்தூவி அஞ்சலி செலுத்தினார். லால்பகதூர் சாஸ்திரி பிறந்த தினத்தை முன்னிட்டு நடந்த நிகழ்ச்சியிலும் மோடி கலந்து கொண்டார். (இ-7)

# தாக்குதலைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்

## ஐ.நாவிடம் வளைகுடா நாடுகள் கோரிக்கை

(டமாஸ்கஸ்)

***சிரியாவில் உள்ள அலெப்போ நகரின்மீது நடத்தப்படும் விமான தாக்குதல்களை தடுத்து நிறுத்த உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபைக்கு ஆறு நாடுகளை உள்ளடக்கிய வளைகுடா கூட்டுறவு சபை கோரிக்கை விடுத்துள்ளது.***

சிரியாவில் உள்ள முக்கிய பெருநகரங்களில்ஒன்றான அலெப்போ நகரை கடந்த 2012 ஆம் ஆண்டில் இருந்து போராளிகள் தங்களது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்கா - ரஷ்யா இடையே சுமுகமான தீர்வு எட்டப்படாத நிலையில் சுமார் இரண்டரை இலட்சம் மக்கள் வசிக்கும் அலெப்போ நகரை போராளிகளிடம் இருந்து மீட்பதற்காக அரசுப் படைகள் அங்கு நுழைந்துள்ளன.

இராணுவ தாங்கிகள் துணையுடன் காலாட்படையினர் அலெப்போ நகரை நோக்கி முன்னேறி சென்று கொண்டுள்ள நிலையில் இங்குள்ள பஸ்தான் அல் - கஸ்ர் மாவட்டத்தில் உள்ள போராளிகளின் முகாம்கள் மீது சிரியா விமானப் படைகளும் தொடர்ந்து குண்டு மழை பொழிந்து வருகின்றன.

இந்த அதிரடி தாக்குதலால் இங்குள்ள ஒரு முக்கிய தெருவில் நூற்றுக்கணக்கான கட்டடங்கள் தீபிடித்து எரிந்து கொண்டிருப்பதாகவும் உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. இந் நிலையில், அங்கு தொடரும் தாக்குதலில் நூற்றுக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்ததாகவும் பலநூறு பேர் காயம் அடைந்ததாகவும் சிரியாவில் உள்நாட்டுப்போர் நிலவரங்களை கண்காணித்துவரும்



பிரிட்டன் நாட்டு மனித உரிமை பார்வையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பீப்பாய் குண்டுகள் மற்றும் கொத்து குண்டுகளையும் ஆபத்தான போர் ஆயுதங்களையும் சிரியா இராணுவத்தினர் பயன்படுத்தி வருவதாகவும் போராளி குழுக்கள் குற்றம்சாட்டி வருகின்றன. அலெப்போ நகரில் வாழும் சுமார் இரண்டரை இலட்சம் மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் நீரேற்ற நிலையம் மீது குண்டுவீச்சு தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் மற்றொரு நீரேற்ற நிலையத்தை போராளிகள் முடக்கி வைத்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில், அலெப்போ நகரின் மீது நடத்தப்படும் விமான தாக்குதல்களை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபைக்கு ஆறு நாடுகளை உள்ளடக்கிய வளைகுடா கூட்டுறவு சபை (கவுன்சில்) தற்போது கோரிக்கை விடுத்துள்ளது.

சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், பஹ்ரைன், குவைத், ஓமான் மற்றும் கட்டார் ஆகிய நாடுகளை உள்ளடக்கிய இந்த கூட்டமைப்பு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் பான் கீ மூனுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில், சர்வதேச சட்டங்களை மீறிய வகையில் அலெப்போ நகரில் நடத்தப்படும் மூர்க்கத்தனமான விமான தாக்குதல்களை தடுத்து நிறுத்தி, சிரியா மக்களின் வேதனையை தீர்க்க வழிசெய்யும் வகையில் ஐ.நா.சபையில் உரிய தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# விச சாராயம் குடித்த 38 பேர் உயிரிழப்பு

உக்ரைனில் விச சாராயம் குடித்து நாடு முழுவதும் 38 பேர் இறந்துள்ளதாக அந்த நாட்டின் உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

அதன் தலைவரான விளாடிமிர் லாபா இது பற்றி கூறுகையில், 38 பேர் விச சாராயத்துக்கு பலியாகி உள்ள நிலையில், இன்னும் 39 பேர் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகின்றனர். விச சாராயம் குடித்து உயிர் பிழைத்தவர்களில் சிலரது கண்பார்வை பறிபோய் விட்டது என்றார்.


வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுகிறவர்களில் பலரது நிலைமை கவலைக் கிடமாக இருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

விச சாராய தயாரிப்பில் ஈடுபட்டதாக அங்கு இதுவரையில் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 4 தொன் மெதில் அற்ககோல், தொழில்நுட்ப சாதனங்களை பொலிஸார் கைப் பற்றியுள்ளனர். (இ-7)

# உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டும் காவிரி நீர் திறக்கப்படவில்லை

தஞ்சை உச்சநீதிமன்ற உத்தரவின் படி காவிரியில் தண்ணீர் திறக்காத கர்நாடகா மீது கடும் நடவடிக்கை எடுக்க தமிழக விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர். தமிழகத்திற்கு தண்ணீர் திறக்க முடியாது என்றும், காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க கூடாது என்றும் கர்நாடகாவில் நடைபெற்ற அனைத்துக் கட்சி கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதற்கு தமிழக விவசாயிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். உச்சநீதிமன்றத்திற்கே சவால் விடும் கர்நாடகா மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

காவிரி விவகாரத்திற்கு நிரந்தர தீர்வினை காண கர்நாடக அரசு ஒத்துழைக்க வேண்டும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கேட்டு கொண்டுள்ளது. அவ்வாறு கர்நாடகம் ஒத்துழைத்தால் இரு மாநில மக்களிடையே சகோதரத்துவம் மலரும் என அக்கட்சியின் மத்திய குழு உறுப்பினர் பாலகிருஷ்ணன் குறிப்பிட்டுள்ளார். உச்சநீதிமன்றம் வழங்கிய இறுதி வாய்ப்பையும் கர்நாடக அரசு நிராகரித்ததால், காவிரி டெல்டா விவசாயிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர். தொடர்ந்து உச்சநீதிமன்ற உத்தரவை தொடர்ந்து அவமதித்து வரும் கர்நாடகா மீது நடவடிக்கை எடுக்க விவசாயிகள் கோரியுள்ளனர். கர்நாடகாவின் நடவடிக்கை இந்திய ஒருமைப்பாட்டை சீர்குலைக்கும் வகையில் உள்ளதாகவும், கர்நாடகாவின் நடவடிக்கையை மத்திய அரசு கண்டு கொள்ளாமல் இருப்பதாகவும் விவசாயிகள் வேதனை தெரிவித்துள்ளனர். (இ-7)



45 ஆவது வருடாந்த Albuquerque சர்வதேச வெப்ப பலூன் திருவிழா, அமெரிக்காவின் நியூமெக்ஸிகோ மாநிலத்தில் ஆயிரக்கணக்கான பார்வையாளர்களின் கண்களுக்கு விருந்தளிக்கும் வகையில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது.

# சர்வதேச அஹிம்சா தின சிறப்பு நிகழ்வு யாழில்





(படங்கள்:-பொ.சோபிகா)





யாழ்.இந்திய துணைத்தூதரகம் மற்றும் அகில இலங்கை காந்திசேவா சங்கத்தினர் இணைந்து நடத்திய சர்வதேச அஹிம்சா தின சிறப்பு நிகழ்வு நேற்றைய தினம் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்தியாவில் இருந்து வருகை தந்த பேராசிரியர் கலாநிதி திருமதி ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணன் கலந்து கொண்டதுடன் "அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்" எனும் தொனிப்பொருளில் சிறப்புரை ஆற்றினார்.

மேலும் இந்த நிகழ்வில் யாழ்ப்பாண கலைஞர்கள், பாடசாலை மாணவர்களுடைய கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. அத்துடன் "காந்தீயம்" மாத இதழின் இந்தமாத இதழ் வெளியிடப்பட்டதுடன் போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மதத் தலைவர்கள், அரச அதிகாரிகள், அரசியல் தலைவர்கள், மாணவர்கள்,பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-9)

# "இலங்கை அரசியல் யாப்பு" நூல் வெளியீடும் ஆய்வரங்கும்








சிரேஷ்ட அரசியல் ஆய்வாளர் மு.திருநாவுக்கரசுவின் "இலங்கை அரசியல் யாப்பு" நூல் வெளியீடும், ஆய்வரங்கமும் நேற்று முன்தினம் ராஜா கிறீம் ஹவுஸ், சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்றது.

சிரேஷ்ட பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வரவேற்புரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் க.அருந்தாகரன் நிகழ்த்தியதுடன். நூலாய்வுரையை மூத்த ஊடகவியலாளர் வ.தேவராஜா நிகழ்த்தியிருந்தார்.

புவிசார் அரசியலின் கைதிகளாய் உள்ள ஈழத்தமிழர்கள் பற்றிய திறந்த கலந்துரையாடலில் .வடமாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன், வடமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் ஆ.சி.தவராசா, பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பொ.கஜேந்திரகுமார், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் வீ.ஆனந்தசங்கரி, வடமாகாண சபை உறுப்பினர் க.சிவநேசன் ஆகியோர் சிறப்புரைகளை ஆற்றியிருந்தனர். (இ-9)

# மகாத்மா காந்திக்கு அஞ்சலி



(யாழ்ப்பாணம்)

மகாத்மா காந்தியின் பிறந்த தினத்தினை முன்னிட்டு பருத்தித்துறையில் அமைந்துள்ள காந்தியின் சிலைக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தலைமையில் சென்ற குழுவினர் மகாத்மா காந்தியின் சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

வடமாகாணசபை உறுப்பினர் சிவயோகன் பருத்தித்துறை நகரசபை முன்னாள் தலைவர் சபா. இரவீந்திரன், நகரசபை முன்னாள் உறுப்பினர்களும் அஞ்சலி செலுத்தினர்.(இ-60)

## ஜோதிடத் தகவல்


### கணவன் அமைவதெல்லாம்

சூரியன் 7 இல் இருக்க அவரைப் பாபர் பார்ப்பாராயின் அவள் மீது கணவன் அன்பில்லாதவனாக இருப்பான். சூரியனும் செவ்வாயும் கூடி எங்கிருந்தாலும் பார்த்தாலும் இளமையிலேயே விதவையாவாள். பாபர்கள் 7 இல் இருந்து அவர்களை சுபர் பார்த்தால் அவளை கணவன் விலக்கிவிடுவான். 7 இல் சுபரும் பாபரும் கூடி நின்றால் கணவனை அன்றி வேறு ஒருவனுக்கும் மனைவியாவாள். 7ஆம் வீடு சனியாக இருந்தாலும் சனி அங்கிருந்தாலும் குணமில்லாத கிழவனை மணப்பாள்.

# உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் யாழ் .மாவட்ட அணிகளுக்கிடையே நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் ஆரம்ப நாள் நிகழ்வு இன்று திங்கட்கிழமை அல்வாய் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறும். நிலையத் தலைவர் க.ஜெயதாசன் தலைமையில் ஆரம்பமாகும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் வே. சிவயோகன் , நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.பி. ஏ பிரியந்த ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)

# 'தூய்மையான கிராமம்' செயற்றிட்டம் கோப்பாய் மத்தியில் முன்னெடுப்பு





"தூய்மையான கிராமம்" செயற்றிட்டம் முதன் முறையாக நேற்றைய தினம் கோப்பாய் மத்தி பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்டது

கோப்பாய் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் கோப்பாய் மத்தி கிராம உத்தியோகத்தரின் ஒருங்கிணைப்பில் முன்னெடுக்கப்பட்ட இந்த செயற்றிட்டத்தில் கிராம மக்கள் பலர் இணைந்து சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர். (இ-9)





சிறுவர் தினத்தை முன்னிட்டு காலையடி மறுமலர்ச்சி மன்ற முன்பள்ளிச் சிறார்களுக்கான விசேட சுற்றுலா மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது. சிறுவர்கள் யாழ்.பழைய பூங்காவில் மகிழ்ந்திருந்த காட்சிகள்.




கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய மஹோற்சவத்தை ஒட்டி இருபதாவது ஆண்டாக ஆலய இளைஞர்கள் நடத்திய சமய அறிவுப் போட்டியின் பரிசளிப்பு விழா அண்மையில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய முன்றலில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதிஅதிபர் ச.லலீசன் கலந்து கொண்டார்.சிறப்பு விருந்தினர்களாக ஆலயப் பிரதமகுரு பிரம்மஸ்ரீ இ.விக்கினேஸ்வரக் குருக்களும் கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் வே.ஞானகாந்தனும் மஞ்சவனப்பதி முருகன் ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் வே.கருணாகரனும் கலந்து கொண்டனர்.



பிரம்மகுமாரிகள் உலக ஆன்மீகப் பல்கலைக் கழகத்தின் தமிழகத்தின் தலைமையகமான சென்னையிலுள்ள பிரம்மகுமாரிகள் இராஜயோக தியான நிலையத்தின் சிரேஷ்ட தியான ஆசிரியர் பிரம்மகுமாரி ஜான்சிராணி விஜயம் செய்த போது யாழ்.கிளிநொச்சி மாவட்டங்களின் தலைமையக நிலையத்தின் "சுகதாமம்" மண்டபத்தில் சேவைப் பொறுப்பாளர்களின் உறவினர்களுக்கு நடத்தப்பட்ட "அன்பில் சங்கமம்" என்ற நிகழ்வில் கலந்துரையாடிய போது...




சாவகச்சேரி பிரதேசத்தை சேர்ந்த விசேட தேவையுடைய 3 குடும்பங்களுக்கான வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக தனது 2016ஆம் ஆண்டுக்கான குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் உதவிகளை வழங்கி வைத்தார். சாவகச்சேரி பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்ற இவ்வுதவி வழங்கும் நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினருடன் சாவகச்சேரி சமூக சேவை உத்தியோகத்தர் சண்முகநாதன், பயனாளிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (படங்கள்:-கிஷோர்)



மானிப்பாய் கட்டுடையைச் சேர்ந்தவரும் கனடாவில் வசிக்கும் குலசேகரன் தயானந்தனால் யாழ்.கட்டுடை சைவ வித்தியாசாலைக்கு அண்மையில் பல்லூடகம் (மல்ரி மீடியா) ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டது.




சுழுவன் சுழிபுரத்தில் அமைந்துள்ள ஸ்ரீராம் சனசமூக நிலைய இளைஞர்களது விளையாட்டுத் திறனை ஊக்குவிக்கும் முகமாக ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்களும், நிலையத்தின் நீர்ப் பிரச்சினையை தீர்க்கும் முகமாக நீர்த்தாங்கி அமைக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் நீர்த் தாங்கி அமைப்பதற்கான அடிக்கல்லை கடந்த 27 ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் நாட்டி வைத்தார்.




ஐக்கிய மதங்களின் ஒன்றியம் அண்மையில் யாழ். மாவட்ட சர்வோதய மண்டபத்தில் இணைப்பாளர் சிறி. யுகேந்திரா தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. இந் நிகழ்வில் ஆசிய பிராந்தியத்தின் பொறுப்பாளர் ரவீந்திர கந்தகே, திறந்த பல்கலைக்கழக பதிவாளர் கந்தவேலிற்கு சின்னம் சூட்டுவதைப் படத்தில் காணலாம்.

# மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மீதான அடக்கு முறையை நிறுத்துமாறு கோரிக்கை

(கொழும்பு)

**மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மீதான அடக்கு முறைகள் நிறுத்தப்பட வேண்டுமென முன்னணி தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபே அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

முன்னணி மனித உரிமை செயற்பாட்டாளராக ரூகி பெர்னாண்டோ பயங்கரவாதத் தடைப் பிரிவினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

கட்டுநாயக்க பண்டாரநாயக்க விமான நிலையத்தில் வைத்து இவ்வாறு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

இந்த விசாரணைகள் தொடர்பில் கபே மற்றும் மனித உரிமை கேந்திர நிலையம் ஆகியன எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட நெருக்கடி நிலைமைகள் மீளவும் எதிர் நோக்க நேரிட்டுள்ளதாக இந்த அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் ஒடுக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென கோரியுள்ளன. (இ-7)

# பதுளையில் காட்டுத் தீ; 50 ஏக்கர் காடு நாசம்

பதுளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிரிவானாவுல்பத பகுதியில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட காட்டுத்தீயினால் 50 ஏக்கர் காடு எரிந்து நாசமாகியுள்ளது.

இதனை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக பொலிஸார் மற்றும் தீயணைப்பு அதிகாரிகளும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மேலும் தீ விபத்தினால் எவருக்கும் பாதிப்பு ஏற்படாத நிலையில். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)



# இலங்கையில் இருந்து சென்ற 6 பேர் பங்களாதேஷில் கைது

(கொழும்பு)

இலங்கையில் இருந்து விமானம் மூலம் பங்களாதேஷ் தலைநகர் டாக்காவுக்கு சென்ற 6 பயணிகள் கைது செய்யப்பட்டனர்.

பாகிஸ்தான் ஊடாக டாக்காவுக்கு சென்ற அவர்கள், 370 கிலோகிராம் அழகு சாதனப் பொருட்களைக் கொண்டு சென்றமைக்காகவே நேற்றுக் காலை கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் பங்களாதேஷ் பிரஜைகளாவர்.

தாம் எடுத்து வந்த பொருட்களை அவர்கள் சுங்கப்பிரிவில் வெளிப்படுத்தாமை காரணமாக அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன் குறித்த பொருட்களை எடுத்து வருவதற்கான உரிய இறக்குமதி சட்டங்களை அவர்கள் பின்பற்றவில்லை என்றும் பங்களாதேஷ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-7)

# மகிந்த பெற்ற வெளிநாட்டு கடன்களுக்கு நிவாரணம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தினால் 2005ஆம் ஆண்டில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 42,300 கோடி ரூபா கடன் பணத்திற்காக நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பில் விசேட அவதானம் செலுத்தி ஆராய்வதற்கு உலக வங்கி மற்றும் பல வெளிநாடுகள் இணக்கம் வெளியிட்டுள்ளன.

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுடன் அமெரிக்கா, ஜேர்மன் மற்றும் பிரான்ஸ் தூதுவர்கள் மற்றும் உலக வங்கி பணிப்பாளர்களுடன் அண்மையில் நிதி அமைச்சில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே இந்த இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதற்கமைய கடன் பணத்தில் சில பகுதிகளை நீக்க முடியுமா? அந்த கடன் பணத்தை கட்டுவதற்காக அதிக காலம் வழங்க முடியுமா? அல்லது அதற்கு மேலதிகமாக சில நிவாரணங்களை வழங்க முடியுமா என ஆராயப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதன்போது எதிர்வரும் வரவு செலவுத்திட்ட யோசனை தொடர்பில் நீண்ட நேரம் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# பாரிய அரசியல் மாற்றம் ஜனவரி மாதம் ஏற்படும்

## முன்னாள் அமைச்சர் வெல்கம கூறுகிறார்



நாட்டில் எதிர்வரும் ஜனவரி மாதம் அரசியலில் பாரிய மாற்றம் ஏற்படும் என முன்னாள் அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யட்டியாந்தோட்டை பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எனினும் முன்னொரு காலத்தில் இடம்பெற்ற மகிந்த ராஜபக்ஷவின் கெட்ட காலம் தற்போது நிறைவுக்கு வந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் இவர்கள் மேலும் தங்களுடைய ஆட்சியில் ஐந்து வருடங்களுக்கு அதிகமாக இருந்திருக்க முடியும். அவர்களின் கெட்டகாலம் அது இடம்பெறவில்லை என அவர் கூறியுள்ளார்.

இவ்வாறு கெட்டகாலம் நிறைவுக்கு வந்துள்ளது, எனினும் 19ஆம் சீர்திருத்தத்தில் என்னென்ன திருத்தங்கள் கொண்டுவந்தாலும் ஜனவரியில் அரசியல் மாற்றம் ஏற்படும். கட்டாயம் ஏற்படும் என முன்னாள் அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

## கண்டிப்பான பேர்வழியாக இருக்கலாமா?

மிதமிஞ்சிய கண்டிப்பில் வளரும் குழந்தைகள் அந்தக் கண்டிப்பு எதிர்பாராமல் குறைய நேரிட்டால் ஏகமாய் துளிர்த்து, உருப்படாமல் போகின்றன– பள்ளிப் பிள்ளைகள் வாத்தியார் நகர்ந்ததும் ஆட்டம் போடுவதில்லையா, அப்படி.

மனுஷனா அவன்? நாய்க் குணம்பா! என்று பிறர் விமர்சிக்கும் படி கண்டிப்பான பேர் வழியாக இருக்கக்கூடாது.

கண்டிப்பு இல்லாவிட்டால் அவ்வளவு தான் – தலையில் மிளகாய் அரைத்து விடுவார்கள் என்று வாதம் செய்பவர்கள் இருக்கிறார்கள். இதில் உண்மையில்லாமலில்லை. ஆனால், அவர்கள் தங்களை வெறுப்பவர்களின் பட்டியலைத் தினமும் நீட்டியபடி இருப்பவர்கள்.

எல்லோரும் வெறுக்கும் படியும் முகத்தைத் திருப்பிக் கொள்ளும் படியும் வாழ்ந்து விட்டுப் போவதில் பெருமையில்லை. கண்டிப்பு என்கிற பெயரால் தினம் தினம் இதயங்களை இழப்பது புத்திசாலித்தனமான செயலில்லை.

அதற்காக கண்டிக்காமல் கட்டவிழ்த்து விடச் சொல்லவில்லை.

கண்டிப்பில் ஒரு தெளிவு இருக்க வேண்டும். அதாவது எதற்கெடுத்தாலும் எகிறிக் குதிப்பது என்றில்லாமல் இந்த இந்த விடயத்தில் தான் கண்டிப்பாக இருப்பதாக நிறுவ வேண்டும்.

குழந்தைகள் என்றால் பழக்கவழக்கங்களில், வியாபாரம் என்றால் பண விடயத்தில், அலுவலகம் என்றால் பதவியைத் தவறாகப் பயன்படுத்தும் விடயத்தில், பள்ளி, கல்லூரி நிர்வாகி என்றால் ஒழுக்க விடயத்தில் இந்த மனிதர் கண்டிப்பு என்று பெயரெடுக்க வேண்டும். இதை விட்டு விட்டு எதற்கெடுத்தாலும் பாயும் வேலையைச் செய்யக்கூடாது.

தன் கண்டிப்பெல்லாம் தனிப்பட்ட விருப்பு வெறுப்பின் அடிப்படையிலல்ல என்பதையும் சம்பந்தப்பட்டவர்களின் நன்மைக்காகவும் சம்பந்தப்பட்டவர்கள் சார்ந்துள்ள அமைப்பின் (குடும்ப அல்லது நிறுவனத்தின்) நன்மைக்காகவே என்பதையும் தெளிவுபடுத்திவிட வேண்டும்.

எவ்வளவு கண்டிப்பு இருந்தாலும் இந்த இந்த விடயங்களில் ரொம்ப கரெக்டான பேர்வழி என்று தெளிவுபடுத்திவிட வேண்டும். இவர் எதற்குப் பாய்வார் எதற்குப் பாயமாட்டார் என்கிற சந்தேகம் சுற்றியுள்ளவர்களுக்கு வரும்படியான குழப்பவாதிகளாகக் கண்டிப்புப் பேர் வழிகள் இருக்கக் கூடாது.

எல்லாவற்றுக்கும் மேலாக,

கல்லுக்கும் ஈரமுண்டு என்பது போலத் தன் நெஞ்சிலும் ஈவிரக்கம் உண்டு என்பதை சந்தர்ப்பம் வரும் போதெல்லாம் வெளிப்படுத்த வேண்டும்.

இவையெல்லாம் இல்லாத கண்டிப்பானது ஒருவருக்கு தீமையில்தான் முடியும்.

**லேனா தமிழ்வாணன்**




# நயவஞ்சக நரி

...நரியாரே இந்த மரத் தடியில் நானும் என் குட்டிகளும் தங்கலாமா?" என்று கேட்டது அம்மா பன்றி.


"பேஷாக தங்கலாம்!" என்றது நரி.

"எனக்கும், என் குட்டிக்கும் ஏதாவது ஆபத்து வருமா நரியாரே?" என்று கவலையோடு கேட்டது அம்மா பன்றி.

"நான் இருக்கும் இடத்துக்கு வந்துவிட்டாய் பன்றியே கவலையே படாதே! நான் வயதானவன். இந்த பொந்தே கதி என்று கிடப்பவன்! எதிரிகள் எவரையும் மரத்தருகில் அண்டவே விடமாட்டேன்! நானிருக்க பயமேன்?" என்றது நரி.

பன்றி தன் குட்டிகளுடன் மரத்தடியில் தங்கிக் கொண்டது. நாளடைவில் மரத்தின் மேலுள்ள கூட்டில் பெண் கழுகு முட்டையிட்டு குஞ்சு பொரித்தது. நான்கைந்து குஞ்சுகள் இருக்கும். கத்தியபடி இருந்தன. மரத்தடியில் பன்றிக் குட்டிகளும் "கர், கர்' என்று உறுமியபடி உலாவிக் கொண்டிருந்தன.

வந்ததற்கு இப்போது பன்றிக் குட்டிகள் மிகவும் பருத்திருந்தன. அம்மா பன்றியும் தான். அவைகளை எப்படி சாப்பிடலாம் என்று யோசித்த நரி, ஆண் கழுகையும், பெண் கழுகையும் அழைத்தது.



"இதோ பாருங்கள்! மரத் தடியில் இருக்கிறதே பன்றி அது சுத்த மோசம் உங்கள் குஞ்சுகளை எப்பொழுது சாப்பிடலாமென்று தருணம் பார்த்துக் கொண்டிருக்கிறது!" என்றது.

இரண்டு கழுகுகளும் இரை தேடக் கூட வெளியில் செல்லாமல், கூட்டிலுள்ள குஞ்சுகளை காவல் காக்கத் தொடங்கின. வெளியே எங்கேயும் போக பயந்தன.

மேலே ஒருமுறை பார்த்து விட்டு குட்டிகளுடன் மேய்ந்து கொண்டிருந்த பன்றியிடம் வந்தது நரி.

"பன்றியே! நீ உன் குட்டிகளை மிகவும் ஜாக்கிரதையாக பார்த்துக் கொள்ள வேண்டும். மேலே இருக்கிற இரண்டு கழுகுகளும் மகா பொல்லாத கழுகுகள். அவை நீ இல்லாத சமயத்தில் உன் குட்டிகளைக் கொத்திக் கொன்று சாப்பிட்டுவிட நேரம் பார்த்துக் கொண்டிருக்கின்றன!" என்றது நரி.

பன்றி ஒரேயடியாக பயந்து போய்விட்டது. குட்டிகளை எல்லாம் தன் காலின் கீழ் அழைத்துக் கொண்டது. மரத் தடியிலேயே இருக்க வேண்டும். குட்டிகளை தனியாக விட்டு விட்டு போய் விடக் கூடாது.

கழுகுகள் சாப்பிடவா என் குட்டிகளை கண் போல வளர்க்கிறேன் என்றெண்ணியது பன்றி. அதன் பிரகாரமே இருக்கவும் ஆரம்பித்தது அம்மாப் பன்றி.

ஆண், பெண் கழுகுகளும், அம்மா பன்றியும், பன்றிக் குட்டிகளும் இரை தேடாததால் வாடி இளைத்து, சோர்ந்து, துவண்டு ஒரு நாள் எல்லாமே இறந்து போயின.

நரி விரும்பியது போல் நிறைய சாப்பிட கழுகுகளும், பன்றிகளும் அதன் தந்திரத்தால் கிடைத்து விட்டன.

யார் யாரிடம் நட்பு கொள்ள வேண்டுமென்று யோசித்து நட்புக் கொள்ளாததால் கழுகுகளுக்கும், பன்றிகளுக்கும் நேர்ந்த பரிதாபமான முடிவைப் பார்த்தீர்களா, நல்லவர்களோடு மட்டுமே நட்பு கொள்ள வேண்டும்.

(முற்றும்)




- கிமு 2333 - கொஜொசியோன் நாடு (தற்போதைய கொரியா) டங்கூன் வாஞ்சியோம் என்பவரால் உருவாக்கப்பட்டது.
- 1739 - ரஷ்ய-துருக்கி போர், 1736-1739 முடிவில் ரஷ்யாவுக்கும் ஒட்டோமான் பேரரசுக்கும் இடையில் அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டது.
- 1778 - பிரித்தானியாவின் கப்டன் ஜேம்ஸ் குக் அலாஸ்காவில் தரையிறங்கினார்.
- 1908 - பிராவ்தா செய்திப்பத்திரிகை லியோன் ட்ரொட்ஸ்கியினாலும் அவரது சகாக்களினாலும் வியென்னாவில் வெளியிடப்பட்டது.
- 1918 - மூன்றாம் போரிஸ் பல்கேரியாவின் மன்னனாக முடிசூடினான்.
- 1929 - சேர்பியா, குரொவேசியா, சிலவேனியா இணைக்கப்பட்டு அதற்கு யூகொஸ்லாவிய இராச்சியம் எனப் பெயரிடப்பட்டது.
- 1932 - ஈராக், பிரித்தானியாவிடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1935 - இத்தாலி எதியோப்பியாவைக் கைப்பற்றியது.
- 1942 - விண்வெளிப் பறப்பு: ஜேர்மனியில் இருந்து ஏ4-ஏவுகணை வெற்றிகரமாக ஏவப்பட்டது. முதன் முதலில் விண்வெளியை அடைந்த மனிதனால் உருவாக்கப்பட்ட பொருள் இதுவாகும்.
- 1952 - ஐக்கிய இராச்சியம் வெற்றிகரமாக அணுவாயுதச் சோதனையை நடத்தியது.
- 1962 - சிக்மா 7 விண்கலம் வெற்றிகரமாக ஏவப்பட்டது. வொல்லி ஷீரா 6 தடவை பூமியைச் சுற்றினார்.
- 1981 - வட அயர்லாந்து, பெல்பாஸ்ட் நகரில் "மேஸ்" சிறைச்சாலையில் ஐரிஷ் குடியரசு இராணுவக் கைதிகளின் ஏழு மாத உண்ணா நோன்பு முடிவுக்கு வந்தது. 10 பேர் இறந்தனர்.
- 1985 - அட்லாண்டிஸ் விண்ணோடம் தனது முதலாவது விண்வெளிப் பயணத்தை ஆரம்பித்தது.
- 1990 - ஜேர்மனியின் கிழக்கும் மேற்கும் ஒன்றாக இணைந்தன. ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு மேற்கு ஜேர்மனியுடன் இணைந்தது.
- 1993 - சோமாலியாவின் போர்பிரபு முகம்மது ஃபரா ஐடிட் என்பவனின் தலைமையிலான ஆயுதக் குழுவினரைப் பிடிக்க எடுத்த முயற்சியில் 18 அமெரிக்கப் போர்வீரர்களும் 1,000 சோமாலிகளும் கொல்லப்பட்டனர்.
- 2001 - வங்காள தேசத்தின் நாடாளுமன்றத் தேர்தலில் கலீதா சியாவின் பங்களாதேஷ் தேசியக் கட்சி வெற்றி பெற்றது.
- 2013 - இத்தாலியில் ஆபிரிக்கக் குடியேறிகளை ஏற்றி வந்த படகு மூழ்கியதில் 300 பேர் வரையில் உயிரிழந்தனர்.

**பிறப்புகள்**

- 1862 - ஜானி பிரிக்ஸ், ஆங்கிலத் துடுப்பாட்ட வீரர். (இ. 1902)
- 1917 - பீட்டர் கெனமன், இலங்கை இடதுசாரி அரசியல்வாதி. (இ. 1997)
- 1940 - முரு. சொ. நாச்சியப்பன், மலேசிய எழுத்தாளர்.
- 1954 - சத்யராஜ், தமிழ்த் திரைப்பட நடிகர்.
- 1957 - இராபர்ட்டோ செவெதோ, உலக வணிக அமைப்பு தலைவர்.

**இறப்புகள்**

- 1226 - அசிசியின் பிரான்சிசு, இத்தாலியப் புனிதர். (பி. 1181)
- 1867 - எலியாஸ் ஓவே, தையல் இயந்திரம் கண்டுபிடித்தவர். (பி. 1819)
- 1995 - ம. பொ. சிவஞானம், தமிழறிஞர், அரசியல்வாதி. (பி. 1906)
- 1999 - அக்கியோ மொறிட்டா, சோனி நிறுவனத்தைத் தோற்றுவித்தவர். (பி. 1921)
- 2009 - எஸ். இராமச்சந்திரன், இலங்கையின் மலையகத்தை சேர்ந்த ஓவியர். (பி. 1942)
- 2011 - ஆ. கந்தையா, ஈழத்துத் தமிழறிஞர். (பி. 1928)

**சிறப்பு நாள்**

- ஜேர்மனி - இணைப்பு நாள். (1990)
- ஈராக் - விடுதலை நாள். (1932)





| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 100 | 30 | 80 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 90 | 110 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 50 | 100 | 55 | 80 | 120 | 100 |
| தக்காளி | 80 | 100 | 80 | 100 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 | 60 | 60 | 70 |
| கோவா | 80 | 100 | 45 | 80 | 80 | 80 |
| கரட் | 100 | 100 | 65 | 120 | 120 | 80 |
| பூசணி | 30 | 30 | 20 | 30 | 50 | 30 |
| புடோல் | 40 | 30 | 35 | 40 | 60 | 40 |
| வாழைக்காய் | 80 | 50 | 40 | 50 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 70 | 120 | 80 | 100 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 70 | 80 | 100 | 100 |
| பாகற்காய் | 150 | 100 | 100 | 160 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 120 | 80 | 70 | 120 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 120 | 100 |
| பயற்றங்காய் | 160 | 200 | 130 | 100 | 100 | 140 |
| லீக்ஸ் | 140 | 100 | 90 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 50 | 30 | 40 | 40 | 80 | 40 |
| கறிமிளகாய் | 100 | 100 | 50 | 100 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 60 | 100 | 80 | 100 |
| போஞ்சி | 180 | 200 | 140 | 160 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 50 | 50 | 30 | 60 | 60 | 70 |
| கீரை - 1பிடி | 20 | 30 | 25 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 400 | 400 | 350 | 400 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 15-35 | 40 | 25-35 | 50 |
| இராசவள்ளி | — | — | — | — | — | 160 |
| வெங்காயப்பூ | 80 | — | — | 120 | 160 | 180 |
| முள்ளங்கி | 60 | 60 | 30 | 40 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 10 | 30 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 10 | 20 | 15 |
| ஈரப்பலா | — | 50 | — | — | 80 | — |

# அனைத்து மக்களுக்கும் பாகுபாடற்ற அரசியல் சக்தியை நாம் வழங்குவோம்

## பிரதியமைச்சர் பெரேரா யாழில் வாக்குறுதி

(யாழ்ப்பாணம்)

**நாட்டில் உள்ள அனைத்து மக்களுக்கும் பாகுபாடற்ற மின்சக்தி எவ்வாறு வழங்கப்படுகின்றதோ அதே போன்று அரசியல் சக்தியையும் வழங்குவோம் என மின்சாரம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பிரதியமைச்சர் அஜித் பி.பெரேரா தெரிவித்துள்ளார்.**



நீர்வேலியில் விவசாயிகளுக்கு குறைந்த கட்டணத்தில் மின்சாரம் வழங்கும் தேசிய நிகழ்வு நேற்று முன்தினம் காலை நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். ஒரு காலத்தில் யாழ்ப்பாண பிரதேசம் தான் இந்த நாட்டின் உணவுத் தேவையின் அரைவாசி பங்கினை நிறைவு செய்தது. இந்த வளங்களை பெருக்கி மேலும் விவசாயத்தை அதிகரிக்க திட்டமிட்டுள்ளோம். சாதாரணமாக விவசாயிகளுக்கான மின் கட்டணத்தில் சலுகைகளை வழங்க திட்டமிட்டுள்ளோம்.

யாருக்கும் நட்டம் ஏற்படாமல் நாங்கள் இது தொடர்பில் ஆழமாக ஆராய்ந்து வருகின்றோம். முன்னர் ஒரு அலகுக்கு பன்னிரண்டு ரூபாய் என அறவிடப்பட்டது.

இன்றிலிருந்து கிலோ வோல்ற் ஒரு அலகிற்கு ஆறு ரூபாய் எண் பத்தைந்து சதமாக செலுத்த குறைக்கப்பட்டுள்ளது.

இதற்கென பிரத்தியோக மின்சார மானியை பெற்று இந்த சலுகையை பெற முடியும்.

நிரந்தரமாக மாதாந்த தொகையாக செலுத்த வேண்டிய அறுநூறு ரூபாய் என்ற தொகை முந்நூறு ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தில் உள்வாங்கும் அனைத்து விவசாயிகளும் இதனைப் பெற்றுக் கொள்ள முடியும்.

எனவே இந்த புதிய திட்டத்தை பயன்படுத்துவதன் மூலம் நாட்டின் அனைத்து பாகங்களிலும் சிறந்த விவசாய உற்பத்தியை பெற முடியும்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கூடுதல் கட்டணம் அறவிடப்பட்டமையால் அனைவரும் மின்சாரத்தை பெறுவதில் சிக்கல் நிலை காணப்பட்டது. அதனால் கட்டணத்தில் சலுகைகளை வழங்கினோம்.

நாங்கள் வீட்டுக்கு வீடு மின்சாரம் என்ற திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது எந்த பாகுபாடும் காட்டவில்லை.

இப்போது வடக்கில் முப்பதாயிரம் வீடுகளுக்கு தான் மின்சாரம் இல்லை. இந்த ஆண்டு இறுதிக்குள் அவர்களுக்கான மின்சாரம் வழங்கப்படும். மாவை சேனாதிராசா எம்.பி. குறிப்பிட்டார் மின்சக்தியை தருவது போல எமக்குரிய ஆளும் சக்தியை தருமாறு கூறினார்.

எனவே வடக்கை போன்று தெற்கிலும் எல்லா இடங்களிலும் அரசியல் சக்தி என்பது தேவைப்படுகின்றது. அதற்கு முன்னர் நாட்டின் பிரஜைகளை வலுவூட்ட வேண்டும். மின்சக்தியை சகல மக்களுக்கும் பெற்று தருவது போன்று அரசியல் சக்தியையும் சகல மக்களுக்கும் பெற்றுத்தருவோம்.

அரசியல் வரலாற்றில் ஐ.தே.க. ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மக்களுக்கு உரிமைகளை வழங்க ஒன்றிணைந்து செயற்பட்டு வருகின்றது. நாங்கள் வைராக்கியத்தை விட்டு நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும்.

கடந்த கால வரலாறுகள் மிகவும் கறைபடிந்த வரலாறு அவற்றை மாற்ற வேண்டும்.

எனவே சமநிலை அற்ற அரசியலமைப்பு மாற்றப்பட்டு அனைவருக்கும் சமாந்தரமான அரசியலமைப்பு கொண்டுவரப்பட வேண்டும்.

இலங்கை எம் அனைவரதும் நாடு என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 860

சூரியா




விசால்




யது




தயா




தனு




சிந்து



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பிறக்கிறது இஸ்லாமிய புத்தாண்டு

துல்ஹஜ் மறைகிறது. முஹர்ரம் பிறக்கிறது. இஸ்லாமிய புத்தாண்டு மலர்கிறது. அல்லாஹ்வின் அருட்கொடையால் நாம் ஹிஜ்ரி 1437 ஐ கடந்து 1438 இல் காலடி வைக்கிறோம்.

நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வினால் உலகத்திற்கு அனுப்பப்பட்ட உன்னத நோக்கத்தை அடைந்து கொள்வதில் அவர்களுக்கு சாதகமாக அமைந்த ஒரு பாரிய திருப்புமுனையான ஹிஜ்ரத் நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டே இஸ்லாமிய புதிய வருடம் கணிக்கப்படுகிறது.

நபி (ஸல்) அவர்களும் நபித்தோழர்களும் கி.பி. 622 இல் மக்காவிலிருந்து மதீனாவுக்கு புலம்பெயர்ந்தமை ஹிஜ்ரத் என அழைக்கப்படுகிறது.

எப்பொழுது முதல் இஸ்லாமிய வருடம் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதை உமர் (ரழி) அவர்கள் தனது ஆட்சிக் காலத்தில் நபித்தோழர்களை அழைத்து ஒன்றுசேர்த்து ஆலோசனை கேட்டார்கள். அப்போது பலரும் பல மாதங்களைக் குறிப்பிட்டார்கள். இறுதியில் முஸ்லிம்களின் முதல் மாதமாக முஹர்ரம் மாதத்தையும் வருடம் ஆரம்பிப்பது நபி (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்ற நாள் எனவும் முடிவெடுக்கப்பட்டது.

நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் ஊடாக இஸ்லாத்திற்கு எதிரான சக்திகளையும் அத்துமீறல்களையும் மிகைத்து தூய இஸ்லாத்தை வாழ்வில் பிரதிபலிக்கச் செய்வதற்கான புதியதொரு வாழ்க்கையை தெரிவு செய்தார்கள். அதற்கான இலட்சியப் பயணமே ஹிஜ்ரத் நிகழ்வாகும். இன்று ஒவ்வொரு வருடமும் இஸ்லாமிய புத்தாண்டின் போதும் இதனை நினைவுபடுத்தும் நாம் எம் வாழ்வில் எத்தகைய தீய செயல்களை விட்டும் ஒதுங்கி புதிய வாழ்விற்கு எம்மைத் தயார்படுத்தியிருக்கிறோம்?

வருடத்தின் இறுதிக் கட்டத்தில் இருக்கும் நாம் இந்த வருடத்தில் அமைந்த செயற்பாடுகளை ஒரு கணம் மீள் பரிசீலனை செய்ய வேண்டிய தேவை உண்டு. எத்தனை தடவைகள் அல்குர்ஆனை ஓதி முடித்தேன்? பர்ளு தொழுகைகளை உரிய நேரத்திற்கு நிறைவேற்றினேனா? எத்தனை தடவைகள் தஹஜ்ஜுத் தொழுகைகளை நிறைவேற்றினேன்? சுன்னத்தான தொழுகைகளை எந்தளவு நிறைவேற்றினேன்? எனது சொத்திலிருந்து எத்தனை ரூபாய்களை இறை பாதையில் செலவு செய்தேன்? மற்றைய சகோதரர்களுடனும் இரத்த உறவுகளுடனும் உறவுகளைப் பேணி நடந்தேனா?

மொத்தத்தில் இறைவனுக்கும் மனிதனுக்கும் நான் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை எந்தளவு நிறைவேற்றியுள்ளேன் என எமக்குள் நாம் கேட்டுக் கொள்வதோடு, செய்த பாவங்களுக்கும் தவறுகளுக்கும் அல்லாஹ்விடத்தில் மன்றாடி பாவ மன்னிப்பு தேடிக்கொள்ள வேண்டும். பசி உணவைத் தேடுவதைப் போல ஈமான் அமல்களைத் தேடும். எனவே ஈமான் உறுதி அடைந்தால் அமல்கள் செய்ய வாய்ப்புக் கிடைக்கும். அமல்கள் செய்தால் ஈருலகிலும் நிம்மதி கிடைக்கும். இந்த வருடத்தை விட அடுத்த வருடம் எனது வாழ்வில் ஈமானிய மலர்கள் மலர்ந்து செழிக்க வேண்டும் என்ற உறுதிப்பாட்டையும் எடுத்துக் கொள்வது அவசியமாகும்.

கிறிஸ்து ஆண்டானது (ஆங்கில, தமிழ், சிங்கள வருடங்கள்) சூரிய சுழற்சியைக் கொண்டு கணிக்கப்படுகிறது. இஸ்லாமிய ஆண்டு ஹிஜ்ரியானது சந்திர சுழற்சி மூலமாக கணிக்கப்படுகிறது. முஸ்லிம்கள் அனைத்து விடயங்களிலும் யூதர்களுக்கு மாற்றமாக தங்களது நடவடிக்கைகளை ஆக்கிக்கொள்ள வேண்டும் என்பதனையே இஸ்லாம் வலியுறுத்துகின்றது.

இது இஸ்லாமிய வருடத்தின் தனித்துவத்தை எடுத்துக் காட்டுகிறது. ஆனால் ஆங்கில, தமிழ், சிங்கள வருடமும் இஸ்லாமிய ஆண்டும் 12 மாதங்களைக் கொண்டவை. ஹிஜ்ரியானது முஹர்ரம் மாதத்தை ஆரம்ப மாதமாகவும் துல்ஹஜ்



மாதத்தை இறுதி மாதமாகவும் கொண்டது.

துல்ஹஜ் மறைகிறது. முஹர்ரம் பிறக்கிறது. இஸ்லாமிய புத்தாண்டு மலர்கிறது. அல்லாஹ்வின் அருட்கொடை யால் நாம் ஹிஜ்ரி 1437 ஐ கடந்து 1438இல் காலடி வைக்கிறோம். நடப்பு வருடத்தில் செய்த பாவங்களையும் தவறுகளையும் எண்ணி மனம் வருந்தி, அவற்றுக்காக அல்லாஹ்விடத்தில் மன்னிப்புக் கோரி அவற்றை அழித்து விட்டு புதியதொரு வருடத்தை ஈமானிய உணர்வுகளோடு வரவேற்று, இஸ்லாத்துடன் பின்னிப் பிணைந்த வாழ்க்கைக்கான திட்டத்தை தீட்ட வேண்டிய தருணம் இதுவாகும்.

எமது உள்ளத்தையும் புறத்தையும் பரிசுத்தப்படுத்தி புதிய வருடத்தோடு நிஜங்களின் நிதர்சனமாகத் திகழும் இஸ்லாத்தை இம்மண்ணில் உயிர் வாழச் செய்ய முன்வருவோம். ஒவ்வொரு வருடமும் எம்மை விட்டு பிரிந்து செல்லும் போது எமது ஆயுட்காலம் குறைவடைந்து மரணம் எம்மை அண்மித்துக் கொண்டிருக்கிறது என்பதனை நினைவில் நிறுத்திக் கொள்வோம்.

பிறக்கவிருக்கும் இஸ்லாமிய புதுவருடம் ஹிஜ்ரி 1438இல் எமக்கு மத்தியில் காணப்படும் அனைத்து பிளவுகளையும் மனக்கசப்புகளையும் உதறித் தள்ளிவிட்டு சகோதரத்துவத்தை, பரஸ்பர புரிந்துணர்வை தோற்றுவிப்பதற்கு அல்லாஹ் அருள் புரிவானாக! ஆமீன்!!

அல்ஹாஜ் எம்.எப்.
எம். இக்பால் (ஜே.பி).
யாழ்ப்பாணம்.

# தமிழ் சினிமா வரலாறு

## கமலா செல்வராஜ் பேட்டி 265

வீட்டை சுத்தப்படுத்துவது, சமைப்பது, அப்பாவை, குழந்தைகளை ஒவ்வொருவராக கவனிப்பது எல்லாமே பாப்ஜி அம்மாதான். ஆனால் அவரை களைத்துப் போய் பார்க்கவே முடியாது.

கிரிக்கெட், பொக்சிங், டென்னிஸ், பில்லியர்ட்ஸ் போன்ற விளையாட்டுக்களிலும் வல்லவரான அப்பாவிடம் எல்லாத் திறமைகளும் இருந்தும் சினிமா துறைக்குப் போனதால் அவரது புத்திசாலித்தனம், திறமை எல்லாமே திசை திரும்பி சிதறி விட்டது என்பது தான் உண்மை. இவ்வாறு சதீஷ் கூறினார்.

**கமலா செல்வராஜ்**

ஜெமினிகணேசன், பாப்ஜி தம்பதிகளின் மகள் டாக்டர் கமலா செல்வராஜ் கூறியதாவது,

அப்பா ஒரு நடிகராக இருந்த போதிலும் ஒளிவு மறைவு இல்லாது வாழ்ந்தவர். கல்யாணமாகி விட்டாலே மார்க்கெட் போய் விடுமே என்று பயப்படும் சினிமா உலகத்தில் இரண்டு குழந்தைகள் பிறந்த பிறகு காதல் மன்னனாக கொடிகட்டிப் பறந்தவர்.

அப்பா ஒரு நடிகர் என்பதால் என் அப்பாவைப் பற்றி என்னை விட எல்லோருக்கும் நிறையவே தெரியும். அப்பாவின் அருமை மட்டுமே எங்களுக்கு தெரிய வேண்டும் என்று நினைத்த அம்மா பத்திரிகைகளைத் தொடக்கூட எங்களை அனுமதித்தது இல்லை. சினிமா பக்கமே போகக் கூடாது. ஆண்களை நிமிர்ந்துகூட பார்க்கக்கூடாது. எதற்கெடுத்தாலும் கண்டிப்பும் கட்டுப்பாடும் தான்.

ஒரு நாள் அப்பா எங்கள் முகத்தைக் கையில் ஏந்தி, ஸ்கூலில் யார் எது கேட்டாலும் தெரியாது என்று சொல்லுங்கள் என்றார். அவர் சொன்னபடி உங்கள் அப்பாவுக்கு சாவித்திரியோடு கல்யாணமாகி விட்டதாமே என்று கேட்டவர்களுக்கு தெரியாது என்ற பதிலை மட்டுமே சொன்னோம்.

**கார் ஓட்டும்போது...**

சில நாட்கள் அப்பா இரவில் குடித்திருந்த நிலையில் காரை ஓட்டக் கிளம்பும் போது அம்மா என்னிடம் கமலா! அப்பா காரை எடுக்கிறார். போ, நீ போய் கரை ஓட்டு! என்று உலுக்கினால் கார் எதிரே போய் இரு கைகளையும் நீட்டிக்கொண்டு நிற்பேன். அந்த நிலையில் அப்பா நான் நிற்பதைப் புரிந்து கொள்ளாமல் ஓட்டினால் நிற்கும் என் கதி என்ன என்று நினைக்கத் தோன்றாது. அப்பாவை தடுக்க வேண்டும், அம்மாவின் தவிப்புக்கு ஈடு கொடுக்க வேண்டும் என்ற ஒரே நினைப்பில் காரைத் தடுத்து அதில் ஏறி உட்கார்ந்து நானே ஓட்டிக் கொண்டு போவேன். தூக்க கலக்கத்திலும் என்னை நானே தெளிய வைத்துக் கொண்டு மணிக்கணக்கில் ஓட்டிக் கொண்டு போய்விட்டு அப்பாவோடு தான் வீடு திரும்புவேன்.




ஜெமினிகணேசனின் 7 மகள்கள், ரேவதி, கமலா செல்வராஜ் விஜயசாமுண்டீசுவரி, ராதா, ஜிஜி, ரேகா, நாராயணி.

அப்பாவுக்கு அழகு, அறிவு, அந்தஸ்து, உறவு, பொறுமையான மனைவி, பொறுப்பான குழந்தைகள் என்று கடவுள் எல்லாவற்றையும் கொடுத்திருக்கிறார். அதை முழுமையாகப் பயன்படுத்தி இருந்தால் யாருமே பிடிக்க முடியாத நிலையை அவர் எட்டியிருக்கலாம். உலகம் என்னும் நாடக மேடையில் வாழ்க்கை என்னும் நாடகத்தில் நான் அவருக்கு மகளாகப் பிறந்து மகளாகவும் வாழ்ந்ததை வரப்பிரசாதமாக நினைக்கிறேன். இவ்வாறு கமலா செல்வராஜ் கூறியுள்ளார்.

(தொடரும்)

# சிறிய தவறு பெரிய இழப்பு



தவறான உத்திகள், தயாரிப்புகள், சந்தையிடுதல்களால் சரிந்த நிறுவனங்கள் ஏராளம். இதற்கு மிகப் பெரிய நிறுவனங்கள் சிறிய நிறுவனங்கள் என்கிற வித்தியாசங்கள் எதுவும் கிடையாது. நிறுவன வளர்ச்சியின் போக்கில் ஆரம்பத்தில் செய்த தவறுகளோ அல்லது தற்போது மேற்கொண்டிருக்கும் உத்திகளிலோ, எதிர்கால வளர்ச்சி குறித்த கணிப்புகளிலோ எது ஒன்றில் தவறு நிகழ்ந்தாலும் நிறுவனங்கள் கடும் இழப்புகளை சந்திப்பது என்னவோ உறுதி. இதன் காரணமான சில நிறுவனங்கள் அதல பாதாள சரிவுகளைக் கண்டுள்ளன என்பதும் உண்மை. அப்படி சந்தித்த நிகழ்வுகள் உலக அளவில் ஏராளம் உள்ளன.

சில மாதங்களுக்கு முன்பு சாம்சங் நிறுவனம் தனது கலக்சி -7 ஸ்மார்ட்போனை வெளியிட்டது. பரவலாக வரவேற்பும் பெற்றது. ஆனால் ஒரு சில இடங்களில் அதன் லித்தியம் பற்றரி வெடித்த சம்பவங்களால் அதுவரை விற்பனை செய்திருந்த மொத்த கலக்ஸி 7 ஸ்மார்ட்போன்களையும் திரும்ப பெறுவதாக அறிவித்தது. ஆனால் அதுவரை விற்பனை செய்திருந்த போன்களின் எண்ணிக்கையோ 25 லட்சத்துக்கும் அதிகம். இதனால் சுமார் 2.600 கோடி டொலர் சந்தை மதிப்பை சில தினங்களுக்குள் இழக்க நேர்ந்தது அந்த நிறுவனம். கலக்சி நோட் 7-ஐ திரும்பப் பெறுவதாக நிறுவனம் அறிவித்தாலும் இழந்த சந்தையை மீண்டும் பெறுவது சாதாரணமானதல்ல என்பது சாம்சங்கிற்கு நன்றாகவே தெரியும்.

சர்வதேச அளவில் இதுபோல பல தயாரிப்புகள் சந்தையிலிருந்து திரும்பப் பெறப்படுகின்றன. இந்த சந்தையை புரோக்கன் மார்க்கெட் அல்லது திரும்ப பெறும் (Recall) சந்தை என்று அழைக்கின்றனர். சந்தையின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் என்று எதிர்பார்க்கப்பட்டு, தவறான முடிவுகளைக் கொடுத்த எல்லாமும் இதில் அடங்குகிறது. சர்வதேச அளவிலான சந்தை நடவடிக்கைகளில் சில தவறுகள் தவிர்க்க முடியாது என்றாலும் அதில் மீண்டு வரும் நிறுவனங்களே சந்தையில் நிலைத்து நிற்கின்றன.

### வாகன சந்தை

இதற்கு சமீபத்திய உதாரணமாக ஃபோக்ஸ்வேகன் விவகாரத்தை குறிப்பிடலாம். புகையளவு கட்டுப்பாடு கருவிகளில் மோசடிகள் செய்ததால் சந்தையிலிருந்து 1.88 லட்சம் கார்களை திரும்ப பெற்றது இந்த நிறுவனம். தவிர பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டு, தவறை ஒப்புக்கொள்ளும் நிலைமை வரை சென்றது. இதில் அந்த நிறுவனத்துக்கு ஏற்பட்ட இழப்போ 1.800 கோடி டொலர்.

பல கார் தயாரிப்பு நிறுவனங்களுக்கும் ஜப்பானின் டகடா நிறுவனம் ஏர்பேக்கை சப்ளை செய்து வந்தது. ஆனால் அந்த ஏர்பேக்குகள் அவசர காலங்களில் சரியாக விரிய வில்லை என்கிற புகாரை அடுத்து பல கார் நிறுவனங்களும் சுமார் 6 கோடி டகடா ஏர்பேக் பொருத்திய கார்களை சந்தையிலிருந்து திரும்பப் பெற்றன இந்த வகையில் டகடா நிறுவனத்துக்கு ஏற்பட்ட ஆண்டு நஷ்டம் 121 மில்லியன் டொலர். ஆனால் கார்களை திரும்ப பெற்ற வகையில் நிறுவனங்களுக்கு ஏற்பட்ட நஷ்டமோ 66,500 கோடி யூரோ.

மாருதி நிறுவனம் தனது வாகனங்களில் பயன்படுத்திவரும் ஸ்வீடனின ஆட்டோலிவ் ஏர்பேக்கை கட்டுப்படுத்தும் மென்பொருளில் பிரச்சினை எழுந்ததையடுத்து இந்தியாவில் தனது பல ஆயிரம் கார்களை திரும்ப பெறுவதாக அறிவித்தது. இப்படி 20 ஆயிரம் எஸ் கிராஸ் கார்களையும், 75,500 பெலெனோ கார்களையும், 2,000 செடான் டிசயர் கார்களையும் திரும்ப பெற்றது. இந்த ஆண்டின் ஏப்ரல் மே மாதங்களில் மட்டும் போர்டு நிறுவனம் 91 ஆயிரம் கார்களை திரும்ப பெற்றது.

### சில்லறை வர்த்தகம

உலகின் மிகப் பெரிய சில்லறை வர்த்தக நிறுவனமான வால்மார்ட் ஜெர்மனியில் இப்போதும் ஒரு நிலையான இடத்தை அடைய முடியவில்லை என்கிறது ஆய்வுகள். கலாசார ரீதியான தவறான புரிதல் மற்றும் ஊழியர்களை தவறாக கையாளுவதால் அங்கு நட்டத்தில் இயங்கும் நிலையில் உள்ளது. இதனால் ஆண்டுக்கு பல லட்சம் டொலர் இழப்புகளை சந்தித்து வருகிறது. இதை அறிவிக்கவில்லை என்றாலும் ஆண்டுக்கு 200 முதல் 300 மில்லியன் டொலர் வரை இழப்பு ஏற்படுவதாக புள்ளி விவரங்கள் சொல்கிறது.

அமெரிக்க பாணியில் ஊழியர்களை வேலைக்கு ஈடுபடுத்துவதும், காலையில் தினமும் வால்மார்ட், வால்மார்ட் என 'வார்ம் அப்' செய்ய வைப்பதும் ஊழியர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. வால்மார்ட்டில் பணியாளர் சங்கங்கள் அமைத்துக் கொள்ள முடியாது. ஆனால் ஜெர்மனியினர் இயல்பாகவே தொழிலாளர் உணர்வு கொண்டவர்கள். இதனால் ஜெர்மனியில் வால்மார்ட் திருமபப் பெறும் நிலைமையில் உள்ளது.

இந்தியாவில் நூடுல்ஸ் சந்தையில் 56 சதவீதத்தை வைத்திருந்த மாகி ஒரு சில மாதங்கள் தடை செய்யும் நிலைமைக்கே சென்றது கவனிக்க வேண்டியது. அந்த நிறுவனம் சுமார் 40 கோடி மாகி பாக்கெட்டுகளை சந்தையிலிருந்து திரும்ப பெற்று அழித்தது. மாகி நூடுல்ஸில் நஷ்டம் ரூ. 200 கோடியும் அதை திரும்ப பெற்று அழிக்க 100 கோடி வரையிலும் நெஸ்ட்லே நிறுவனம் செலவிட்டது. மீண்டும் சந்தையில் நுழைந்தாலும்.இப் போது பல நிறுவனங்களும் மிகப் பெரிய போட்டியை அளித்து வருகின்றன.

### இண்டெல் வாட்ச்

இதுபோல பலதரப்பட்ட சந்தைகளிலும் திரும்ப பெறும் நடவடிக்கைகள் இருந்து வருகின்றன. இண்டெல் நிறுவனம் தனது பிட்னஸ் கடிகாரமான 'பேசிஸ் பீக்' கடிகாரத்தை நுகர்வோரிடமிருந்து கிடைத்த அனுபவங்களின் காரணமாக திரும்ப பெற்றது. அதிக வெப்பத்தை வெளிப்படுத்தியதால் இவற்றை திரும்ப பெற வேண்டிய சூழல் அந்த நிறுவனத்துக்கு ஏற்பட்டது.


### மருந்து பொருட்கள்

இந்த வகையில் மருந்து நிறுவனங்களின் சந்தை முக்கியமானது. தடை செய்வதன் காரணமாக திரும்ப பெறுகிற நடவடிக்கைகளைவிட பயன்படுத்துபவர்களுக்கு ஏற்படும் தவறான விளைவுகளால் திரும்ப பெறப்பட்டுள்ளன. குறிப்பாக 2000ம் ஆண்டில் அமெரிக்காவில் உடல் குறைப்புக்காக அறிமுகப்படுத்தப்பட்ட பிபிஏ (PPA) என்கிற மருந்து சந்தையில் வேறு விளைவுகளை ஏற்படுத்தியது. மூளையில் ரத்தக் கசிவு, பக்கவாதம் உள்ளிட்டவற்றுக்கு காரணமாக அமைந்தது. அதுபோல மெரிடியா என்கிற மருந்தும் பக்க விளைவுகளை ஏற்படுத்தியதால் திரும்ப பெறப்பட்டன. தவறான பொதியிடல் முறைகளாலும் மருந்துகள் திரும்ப பெறப்பட்டுள்ளன.

பொதுவாக நிறுவனங்கள் தங் தவறுகளை திருத்திக் கொள்ளும் விதமாக தயாரிப்புகளை திரும்ப பெறுவதும் உத்திகளை மாறறுவ துமசரியான நடவடிக்கைதான். ஆனால் அவற்றுக்கு பின்னே பன் மடங்கு வலிமையான உழைப்பும் சமூக வளங்களும் வீணடிக்கப்படுவதையும் தொழில் துறை தீவிரமாக சிந்திக்க வேண்டும்.




# சுற்றுலா நகரங்களில் கொழும்பு 4-வது இடம்



உலகின் வேகமாக வளர்ந்து வரும் சுற்றுலா நகரங்களில் நான்காவது இடத்தில் கொழும்பு தரப்படுத்தப்பட்டுள்ளது. Mastercard இனால் வருடாந்தம் வெளியிடப்படும் Global Destinations Cities சுட்டெண் தரப்படுத்தலில் இந்த விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்தச் சுட்டெண்ணின் பிரகாரம் இலங்கையின் வர்த்தக தலைநகராகத் திகழும் கொழும்பு 19.57 சதவீத வளர்ச்சியைக் கடந்த ஏழு ஆண்டுகளில் பதிவு செய்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. சர்வதேச சுற்றுலாப் பயணிகள் பெருமளவு வருகை தந்த நாடுகள் வரிசையில் ஜப்பானின் ஒஸாகா முதல் இடத்திலும், சீனாவின் செங்டு மற்றும் ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தின் அபுதாபி முறையே இரண்டாம் மற்றும் மூன்றாமிடங்களை பெற்றுள்ளன. இலங்கையின் கொழும்பைத் தொடர்ந்து ஜப்பானின் டோக்கியோ ஐந்தாமிடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது. இதேவேளை, தாய்லாந்தின் பாங்கொக் நகரம் சுற்றுலாப்பயணிகள் அதிகளவு செலவு செய்யும் நகரங்களில் முதல் இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளதுடன், 2-ம் மற்றும் மூன்றாமிடங்களில் லண்டன் மற்றும் பரிஸ் ஆகியன தரப்படுத்தப்பட்டுள்ளன. 2009 - 2016 காலப்பகுதியில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு பதிவாகியிருந்தது. நாட்டின் யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர், சுற்றுலாப் பயணிகளின் வருகையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது என மாஸ்ரகாட்டினால் வருடாந்தம் வெளியிடப்படும் சுட்டெண்ணில் குறிப்பிடப்பட்டுள்ளது

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,479.21 | 6,534.77 ⇧ |
| எஸ் &; பி 20 சுட்டி | 3,587.35 | 3,617.32 ⇧ |

விலை அசைவுகளின் அடிப்படையில் புரள்வு (ரூபா.மில்.) 4,356.117

**உயர்வைக் காட்டிய பங்குகள்(ரூ.):** சிரஸ் கல்பிட்டி(5.00), சுவர்ணமஹால் பினான்ஸ் (1.90), அமானா தகாபுல்(1.00), ஈசன்விங் (8.60), சிரஸ் வாஸ்கடுவ(6.00).

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** களனி வேலி(50.70), ஓவசீஸ் ரியாலிற்றி(20.70), ஜே.கே.எச்(W)(1.00), அகுவிட்டி ரூ(60.10), முல்லர்ஸ்(1.20).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# பரந்தன் இரசாயன நிறுவனத்தை மீள இயக்க நடவழிக்கை

பரந்தன் பிரதேசத்தில் அமைந்துள்ள பரந்தன் கெமிக்கல் கம்பனியை அரச தனியார் பங்காண்மையின் மூலமாக மீண்டும் இயங்கச் செய்வதற்கு அரசு திட்டமிட்டுள்ளதாகத் தொழிற்துறை மற்றும் வாணிபத்துறை அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இதற்காக பிரேரணைகளைக் கோரியுள்ளதாகவும், இந்த வருட இறுதிக்குள் சேதமடைந்துள்ள பரந்தன் கெமிக்கல் கம்பனியின் கட்டடங்களைத் திருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

தொழிற்சாலையின் செயற்பாடுகளை மீண்டும் முன்னெடுக்கச் செய்வதற்கு 525 மில்லியன் ரூபாய் வரை செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. பொருளாதார முகாமைத்துவத்துக்கான அமைச்சரவைக்குழு பரந்தன் கெமிக்கல் தொழிற்சாலையை மீளக்கட்டமைப்பது தொடர்பில் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது. பரந்தன் கெமிக்கல் 150 மில்லியன் ரூபாயை 2015 இல் இலாபமாக பதிவு செய்துள்ளதாகவும், இந்நிலையில் இதன் மறுசீரமைப்பு செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு திறைசேரியிலிருந்து நிதியை பெற்றுக் கொள்ள வேண்டிய தேவை இல்லை எனவும் பரந்தன் கெமிக்கல் கம்பனியின் தொழிற்சங்க அங்கத்தவர்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன் பரந்தன் கெமிக்கல் கம்பனியை மறுசீரமைப்பு செய்ய வேண்டிய தேவை இல்லை எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 144.66 | 148.46 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 186.85 | 193.32 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 161.29 | 167.50 |
| சுவிஸ் பிராங் | 148.80 | 154.84 |
| கனேடிய டொலர் | 109.31 | 113.74 |
| அவுஸ்திரேலிய டொலர் | 109.37 | 114.33 |
| சிங்கப்பூர் டொலர் | 105.48 | 109.44 |
| ஜப்பான் யென் | 1.42 | 1.48 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.19 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 39.94 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# சர்வதேச நல்லொழுக்க தினம்- ஒக்டோபர் 03





சர்வதேச தினங்களில் "சர்வதேச நல்லொழுக்க தினம் - ஒக்டோபர் 03" ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்டு சர்வதேச ரீதியாக அனுஷ்டிக்கப்படுவதன் மூலம் அன்றைய தின நோக்கினை அடைய அனைத்து சமுதாயத்தையும் விழிப்படையச் செய்து செயற்பாடுகளை முன்னெடுத்து செயற்பட வேண்டும் என்ற சிந்தனையிலே உருவாக்கப்பட்டது.

அந்தவகையிலே சர்வதேச நல்லொழுக்க தினம், சர்வதேச மக்கள் நல்லொழுக்கமுடைய சமுதாயமாக வாழவேண்டும் அதற்காக சமுதாயம் எதனை செய்ய வேண்டும், எதனை செய்யக் கூடாது என்று சிந்திக்க வைப்பதற்கான செயற்பாடுகளை அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், சமூக நிறுவனங்கள் மற்றும் ஏனைய துறை சார்ந்த நிறுவனங்கள் இன்றைய சமூக மக்களுக்கு அவர்களை சென்றடையக்கூடிய முறையில் ஆற்ற வேண்டும். ஆனால் இவ்விடயத்தை எவ்வளவு தூரம் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது என்பது ஒரு புறம் இருக்க இது முழுமை பெற்றதா என்பது கேள்விக்குறியே!

நல்லொழுக்கம் என்பது அந்தந்த நாடுகளின் பண்பாடு, பாரம்பரிய முறைகளுக்கு ஏற்ப வேறுபாடு இருந்தாலும் பொதுவாக "மனிதன் மனிதத் தன்மையோடு வாழ்தல் வேண்டும்" எனும் கருத்திற்கமைய வாழ்தலை விடுத்து மனிதன் மனிதத்தன்மையில்லாது (மிருக, அசுரகணங்களுடன்) வாழ்வதை தடுப்பதில் நல்லொழுக்கம் பொதுவுடமை நீதியாகும்.

ஆறறிவுள்ள மனிதன் மகிழ்வாக வாழ்ந்து மற்றையவர்களும் மகிழ்வாக வாழவேண்டும் என நினைத்து செயலாற்றும் மனிதர்களே நல்லொழுக்க மனிதர்களாக இனங்காணப்படுகின்றார்கள்.

ஆனால் இன்று மனிதனையும், மனித சமுதாயத்தையும் மகிழ்ச்சியிலிருந்து விலக்கிக் கொள்ளும் செயற்பாடுகளாக மது, புகை, போதைப்பொருள் பாவனை உட்புகுந்து மனிதர்களையும், தனிமனிதனையும் அவனது குடும்பத்தையும் அத்துடன் மட்டுமல்லாது சமுதாயத்தையும் சீரழித்து நிம்மதியுடனான மகிழ்வான வாழ்வைக் கெடுக்கும் செயற்பாடுகளை ஆற்றி வருகின்றது.

இன்று எம் சமுதாயம் கடந்த 30 வருடங்களாக உள்நாட்டு போர்ச் சூழ்நிலையில் பட்ட அவலங்கள் அனைவரும் அறிந்திருந்த போதும் இன்று எமது சமுதாய நாளைய தலைவர்களாக வரும் இளம் சமுதாயம் மது, புகை, போதைப்பொருள் பாவனைக்கு உள்வாங்கப்பட்டு சமூக சீரழிவுகளாக கொள்ளை, கொலை, பாலியல் வல்லுறவு, பெண்கள் வன்முறை, சிறுவர் துஷ்பிரயோகம் என்பன அரங்கேறி எம் சமுதாயம் மகிழ்ச்சியை இழந்து வாழும் சமுதாயமாக மாறிவருகின்றதோ என்ற ஏக்கம் எம்மையெல்லாம் தொட்டு நிற்கின்றது.

இந்த மது,புகை, போதைப் பொருள் பாவனை சமூக சீரழிவு மாத்திரமல்லாது வியர்வை சிந்தி உழைத்த பணத்தினை விரயமாக்கி பொருளாதார வளத்தினை இழப்பவர்களாகவும், வாகன விபத்துக்கள் மூலம் அங்கவீனங்களையும், உயிரிழப்புக்களையும் மற்றும் நோய்களை யும் உருவாக்கும் வாய்ப்பினை தேடித் தருகின்றது. இவையனைத்தையும் பார்க்கின்ற போது மது,புகை, போதைப்பொருள் பாவனையாளர்கள் பாதிப்படைவது மாத்திரமல்லாது பாவிக்காத மக்களும அவர்களின் துன்பங்களை பார்த்து, அனுபவித்து மகிழ்ச்சியை இழந்து வாழ்கின்ற சூழ்நிலையே ஏற்படுகின்றது.

ஆகவேதான் இன்றைய ஜனாதிபதி போதைப்பொருள் தடுப்பு செயலணியை உருவாக்கி "போதையிலிருந்து விடுதலையான நாடு" எனும் தொனிப் பொருளில் நாடுபூராகவும் விழிப்புணர்வு நிகழ்வினை நடத்தி தொடர் செயற்பாடுகளை ஆற்ற வழிசமைத்துள்ளார். இது ஏற்கனவே இச் செயற்பாடுகளை ஆற்றி வரும் நிறுவனங்களுக்கு உறுதுணையாக அமையும் வாய்ப்பு கிட்டியுள்ளது.

மது,புகை,போதைப் பொருள் பாவனையிலுள்ளவர்களையும், அதற்கு அடிமையானவர்களையும் மாற்ற வேண் டும்.

ஆனால் அக்காரியம் சுலபமுமல்ல. குறுகிய காலத்தில் முடியுமானதுமல்ல, ஆனால் அவர்களை பழக்கத்திலிருந்து விடுவித்து மாற்றும் செயற்பாடுகளை செய்வது தேவையாகும். இதனைச் செய்வதோடு இன்று முன்னுரிமைப்படுத்தி உடனடியாக நாம் ஒவ்வொருவரும் செய்ய வேண்டியது "வருமுன் காப்போம்"

இன்றைய இளம் சமுதாயம் (குறிப்பாக மாணவர்கள்) மது, புகை, போதைப்பொருள் பாவனைக்கு உட்புகாது தடுத்து அவர்களை காப்பாற்றி நல்லொழுக்கமுள்ள நல்லதொரு சமுதாயத்தை உருவாக்குவதே இன்றைய எமது சமுதாயத்திற்கும் உரிய முக்கிய செயற்பாடு ஆகும்.

இச்செயற்பாடுகளாக இளமையிற் கற்கின்ற கல்வி ஒழுக்கங்களே ஒரு மனிதனை மேம்படுத்துகின்ற வகையில் மாணவர்களிடையேயும், இளம் சமுதாயமிடையேயும் மது,புகை, போதைப் பொருள் பாவனைக்கு உட்புகாது தடுத்தலுக்கான விழிப்புணர்வு செயற்பாடுகளை செய்து அவர்களின் மனங்களில் மாற்றத்தை உருவாக்கி செயற்பட வைப்பதே இன்றைய தேவையும் செயற்பாட்டின் வெற்றியுமாகும்.

இதில் நாம் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டியவை.

1.நான் இதனை பாவிப்பதில்லை, என் குடும்பத்திலும் ஒருவரும் பாவிப்பதில்லை ஆகவே எனக்கோ என் குடும்பத்திற்கே பாதிப்பில்லை என நினைப்பது பிழையான எண்ணமாகும் உதாரணமாக சமூக, அயலவர்கள் பாவிப்பதனால் அவர்கள் செய்யும் செயற்பாடுகள் என்னையும், எனது குடும்பத்தையும் பாதிக்கும்.

2.நான் மருந்து மாதிரி அளவாக பாவித்து மற்றவர்களுக்கும் எனது குடும்பத்திற்கும் தொந்தரவு இல்லாமல் இருக்கின்றேன் என்பது ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாகும்.

உதாரணமாக மருந்தாக பாவிப்பதன் அளவு யாரால் தீர்மானிப்பது ஒரு புறமிருக்க அதன் அளவு காலம் செல்லச்செல்ல பாவனையின் அளவு அதிகரித்து எம் உடலை பாதிப்பதோடு எம் குடும்பத்திலுள்ளவர்களையும் இப் பழக்கத்திற்கு உள்வாங்கப்படுவது.

3.இப்பாவனைப் பொருளுக்காக செலவழிக்கப்படும் பணத்தினை சேகரித்தால் எமக்கும் எம் குடும்பத்திலுள்ளவர்களுக்கும் எத்தனையோ அவசியமான, சந்தோசமான வாழ்க்கைக்கு தேவையானவற்றை பெற்று சந்தோசமாக வாழலாம்.

4.எவ்வளவு ஆற்றல், வசதி இருந்தாலும் சில இடங்களில் சில வேளைகளில் இவன் குடிகாரன் என்ற பெயருடன் தன் கௌரவத்தை இழப்பது மட்டுமல்லாது இவரது குடும்பமும் அக்கௌரவத்தை இழக்க வேண்டியுள்ளது.

5.மது,புகை,போதைப் பொருள்பாவனை எமக்கு அறிவை தருகின்றது, ஆற்றலை தருகின்றது. சந்தோசத்தை தருகின்றது என்பது எல்லாம் மாயை. சிந்தித்து பார்த்தால் இப்பாவனையில் இல்லாதவர்கள் இவர்களை விட மேன்மை நிலையில் எத்தனையோ பேர் இருப்பதை காண்கின்றோம். இன்று எம்மால் ஏற்றுக்கொள்ளக்கூடிய வெளிப்படையாக தெரிவது எம் சமுதாய பெண்மணிகள் பெரும் கல்வியாளர்களாகவும், ஆற்றல் படைத்தவர்களாகவும் திறமையான நிர்வாகிகளாகவும் கடின உழைப்பு உள்ளவர்களாகவும் வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள். இவர்கள் அனைவரும் மது, புகை, போதைப்பொருள் பாவனையில் ஈடுபடாது தமது திறமைகள், ஆற்றல்களை வெளிப்படுத்தி வருகின்றார்கள்.

ஆகவே இன்றைய நாளில் "மது,புகை, போதைப் பொருள் பாவனையற்ற நல்லொழுக்க சமுதாயத்தை உருவாக்க முன் வருவோம்" என திடசங்கற்பம் கொண்டு ஒவ்வொருத்தரும் இப்பாவனையைத் தடுத்தலுக்கான தமக்கு தெரிந்த உத்திகளை கையாண்டு எம் சமுதாயத்தை இவ் அழிவிலிருந்து காப்பாற்றி நாளைய சமுதாயத்திற்கு நற்காரியம் புரிய அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோமாக!

க.ஆ.குலநாதன்
இணைப்பாளர்
வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம்

ஆபத்துக்களை விட ஆபத்தான செய்திகள் ஆபத்தானவை.

- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P: 021 567 1530
website : www.valampurii.lk

## முதல்வர் விக்னேஸ்வரனின் பாதுகாப்பை உறுதி செய்யுங்கள்

வடக்கின் முதலமைச்சரும் தமிழ் மக்களின் நம்பிக்கைக்குரிய தலைவருமாகிய நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரன் அவர்களின் உயிருக்கு உலை வைக்கும் முயற்சிகளில் சிலர் ஈடுபட்டுள்ளனர் என்ற அதிர்ச்சித் தகவல் தமிழ் மக்களைக் கதிகலங்கச் செய்துள்ளது.

நடந்து முடிந்த எழுக தமிழ் மாபெரும் எழுச்சிப் பேரணி வடக்கின் முதலமைச்சருக்கு தமிழ் மக்களிடம் இருக்கக்கூடிய அதிஉயர்ந்த செல்வாக்கை வெளிக்காட்டியதை அடுத்து, தென்பகுதியில் இருக்கக்கூடிய பேரினவாதிகள் முதல்வர் விக்னேஸ்வரனுக்கு எதிராகக் கண்டனம் வெளியிடத் தலைப்பட்டுள்ளனர்.

கூடவே முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கான செல்வாக்கு தமிழ் மக்கள் மத்தியில் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதைக் கண்டு பொறுக்க முடியாத ஒரு சில தமிழ் அரசியல்வாதிகளும் முதலமைச்சருக்கு எதிராகச் சதித்திட்டம் தீட்டும் வேலைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதைப் பார்க்கும்போது தென்பகுதிப் பேரினவாதிகளும் வடக்கிலுள்ள தமிழ் அரசியல்வாதிகள் சிலரும் இணைந்து வடக்கின் முதலமைச்சரை வெளியேற்ற திட்டம் தீட்டுகின்றனர் என்ற முடிவுக்கு வருவதில் தவறில்லை. இதை உறுதி செய்யும் வகையில் சில முக்கிய தகவல்களும் கசியத் தொடங்கியுள்ளன.

விடுதலைப் புலிகளின் தோல்விக்குப் பின்னர் தமிழ் மக்கள் தங்கள் உரிமை தொடர்பிலோ அன்றி வேறு எந்த விடயம் குறித்தோ குரல் கொடுக்கக் கூடாது என்பது பேரினவாதிகளின் நிலைப்பாடாக உள்ளது.

எனினும் பேரினவாதிகளின் இந்த நிலைப்பாட்டுக்கு வடக்கின் முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரன் அவர்கள் தடையாக இருக்கின்றார்.

ஏற்கெனவே தமிழ் மக்களின் முக்கிய பிரதிநிதிகளுக்கு பதவிகளைக் கொடுத்து அவர்களை வாலாயம் செய்து வைத்திருக்கும் நிலையில், முதல்வர் விக்னேஸ்வரன் தமிழ் மக்களின் உரிமைகள்; அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் வெளிப்படையாகத் தெரிவித்து வரும் கருத்துக்களால் தென்பகுதி அதிர்ந்து போயுள்ளது.

கூடவே நாங்கள் சொன்னால் தமிழ் மக்கள் அதை மீற மாட்டார்கள் என்று தென்பகுதிக்கு உத்தரவாதம் கொடுத்த ஒரு சில தமிழ் அரசியல்வாதிகளுக்கும் வடக்கின் முதல்வரின் வெளிப்படைத் தன்மை பேரிடியைக் கொடுத்துள்ளது.

இந்நிலையில்தான் வடக்கின் முதல்வரைப் பதவியில் இருந்து ஏதோவொரு வகையில் விலகச் செய்வதற்கான சதிகள் ஆரம்பித்துள்ளதான தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனவே வடக்கின் முதலமைச்சரின் பாதுகாப்பை உறுதி செய்வது அரசின் தலையாய கடமையாகும். இது விடயத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதீத கவனம் எடுக்க வேண்டும்.

நடப்பது நல்லாட்சி என்று சொல்லப்பட்டாலும் நல்லாட்சியில் இருக்கக்கூடிய முக்கிய அமைச்சர்கள் முதல்வர் விக்னேஸ்வரனுக்கு எதிராகக் கருத்துக்கள் வெளியிட்டிருப்பது ஆரோக்கியமான செயற்பாடல்ல.

முக்கிய அமைச்சர்களின் இத்தகைய கருத்துக்களும் பேரினவாதிகளின் கண்டனங்களும் எங்கள் முதலமைச்சருக்கான பாதுகாப்புத் தொடர்பில் பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளன.

ஆகையால் அவரின் பாதுகாப்புக் குறித்து விசேட கவனம் செலுத்துவது அரசின் முக்கிய கடமையாகும்.

முதல்வரின் பாதுகாப்புத் தொடர்பில் பேரினவாதிகளுடன் சேர்ந்தியங்கும் தமிழ் அரசியல் வாதிகள் குரல் கொடுக்க மாட்டார்கள் என்பதால் பொது அமைப்புக்கள் மற்றும் தமிழ் மக்கள் ஒருமித்த குரலில் எங்கள் முதலமைச்சரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறான கோரிக்கைகளை முன்வைப்பது கட்டாயமானதாகும்.

# 64.9 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் சுமையில் தத்தளிக்கிறது நாடு

இலங்கையின்கடன்நெருக்கடியின் தீவிரம் குறித்து ஆய்வு பதிவொன்று சர்வதேச புகழ்பெற்ற பேர்ப்ஸ் சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையின்கடன்நெருக்கடியின் அளவு குறித்து யாருக்கும் தெரியாதென குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கைக்கமைய இலங்கையின் கடன் நெருக்கடி 64.9 பில்லியன் அமெரிக்க டொலராகும். அதில் 8 பில்லியனை சீனாவுக்கு வழங்க வேண்டும்.

இந்த அறிக்கைக்கமைய இந்த நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 75 வீதம கடனுக்காக பயன்படுத்தப்படுகின்றது. நாட்டின் வருமானத்தில் 95.4 சதவீதம் கடன் பணத்தை செலுத்துவதற்காக ஒதுக்கப்படுகின்றது.

கடந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளை சுட்டிக்காட்டியுள்ள இந்த அறிக்கையில் மகிந்த அரசாங்கம் கடன் பெறும் போது அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளது.

நிதி அமைச்சு வட்டாரங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, இவ்வாறான கடன் பெறும் நடவடிக்கை எவ்வளவு தூரம் மேற்கொள்ளப்படும் என்பதனை தெளிவுபடுத்த முடியாதென குறிப்பிடப்பட்டுள்ளது.

பேர்ப்ஸ் சஞ்சிகையின் அறிக்கைக்கமைய இவ்வாறு கடன் பெற்று அதிகமாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தில் நிர்மாணிக்கப்பட்ட அதிக செலவிலான பாரிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டங்களுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

2009 மற்றும் 2014ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் அரசாங்கத்தின் கடன் பெறுமதி இரட்டிப்பாகியிருந்த நிலையில், உலகில் தனியான விமானங்கள் போன்று உபயோகமில்லாத திட்டங்களுக்காக பணம் செலவிடப்பட்டமையே வெளிப்புற கடன்கள் இரட்டிப்பாகுவதற்கு காரணம் என குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் இந்த செலவுகளுக்குள் அதிக செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட அதி வேக நெடுஞ்சாலைகள் மற்றும் 42 மில்லியன் டொலரில் செலவிட்டு அம்பாந்தோட்டை துறைமுகத்தில் நிலத் தடி கல் ஒன்றை நீக்கியமை போன்றவைகளுக்கு அதிகமாக செலவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்தில் மாத்திரம் இலங்கை 4.5 பில்லியன் டொலர்களை கடனாக செலுத்த வேண்டும் எனவும் அடுத்த வருடம் 4 பில்லியன் டொலர்களை செலுத்த வேண்டும் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## உணவகத்தில் சிலிண்டர் வெடித்து 77 பேர் படுகாயம்

(மாட்ரிட் )

ஸ்பெயின் நாட்டில் உள்ள வேலேஸ்-மலாகா நகரில் நடைபெற்ற விழாவின்போது அங்குள்ள ஒரு உணவகத்தின் சமையலறையில் ஹாஸ் சிலிண்டர் வெடித்த விபத்தில் 77 பேர் படுகாயம் அடைந்தனர்.

ஸ்பெயின் நாட்டின் தென் கடலோரப் பகுதியில் உள்ள புகழ்பெற்ற சுற்றுலாத்தலமானமலாகாஅருகேவேலேஸ்-மலாகா என்ற நகரில் நேற்று முன்தினம் உள்ளூர்விழா வெகு விமரிசையாக நடந்து கொண்டிருந்தது.

விழாவுக்கு வந்தவர்கள் இங்குள்ள 'லா போஹேமியா' என்ற உணவகத்தில் சரப்பிட குவிந்திருந்தனர். அப்போது, உணவகத்தின் சமையல் அறையில் உள்ள எரிவாயு சிலிண்டரில் கசிவு ஏற்பட்டு திடீரென தீப்பிடித்தது.

பீதியடைந்த மக்கள் உயிர்பயத்துடன் நுழைவு வாயிலை நோக்கி, முந்தியடித்து ஓடினர். அப்போது, பயங்கர சப்தத்துடன் ஹாஸ் சிலிண்டர் வெடித்து சிதறியது. சிலிண்டர் வெடித்த வேகத்தில் சமையல் அறையில் இருந்த பொருட்கள் எல்லாம் சிதறித் தெறித்ததில் 77 பேர் படுகாயம் அடைந்தனர்.

## வர்த்தக நிலையம் தீ வைப்பு

நோர்வூட் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொகவந்தலாவ எல்பட கீழ்ப்பிரிவு தோட்டத்தில் உள்ள வர்த்தக நிலையம், நேற்று அதிகாலை 5.30 மணியளவில் இனந் தெரியாதவர்களினால் தீ வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனால் வர்த்தக நிலையம் முழுமையாக சேதம் அடைந்துள்ளதாகவும் தீயினால் வர்த்தக நிலையத்துக்குள் இருந்த தளபாடங்கள் மற்றும் பொருட்கள் ஆகியவற்றுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.(இ-7)

## காலநிலை மாற்றமடையும்

நாட்டில் எதிர்வரும் காலங்களில் மழை பெய்யக் கூடும் என வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. நிலவும் வரட்சியான கால நிலை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு பின்னர் மாற்ற மடையலாம் எனவும் தெரிவித்துள்ளது. (இ-7)

## இணையங்களில் நாமல் ஆதிக்கம்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் நாமல் ராஜபக்ஷ நேற்று முன்தினம் திடீர் விபத்தொன்றில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

விளையாடிக் கொண்டிருக்கும் போது ஏற்பட்ட காயம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த புகைப்படங்கள் சில நேற்று முன்தினம் ஊடகங்களில் வெளியாகியிருந்தன.

இருப்பினும் நாமல் ராஜபக்ஷவின் இந்த விபத்து புகைப்படங்கள் பல இணையத்தளங்களில் பிரபல்யமடைந்துள்ளன. (இ-7)

## பூங்கந்தை தோட்ட மக்களுக்கு 2017இல் புதிய வீடமைப்பு திட்டம்

(கொழும்பு)

இயற்கை அனர்த்த அபாயத்தை எதிர் நோக்கியிருக்கின்ற பத்தனை மவுண்ட் வேர்ணன் பூங்கந்தை தோட்டத்தைச் சேர்ந்த 68 குடும்பங்களுக்கு பாதுகாப்பான இடமொன்றில் அடுத்த வருடம் ஜனவரி மாதம் 68 வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு அமைச்சர் திகாம்பரம் நடவடிக்கை எடுத்துள்ளார் என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தேசிய அமைப்பாளரும் மத்திய மாகாண சபை உறுப்பினருமான சோ. ஸ்ரீதரன் தெரிவித்துள்ளார்.

பத்தனை - பூங்கந்தை தோட்டத்தில் தற்காலிக குடில்களில் வாழுகின்ற 40 குடும்பங்களுக்கு மலையக புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் ஊடாக வழங்கப்பட்ட கூரை தகரங்களை பகிர்ந்தளிக்கும் நிகழ்வில்கலந்து கொண்டு பேசிய போதே இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து 6.30 மணி வரை யாழ்.பிரதேசத்தில நாவலடி, பூம்புகார், அரியாலை கிழக்கு ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் பெரியார்குளம் (பூந்தோட்டம்), குட்செட் வீதி, தோணிக்கல் சிவன் கோவில் பிரதேசம், சாம்பல் தோட்டம் கிராமம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில நொச்சிக்குளம் பிரதேசம், அரிப்பு, சவேரியார் குளம், நானாட்டான், செம்மண் தீவு, முருங்கன்பிட்டியிலிருந்து அச்சங்குளம் வரை, CECB ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### மனிதன், அறிவின் உயர்வில் ஈசன்



கடவுள் எனப் படுபவனே மனிதனானான்,கருத்தியங்கி, கருத்துயர்ந்து,
கருத்தறிந்தான்கடவுளாய் அனைத்துமே
கண்டு விட்டான்காண்பவனே ஆதியந்த
மாகி நின்றான்கடவுள் நிலை யறிந்தவனே
அறியாதோர்க்குக்கருத்துணர்ந்த நூல்கள் பல
எழுதிவைத்தான்கடவுள் ரகசியமதனை வெளியாய்க்
காட்டும்கடமையே சிறந்ததெனக் கொண்டான் ஞானி.

எந்தத் தத்துவத்தைக் கடவுள் என்று சொல்லுகிறோமோ, அதுவே அதன் பரிணாம உச்சத்தில் மனிதனாகவும் இருக்கிறது.

மனிதன் தன் அறிவை இயக்கி, அறிவை உயர்த்தி, அறிவையும் அறிந்து விட்டான். அவ்விளக்க நிலையில் தானே எல்லாமாய் இருக்கும் நிலையையும் கண்டுவிட்டான். காண்பவனே மூலமாகவும் முடிவாகவும் இருக்கும் ஏக நிலையைக் கண்டு கொண்டான்.

இந்த நிலையை அறிந்தவன் அறியாதவர்களுக்கு உணர்த்தும் சிறந்த நோக்கத்தோடும், பொதுவாக அறிவைப் பண்படுத்தும் பொருட்டும், ஆராயத் தூண்டும் பொருட்டும், பல நூல்களும் எழுதினான்.

மூலாதாரத் தத்துவத்தின் இரகசியத்தை அறியா நிலையில் - அறிய வேண்டிய நிலையில் - உள்ள யாவருக்கும் அறிய ஆவன செய்வதைத் தன்னிலை விளக்கம் பெற்ற ஞானிகள் தங்கள் கடமையாக் கொண்டார்கள். தம்மையறிந்தவுடன் ஞானிகளின் கடமை தீர்ந்து விடவில்லை.

அரூபமான பேராதார சக்தி நிலையில், ஞாபகத்துடன் பிரபஞ்சத்தை நோக்குகிறான். கோடானு கோடி உருவங்களில், தானே பல்வேறு திறத்தவனாய், வேறுபாடாய், உயிரியக்கம் அறிவியக்கமாய், அறிவியக்க நிலையிலும் பல தரப்பட்டதாய், அறிவு நிலையாய், அறிவு நிலையிலும் பல்வேறு துறைகளாய், அளவினதாய், இருப்பதை உணருகிறான்.

# ஆண்களுக்கான உயரம் பாய்தல் மேல் மாகாணத்திற்கு தங்கம்



யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்று வருகின்ற 42 ஆவது தேசிய விளையாட்டுப் போட்டியில் ஒவ்வொரு நாளும் சாதனைகள் பதிவாகியுள்ளன. நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் மேல் மாகாணத்தினை பிரதிநிதித்துவப்படுத்திய இஷான் சந்த ருவான் தங்கப்பதக்கத்தினை பெற்றுள்ளார். (கு)

# இளம் பறவைகள் வெற்றி


முல்லைத்தீவு உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற போட்டியில் சிலாவத்தை இளம் பறவைகள் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து முள்ளியவளை வளர்மதி விளையாட்டுக்கழகம் மோதியது.

இப்போட்டியில் சிலாவத்தை இளம் பறவைகள் விளையாட்டுக்கழகம் 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றியைப்பதிவு செய்தது. (கு)

# கரப்பந்தாட்டம் ஆரம்பம்

புத்தூர் சோமஸ்கந்தன் விளையாட்டுக்கழகத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவையொட்டி எதிர்வரும் 5.10.2016 அன்று மின்னொளியிலான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன. (கு)

# தேசிய விளையாட்டு விழாவில் மேலும் ஒரு சாதனை பதிவு



வடமாகாணத்தினை பிரதிநிதித்துவப்படுத்தி 42 ஆவது தேசிய விளையாட்டு விழாவில் கலந்து கொண்ட எஸ்.எம்.அமரசிங்க சுத்தியல் வீசுதல் போட்டியில் புதிய சாதனை படைத்துள்ளார். 42 ஆவது தேசிய விளையாட்டு விழாவின் இறுதி நாளான நேற்றே இச்சாதனை நிலை நாட்டப்பட்டுள்ளது.

இவர் 45.85 மீற்றர் தூரத்திற்கு எறிந்து மேற்படி சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

மேலும் நேற்றுமுன்தினம் நிமாலி லியனாராச்சி 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் 2 நிமிடங்கள் 3.5 செக்கன்களில் நிறைவு செய்து சாதனை நிறைவு செய்ததோடு போட்டியின் முதல் நாளில் தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி மாணவி ஜே.அனித்தா 3.41 மீற்றர் உயரம் பாய்ந்து புதிய தேசிய சாதனையை நிலை நாட்டியமை குறிப்பிடத்தக்கது. (கு)

# கணேசபுரம் கண்ணகி அடுத்த சுற்றுக்கு தெரிவாகியது



தம்பலவத்தை விநாயகர் விளையாட்டுக்கழகம் நடத்திக் கொண்டிருக்கும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் கணேசபுரம் கண்ணகி விளையாட்டுக்கழகம், முதலாவது சுற்றில் மருங்கைநகர் நாகர் விளையாட்டுக்கழகத்திற்கு எதிராக நடைபெற்ற போட்டியில் 1:0 என்று வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தெரிவாகியுள்ளது. (கு)



28 ஆவது இளைஞர் தேசிய விளையாட்டு விழாவில் கயிறு இழுத்தல் போட்டியில் உடுவில் பெண்கள் அணி இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது அவ் அணியினை படத்தில் காணலாம்.

# பொலிகை பாரதி விளையாட்டுக்கழக மின்னொளியிலான உதைபந்தாட்டம் பலாலி விண்மீன் சம்பியன்



பொலிகை பாரதி விளையாட்டுக் கழகம் நடத்தும் மின்னொளியிலான உதைபந்தாட்ட தொடரின் இறுதியாட்டம் 01.10.2016 அன்று நடைபெற்றது. இப்போட்டியில் இளவாலை யங்ஹென்றீஸை எதிர்த்து பலாலி விண்மீன் மோதியது.

முதல் பாதியாட்டத்தில் பரபரப்பாக இரு அணிகளும் ஆடியது. 5 ஆவது நிமிடத்தில் யங்ஹென்றீஸ் வீரர் தனேஸ் கோல் போட்டு அசத்த அடுத்த 8 ஆவது நிமிடத்தில் விண்மீன் அமலதாஸ் கோல் போட்டு ஆட்டத்தை சமநிலைப்படுத்தினார்.

முதல் பாதியாட்டம் 1:1 என்ற அடிப்படையில் நிறைவுற்றது. இரண்டாவது பாதியில் இலகுவான கோல் வாய்ப்பை யங்ஹென்றீஸ் வீரர்கள் தவற விட்டனர்.

விண்மீன் வீரர் டேமியன் காண்டிபன் சிறப்பாக ஆடினார். இரண்டாவது பாதியில் இரு அணி வீரர்களும் கோல் போடாத நிலையில் இரண்டாவது பாதி நிறைவுற்றது. இறுதியாட்ட நேர முடிவில் ஆட்டம் சமநிலையானது.

வெற்றியை தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சமநிலைதவிர்ப்பு உதையில் 4:2 என்ற ரீதியில் யங்ஹென்றீஸ் அணியை வீழ்த்தி பொலிகை பாரதியின் வெற்றிக்கிண்ணத்தை தன்வசப்படுத்தியது. ஆட்டநாயகனாக பலாலி விண்மீன் யூட் கெனடி தெரிவு செய்யப்பட்டார். (கு)

# இன்றைய போட்டி

வல்வெட்டித்துறை கழுகுகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் மின்னொளியிலான உதைபந்தாட்ட தொடரில் இன்று திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு நடைபெறும் போட்டியில் றோயல் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (கு)

# கடமை நிறைவேற்று அதிபர்கள் நாளை கொழும்பில் சந்திப்பர்

(யாழ்ப்பாணம்)

கடமை நிறைவேற்று அதிபர்களுக்கான முக்கிய சந்திப்பொன்று நாளை செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணியளவில் கொழும்பில் உள்ள கல்வி அமைச்சுக்கு முன்பாக நடைபெறவுள்ளது.

இதில் வட மாகாணத்தைச் சேர்ந்த அனைத்து கடமை நிறைவேற்று அதிபர்களையும் கலந்து கொள்ளு மாறும் இதற்கு வசதியாக அந்தந்த வலய இணைப்பாளர்களுடன் தொடர்பை ஏற்படுத்து மாறும் வட மாகாண கடமை நிறைவேற்று அதிபர் சங்கம் கேட்டுள்ளது. (ந)

## வடக்கில் விளை...

விளையாட்டு சந்ததியினர் நற்பண்புகள் நல்லறிவுகள் மற்றும் ஆற்றல்கள் கொண்ட உயர்வானவர்கள் என்ற எண்ணம் எமக்குள் ஏற்பட்டுள்ளது.

சீனாவின் முன்னாள் பெருந் தலைவரான மாவோ சேதுங்க, "உலகில் உள்ள வெவ்வேறுபட்ட கலாசாரங்களையுடையவர்களுக்கும் வெவ்வேறு மதங்களை சேர்ந்தவர்களுக்கும் வெவ்வேறு இனங்களை சேர்ந்தவர்களுக்கும் பொதுவானதொரு மொழி விளையாட்டே என கூறியுள்ளார்.

இவ் விளையாட்டு விழாவில் 100 மீற்றர் ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவில் வெற்றி பெறும் வீர வீராங்கனைகளுக்கு மோட்டார் சைக்கிள் வழங்குவதற்கும் புதிய சாதனைகளை நிலைநாட்டுபவர்களுக்கு ஒரு இலட்சம் பெறுமதியான அன்பளிப்பு உறுதிச்சீட்டை பரிசளிப்பதற்கு ரி.வி.எஸ் நிறுவனத்தினூடாக ஏற்பாடுகளை செய்துள்ளோம்.

இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்வது விளையாட்டு வீர வீராங்கனைகளின் திறமைகளை மேன்மேலும் முன்னேற்றி அவர்களை வெற்றி பெற செய்வதற்கும் உற்சாகத்தையும் ஊக்கத்தையும் வழங்குவதற்காகும்.

அடுத்த வருடங்களில் இவ்வாறு விளையாட்டுக்களில் வெற்றி பெறுபவர்களுக்கு பெறுமதியான பரிசில்களை வழங்க பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-9)

## ஜனாதிபதி...

வும் அரிதான விடயம் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இவர்கள், இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அமைச்சர்களான ராஜ்நாத்சிங், சுஸ்மா சுவராஜ், நிதிஸ் கட்காரி உட்பட பல உயர் மட்ட தரப்பினர்களை சந்திக்க உள்ளனர்.

கடந்த வருடம் ஜனவரி மாதம் இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் பின்னர் ஜனாதிபதி மூன்று முறை இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள அதேவேளை, பிரதமர் இரண்டு முறை விஜயம் செய்துள்ளார்.

நாளை மறுதினம் நியூசிலாந்திலிருந்து சிங்கப்பூர் ஊடாக பிரதமரும், அவரது பாரியாரும் புதுடில்லி செல்கின்றனர்.

அதேவேளை, எதிர்வரும் 15ஆம் திகதி ஜனாதிபதியும் அவரது பாரியாரும் புதுடெல்லி செல்கின்றனர் எனவும், தகவல்கள் வெளியாகியுள்ளது. (செ-11)

வலம்புரி
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## சிறை செல்லவுள்ளவர்களுக்கு...

சர் மேற்கண்டவாறு தெரிவித் தார். அவர் தொடர்ந்து உரை யாற்றுகையில்,

பேச்சாளர் பட்டியலில் எனது பெயர் முன்பு இடம் பெற்றிருக்கவில்லை. இறுதி நேரத்தில் என்னையும் பேசுமாறு அழைத்தமைக்கு நன்றி கூறுகின்றேன். ஒரு வேளை தெற்கிலே என்னை இப்பொழுது சித்திரித்துக் காட்டி வருவது என்னைத் தகாத ஒரு மனிதனாக ஏற்பாட்டாளர்கள் மனதில் எடுத்துக் காட்டியிருக்கக் கூடும்.

என்னைப் பேயாகவும் பூதமாகவும் தகாத மனிதப் பிறவியாகவும் சித்திரிப்பதற்கு முன்னர் நான் அண்மையிலே பேசிய பேச்சை சிங்களத்திலோ ஆங்கிலத்திலோ முறையாகச் சரியாக மொழிபெயர்த்து வாசித்து விட்டு, என்னை விமர்சித்திருந்தால் அதற்கான பதிலைத் தந்திருக்க முடியும்.

ஆனால் நான் சொல்லாததை எல்லாம் சொல்லி என்னை வைவது மனவருத்தத்தைத் தருகின்றது. முக்கியமாக தெற்கில் தேர்தலில் தோற்ற சிலர், சிறைத் தண்டனைக்கு இலக்காக வேண்டிய சிலர் எம்மை வைத்து அரசியல் வியாபாரம் நடத்த முற்பட்டிருக்கின்றார்கள். அவர்கள் வியாபாரத்துக்காவது நான் அவர்களுக்கு பயன்பட்டுள்ளேன் எனபதில் எனக்குத் திருப்திதான்.

வடமாகாணத்தில் 42 ஆவது தேசிய விளையாட்டு நடைபெறுகின்றது என்று கூறுவது எமக்குப் பெருமை தரும் அதே வேளையில். பல விளையாட்டுக்களை நடத்த எமக்கு வசதிகள் இல்லை. பிறமாகாணங்களில்தான் அவை நடத்தப்படுகின்றன. பல போட்டிகளை எம்மால் நடத்த முடியாதிருப்பதால் மனவேதனை அடைகின்றோம்.

இவ்வருட 42 ஆவது விளையாட்டு நிகழ்வுகளில் கோலூன்றிப் பாய்தல் நிகழ்வில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மாணவி ஜெகதீஸ்வரன் அனித்தா இலங்கையில் தேசிய மட்ட சாதனையாளராக தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது எமக்கு பெருமைகளைத் தேடித் தந்துள்ளது. தொடர் பயிற்சியும் கடின உழைப்பும் இன்று அனித்தாவை தேசிய மட்ட சாதனையை மீண்டும் கைப்பற்றிக்கொள்ள வைத்திருக்கின்றது.

தேசிய விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்ட உங்கள் அனைவரையும் வாழ்த்தி மேலும் மேலும் வெற்றிகளை நீங்கள் ஒவ்வொருவரும் பெற வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

எமது வேறுபட்ட மக்களை ஒன்று படுத்த விளையாட்டுக்கள் உதவி புரிகின்றன. மொழித் தடங்கல் எம்மைப் பிரிப்பதையும் நாம் காண்கின்றோம். சகோதர மொழியில் பாண்டித்தியம் பெறாததால் பல விடயங்களை நாம் மனம் விட்டு எமது சகோதர இனங்களுடன் பேச முடியாமல் இருக்கின்றது. விளையாட்டு வீர வீராங்கனைகள் ஆங்கில மொழித் தேர்ச்சி பெறறால் விளையாட்டுக்கள் பற்றிய சகல விடயங்களையும் நாம் அறிந்து கொள்ள அது உதவும்.

இப் பகுதியில் விளையாட்டுத் துறைகளில் சிறந்து விளங்குகின்ற பல இளைஞர், யுவதிகள் இருக்கின்ற போதிலும் அவர்கள் தற்கால நவீன யுக்திகளைக் கையாண்டு விளையாட்டுத் துறைகளில் முன்னேறுவதற்குரிய உள்ளக விளையாட்டு அரங்குகள், விளையாட்டு உபகரணங்கள் என்பன இல்லாத காரணத்தினால் விளையாட்டுகளில் நவீன விளையாட்டு முறைமைகளையும் உரிய பயிற்சிகளையும் சரியான பயிற்சித் தளங்களில் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளனர்.

அத்துடன் கடந்த கால நீண்ட போராட்டங்களும் அதன் விளைவாக வீடுகளில் முடங்கிக் கிடந்து காலத்தை கழித்து வந்ததும் இவர்களின் முன்னேற்றத்திற்கு ஒரு தடைக்கல்லாக அமைந்து விட்டது.

அந்த வகையில் வடமாகாணத் திற்குள்ளேயே கிளிநொச்சியில் சகல போட்டிகளையும் நடத்தப்பட்ட தேசிய விளையாட்டு விழா மீண்டும் இங்கு நடைபெற உதவுவதுடன்,

யாழ் மாவட்டத்தில் ஒரு நீச்சல் தடாகத்தை உள்ளடக்கிய உள்ளக விளையாட்டரங்கு ஒன்றை அமைத்துக் கொடுக்கக் கோருகிறேன்.

இதன் மூலம் உள்ளக நிகழ்வுகளில் மேலும் தேர்ச்சி பெற்று தேசிய போட்டிகளில் அச்ச உணர்வுகள் இன்றிப்போட்டியாளர்கள்கலந்து கொள்ள வழிவகுக்கும் என முதலமைச்சர் மேலும் தெரிவித்தார். (செ-9)

# உரிமையைக் கேளாமல்...

வடக்கில் சிங்களவர்களை குடியேறவேண்டாம் என நாம் கூறவில்லை. நாம் எந்தவொரு மதத்துக்கும் எதிரானவர்கள் அல்ல. எனினும், எமது மக்களின் தனியார் காணிகளில் மேற்கொள்ளப்படும் பலவந்தமான பௌத்தவிகாரை அமைக்கும் செயற்பாடுகளையே எதிர்க்கின்றோம். தென்பகுதியில் உள்ள இனவாதிகள் எதிர்ப்பார்கள் என்பதற்காக எமக்கான உரிமையைக் கோராமல் இருக்க முடியாது என்றும் அவர் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியில் தெரிவித்தார்.

எழுக தமிழ் பேரணி மற்றும் அதன் பின்னரான நிலைப்பாடுகள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் பகிர்ந்து கொண்ட கருத்துக்கள் சில வருமாறு,

கடந்த தேர்தலில் ஒட்டுமொத்த தமிழர்களும் நல்லாட்சி அரசாங்கத்துக்கு வாக்களித்தவர்கள். அரசின்மீது எதிர்பார்ப்பு இருந்த போதும் இலகுவில் செய்யக்கூடிய விடயங்கள் பலவற்றை அரசாங்கம் நிறைவேற்றவில்லை. ஆட்சி மாற்றத்தின் பின்னர் பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு தமிழ் மக்களின் கோரிக்கைகள் பல முன்வைக்கப்பட்டபோதும் அவற்றை அரசாங்கம் கவனத்தில் எடுக்க வில்லை.

எமக்கு தென்பகுதியில் உள்ள அரசியல் நிலைமைகள் புரியாமல் இல்லை. இருந்தாலும் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காகவே அரசியல் ரீதியாக எழுக தமிழ் பேரணிக்குச் செல்ல முடிவெடுத்தோம். அரசு தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்திசெய்வதில் கவனம் எடுக்க வேண்டும். அரசியல மைப்புத் தயாரிக்கும் பணிகள் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அரச தரப்பில் உள்ள அமைச்சர்கள் முன்னபின் முரணான கருத்துக்களைக் கூறிவருவதால் இதில் கூட திருப்தியற்ற தன்மை காணப்படுகிறது. சமஷ்டி அடிப்படையில் தீர்வொன்று கொடுக்கப்பட வேண்டும் என்பதே பல தசாப்தங்களாக தமிழ் மக்களால் முன்வைக்கப்படும் கோரிக்கையாகும்.

இரண்டு கட்சிகளும் இணைந்து அரசாங்கத்தை நடத்துவதால் தற்பொழுது கிடைத்திருக்கும் நல்ல சந்தர்ப்பத்தை தவறவிடக்கூடாது என்ற அபிப்பிராயம் பலரிடம் உள்ளது.

இந்த சந்தர்ப்பம் தவறவிடப்பட்டால் இதற்கு பிறகு நீண்டகாலத்துக்கு அரசியல மைப்பு மாற்றம் உள்ளிட்ட செயற்பாடுகள் நடப்பதற்கான சாத்தியங்கள் இல்லை. எனவே தமிழ் மக்களின் கோரிக்கைகளை நிறை வேற்ற வேண்டும் என வலியுறுத்தியே இந்த எழுக தமிழ் பேரணியை நடத்தியிருந்தோம். எனினும் தெற்கில் அதை இனவாதப் பேரணியாகச் சித்தரிக்கிறார்கள்.

தெற்கில் பேரணிகள் மற்றும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் போது, அரசாங்கம் ஜனநாயக சூழலை ஏற்படுத்தியிருப்பதால் அதனை முன் னெடுப்பதற்கான உரிமை இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அவ்வாறாயின் எமக்கு அந்த உரிமை இல்லையா?

இரண்டாவது விடயம், நாம் அதில் எடுத்துக் கொண்ட விடயங்களைப் பார்த்தால், பௌத்த விகாரைகள் அமைப்பது. நாம் பௌத்த மதத்துக்கு எதிரானவர்கள் அல்ல. ஆனால் பலாத்காரமாக தனிப்பட்ட மக்களின் காணிகளைப் பிடித்து அவற்றில் பலாத்காரமாக, நீதிமன்ற உத்தரவுகளையும் மீறி பௌத்த விகாரைகள் அமைக்கப் படக்கூடாது என்பதையே நாம் வலியுறுத்துகின்றோம். இது ஒரு பாரதூரமான விடயம். பௌத்த மேலாதிக்கத்தை நிறுவும் முயற்சிகளே இவை. கும்பிடுவதற்கும் ஆளில்லை, பௌத்த விகாரைகள் அமைக்கப்படுகின்றன. கிளிநொச்சியில் கனகாம்பிகை குளம் அம்மன் கோவிலின் காணியை எடுத்து அதில் பௌத்த கோவில் அமைப்பது நியாயமற்றது. இதனை நாம் அமைதியாக எடுத்துச் சொல்கிறோம்.

இவ்வாறான செயற்பாடுகளை தடுக்கவேண்டிய தேவை அரசாங்கத்துக்கு உள்ளது. தென்பகுதியில் உள்ள சிங்கள இனவாதிகள் குழப்பு வார்கள் என்பதற்காக நாம் எமது உரிமைகளைக் கேட்காமல் இருக்க முடியாது.

கேட்டே அவர்கள் செய்யாத நிலையில் கேட்காமல் இருக்கவும் இயலாது. நாங்கள் 60 வருடங்களுக்கு மேலாகக் கேட்டே வருகின்றோம்.

இவ்வாறு எமது உரிமைகளை நாம் வலியுறுத்திக் கேட்பதை யாரும் தடுக்கக்கூடாது என சித்தார்த்தன் எம்.பி. தெரிவித்திருந்தார். (செ)

# உடல் நல...

முதலமைச்சர் ஜெயலலிதாவின் உடல் நலத்தில் நல்ல முன்னேற்றம் காணப்படுவதாக அப்பலோ மருத்துவமனை நிர்வாகம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஐக்கிய இராச்சியத்திலிருந்து கடந்த 30 ஆம் திகதி சென்னை வந்த கையிஸ் மற்றும் புனித தாமஸ் மருத்துவமனையின் பன்னாட்டு சிறப்பு மற்றும் ஆலோசனை மருத்துவர் ரிச்சர்ட் பியலே என்ற மருத்துவ நிபுணரின் கருத்தையும் அப்பலோ மருத்துவமனை பெற்றிருக்கிறது.

முதலமைச்சரை பரிசோதித்த மருத்துவர் ரிச்சர்ட், பல்வேறு சிகிச்சை அறிக்கைளையும் ஆய்வு செய்து, மருத்துவ நிபுணர்களோடு விரிவான கலந்துரையாடலை மேற்கொண்டார்.

அந்த கலந்தாய்வின் அடிப்படையில் பொருத்தமான ஆன்டிபயாடிக் மருந்துகள் மற்றும் பிற சிகிச்சை நடவடிக்கைகளோடு முதலமைச்சரின் நோய் தொற்றுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது என்று அப்பலோ மருத்துவமனை நிர்வாகம் கூறியிருக்கிறது.

அளிக்கப்படும் சிகிச்சைக்கு நல்லவிதமாக பதிலளிக்கும் முதலமைச்சர் இன்னும் சில நாட்கள் மருத்துவமனையில் தங்கியிருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## மாகாணப் பிரிவுகள் வேண்டாம்...

களும் வந்து விளையாட வேண்டும். மைதானத்தை திறந்து வைக்கும் போது நாங்கள் ஒரு பிரார்த்தனை வைத்தோம். குறுகிய காலத்தில் அந்த பிரார்த்தனை முன்னேறியுள்ளது. இன்று இந்த விளையாட்டு விழாவில் கலந்து கொண்டமைக்கு நான் பெருமகிழ்வு அடைகின்றேன்.

விளையாட்டு துறையை எடுத்துக்கொண்டால் தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் பல சாதனைகளை நிகழ்த்திய நாடாக எமது நாட்டினை குறிப்பிட முடியும். தேசிய ரீதியில் சாதனைகளை நிகழ்த்தும் போது தமிழர், முஸ்லிம், சிங்களவர் என்ற பாகுபாடின்றி இலங்கையர் என்ற அபிமானத்துடன் அந்த வெற்றியை பெற்றுக்கொண்டோம்.

விளையாட்டு என்பது உலகளாவிய மொழி, அதே போன்று விளையாட்டும் நல்லிணக்கமும் உலகின் பொது மொழிகளாக உள்ளன. விளையாட்டு மைதானம் என்பது அனைவரும் ஒன்றிய இடமாக காணப்படுகின்றது. இன்று இந்த விளையாட்டு நிகழ்வில் பங்கு கொண்ட வீரர்கள் ஒன்பது மாகாணங்களை பிரதிநிதித்துவம் கொண்ட வீரர்களாக கலந்து கொண்டிருந்தனர்.

விளையாட்டுக்காக இந்த ஒன்பது மாகாணங்களை பிரித்துக் கொண்டால் எந்த பிரச்சினையும் இல்லை. அதே போன்று இந்த நாட்டை அபிவிருத்தி செய்ய, நிர்வாகம் செய்ய பிரித்து கொண்டால் பிரச்சனை இல்லை. ஆனால் ஒரே நாடு என்ற அடிப்படையில் தான் நாங்கள் இருக்க வேண்டும்.

நாம் கூறுகின்ற இந்த ஒன்பது மாகாணங்களை யார் எமக்கு தந்தது? இந்த ஒன்பது மாகாணங்களை இலங்கையர் எவரும் எமக்கு தரவில்லை. இங்கிலாந்தின் ஜோர்ஜ் அரசர் தான் இந்த ஒன்பது மாகாணங்களை தந்திருந்தார். அவர் தந்த ஒன்பது மாகாணங்களுக்காக நாம் சண்டை போடவேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் தமது நிர்வாகத்தை இலகுவாக்குவதற்கே இலங்கையை ஒன்பது மாகாணங்களாக பிரித்தார்கள்.

1833 ஆம் ஆண்டு கோல்புறுக் கமரூன் ஆணைக்குழு ஊடாக முதலில் இலங்கை ஐந்து மாகாணங்களாக பிரிக்கப்பட்டது. பின்னர் 1890 ஆம் ஆண்டு ஒன்பது மாகாணங்களாக பிரிக்கப்பட்டது. எனவே நாங்கள் மாகாணங்களுக்காக ஏன் சண்டையிட வேண்டும்? நாம் அனைவரும் இலங்கையர் என்ற அபிமானத்துடன் செயற்படுவோம் என ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிட்டார். (செ-4)

## கோத்தாவுக்கு...

ஏற்படுத்திய குற்றச்சாட்டில் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட 8 பேருக்கு எதிராக கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு கடந்த 30ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட 8 பேரையும் பிணையில் செல்வதற்கு அனுமதித்த நீதிவான், இவர்களை வெளிநாடு செல்வதற்குத் தடைவிதித்து உத்தரவிட்டார்.

எனினும், சீன அரசின் அழைப்பின் பேரில், பாதுகாப்புக் கருத்தரங்கு ஒன்றில் பங்கேற்க, வரும் 5ஆம் நாள் சீனாவுக்குப் பயணம் மேற்கொள்வதற்கு கோத்தபாய ராஜபக்ஷ திட்டமிட்டுள்ளதாகவும், அதற்கு அனுமதி அளிக்க வேண்டும் என்றும் அவரது சட்டவாளர் கோரிக்கை விடுத்தார்.

இந்தக் கோரிக்கை குறித்து இன்று ஒக்டோபர் 3ஆம் திகதி முடிவு எடுக்கப்படும் என்று நீதிவான் அறிவித்திருந்தார்.

நாளை மறுதினம் 5ஆம் திகதி தொடக்கம் இரண்டு வாரகாலம் சீனாவில் பயணம் மேற்கொள்வதற்கு கோத்தபாய ராஜபக்ஷ திட்டமிட்டிருந்தார்.

ஏழாவது ஷியாங்சான் அமைப்பின் பாதுகாப்பு மாநாடு வரும் 10ஆம் நாள் தொடக்கம் 12ஆம் நாள் வரை சீனத் தலைநகர் பீஜிங்கில் உள்ள ஷியாங்சான் யிஹே விடுதியில் நடைபெறவுள்ளது.

சுமார் 60 நாடுகள் மற்றும் அமைப்புகளின் பிரதிநிதிகளும், 100இற்கு மேற்பட்ட உள்நாட்டு வெளிநாட்டு புலமையாளர்களும் இந்த மாநாட்டில் பங்கேற்கவுள்ளனர்.

இந்த மாநாட்டில் பங்கேற்கவே கோத்தபாய ராஜபக்ஷ சீனா செல்லத் திட்டமிட்டிருந்தார். எனினும், சீனாவுக்கான பயணத்திட்டம் சாத்தியமாகுமா என்பது இன்றே தெரிய வரும். (செ-11)

## பெர்னான்டோவிடம்...

யோர்க் பல்கலைக்கழகத்தில் நடக்கும் மனித உரிமைகள் கருத்தரங்கு ஒன்றில் பங்கேற்பதற்காக, ருக்கி பெர்னான்டோ நேற்றுமுன்தினம் கட்டுநாயக்க விமான நிலையம் சென்றிருந்தார்.

அங்கு அவரைத் தடுத்து வைத்து புலனாய்வுப் பிரிவினர் நீண்ட விசாரணைக்கு உட்படுத்தினர்.

சுமார் ஒன்றரை மணி நேரம் வரை ருக்கி பெர்னான்டோ தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டதாக கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.

சட்டவாளர்கள் தலையிட்டதை அடுத்து, விமானம் புறப்படுவதற்கு முன்னரே அவர் விடுவிக்கப்பட்டார்.

பிரித்தானியாவில் நடைபெறும் மனித உரிமை மாநாடு தொடர்பாகவே ருக்கி பெர்னான்டோவிடம் புலனாய்வுப் பிரிவினர் கேள்விகளை எழுப்பியுள்ளனர்.

அதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பாக தமக்குத் தெரியாது என்று தெரிவித்துள்ள பொலிஸ் பேச்சாளர் பிரியந்த ஜெயக்கொடி, சம்பந்தப்பட்ட பிரிவிடம் இது தொடர்பில் விசாரித்து அறிந்து கொள்ள வேண்டியிருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (செ-11)

## புதிய அரசியல...

க்கம், புரிந்துணர்வு ஏற்பட வேண்டும். வெவ்வேறு தேசிய இனங்களுக்கு மத்தியில் ஒற்றுமை, சமரசம்,சமத்துவம் ஏற்பட வேண்டும். அவை ஊடாக சமாதானம் ஏற்பட வேணடும். இதை இன்று ஆட்சியில் உள்ள தலைவர்கள் சிந்திக்கின்றனர்.

அதன் பயனாகதான் இந்த விளையாட்டு வழா, இதனை நடத்தியவர்களை நான் பாராட்டுகின்றேன். இந்த மேடையை அரசியல் மேடையாக நான் பயன்படுத்த விரும்பவில்லை. எனினும் ஒருசில கருத்துக்களை கூறவிரும்புகின்றேன். இவ்விதமான விளையாட்டு நிகழ்வுகளின் ஊடாக நாட்டு மக்களிடையே ஒற்றுமை சமாதானம் ஏற்பட வேண்டும்.

நாங்கள் ஒரு நாட்டை சேர்ந்தவர்களாக சமமாக வாழக்கூடிய நிலை ஏற்பட வேண்டும். அது உருவாகுவதற்கு சில கருமங்கள் உருவாக வேண்டும். நாட்டில் வாழும் மக்கள் மத்தியில் ஒரு கருத்து இருக்கின்றது. இந்த நாடு சுதந்திரம் அடைந்த போது நாட்டில் வாழும் பெரும்பான்மை இன மக்கள் தான் சுதந்திரம் அடைந்தார்கள். ஏனைய சிறுபான்மை மக்கள் சுதந்திரம் அடைய வில்லை என. அதற்கு காரணம் என்னவென்றால், இந்த நாட்டில் வாழும் சக இனங்களை சேர்ந்த மக்களால், சகல மக்கள் கட்சிகளால் ஒருமித்து இந்த நாட்டில் அரசியலமைப்பு உருவாக்கப்படவில்லை. எல்லா இன மக்களின் சமத்துவமும் அரசியல் சாசனத்திற்கு பெறப்படவில்லை. முதலாவது அரசியல் அமைப்பினை ஆங்கிலேயர்கள் நிறைவேற்றினார்கள். அதன் பின்னர் வந்த அரசியல் சாசனங்கள் தனி ஒரு கட்சியினால் மாத்திரமே நிறைவேற்றப்பட்டது.

தற்போது நாங்கள் புதிய அரசியலமைப்பு சாசனத்தை உருவாக்குவதற்கு செயற்பட்டு வருகின்றோம். நாட்டின் பிரதான கட்சிகள் இன்று ஆட்சியில் உள்ளன. உருவாக்கப்படும் அரசியல் சாசனம் சமரசத்தின் அடிப்படையில் நாட்டின் அனைத்து மக்களும் சுதந்திரமாக வாழ உரித்துடையவர்கள் என்ற அடிப்படையில், அரசியல் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு ஒவ்வொரு இனத்தின் இறைமை மதிக்கப்பட்டு இந்த அரசியல் சாசனம் உருவாக்கப்பட வேண்டும் என விரும்புகின்றோம்.

நாடு பிரிக்கப்படாமல் நாடு பிளவு படாமல் ஒரே நாட்டிற்குள் ஒற்றுமையாக சமத்துவமாக அனைத்து மக்களும் வாழக்கூடிய ஒரு அரசியல் சாசனம் உருவாக்கப்பட வேண்டும் அதற்கு பெரும்பான்மையினத்தை சார்ந்தவர்கள் மாத்திரமல்ல, சிறுபான்மை இனத்தை சார்ந்தவர்களும் ஆதரவு வழங்க வேண்டும. இது ஒரு முக்கியமான விடயம். நாட்டின் பல பகுதிகளில் இருந்து மாணவர்கள் இங்கு வந்துள்ளீர்கள். உங்கள் மூலமாக இந்த செய்தி அனைத்து மக்களிடமும் சென்றடைய வேண்டும் என இரா.சம்பந்தன் தனது உரையில் குறிப்பிட்டார். (செ-4)

## வடக்கில் விளை...

விளையாட்டரங்கில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

விளையாட்டுத்துறை அமைச்சு ஆரம்பிக்கப்பட்டு 49 வருடங்களின் பின்னர் யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக தேசிய விளையாட்டு விழா நடைபெறுவதில் மகிழ்வடைகிறேன். இது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும்.

இந்த விளையாட்டு விழாவின் மூலமாக, வளர்ந்து வரும் விளையாட்டு வீர வீராங்கனைகள் வடக்கு மண்ணிலும் இருக்கிறர்கள் என்பதை அடையாளம் காண முடிந்துள்ளது.

கடந்த காலங்களில் யாழ் மண்ணில் இருந்து பல வீர வீராங்கனைகள் தேசிய மட்ட போட்டிகளில் வெற்றி பெற்று சர்வதேச மட்டங்களுக்கும் சென்றுள்ளனர். 5 தசாப்தங்களுக்கு பின்னர் இத்தகைய ஒரு நிலையை யாழ்.மாவட்டத்தில் ஏற்படுத்தியிருப்பதையிட்டு பெருமையடைகிறோம்.

வடமாகாணத்தை சேர்ந்த வீராங்கனை அனித்தா கோலூன்றி பாய்தலில் தேசிய சாதனையை நிலைநாட்டியுள்ளார். கயிறிழுத்தல் போட்டியில் வடமாகாண பெண்கள் அணி இறுதிப்போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது. இவை வடக்கில் விளையாட்டுத்துறை முன்னேறுவதற்கான ஒரு அறிகுறியாக நோக்க முடியும்.

இவ்வாறு விளையாட்டு கலாசாரமொன்றை மலர்ச்சியுற செய்வதற்கான வழிவகைகளை நாம் ஏற்படுத்தி தந்திருக்கிறோம்.

உலகிலே மிகப்பெரிய விளையாட்டு விழாவான ஒலிம்பிக் விளையாட்டின் சின்னமான 5 வளையங்களும் 5 கண்டங்கள் தமக்கிடையே சகோதரத்துவத்தை குறித்து நிற்கிறது. அதே போன்றே எமது 9 மாகாணங்களை சேர்ந்த மக்களும் சகோதரத்துவத்துடன் ஒன்றிணைவதை எதிர்பார்ப்பாக கொண்டுள்ளது. இந்த எதிர்பார்ப்பு நன்றாக இவ் விளையாட்டு விழாவின் மூலம் நிறைவேறியுள்ளமையால் மிகவும் சந்தோசமடைகிறேன்.

எமது நாட்டில் புதிதாக உருவாகும்

23ஆம் பக்கம் பார்க்க....

## யாழ்.பல்கலைக்கு...



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு நேற்று மாலை விஜயம் செய்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பல்கலைக்கழக மாணவர்களின் குடிநீர் தேவையைக்கருதி பல்கலைக்கழக வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள இரண்டு நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களையும் திறந்து வைத்தார்.

நேற்று மாலை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறும் தேசிய விளையாட்டு விழாவின் நிறைவு நிகழ்வில் பங்குபற்றுவதற்காக சென்ற ஜனாதிபதி மேற்படி நிகழ்விலும் இணைந்துகொண்டார்.

பல்கலைக்கழக மாணவர்களின் கோரிக்கைக்கமைய இந்த நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் வழங்கப்பட்டதுடன், எதிர்காலத்தில் மேலும் இரண்டு இயந்திரங்கள் நிறுவப்படவுள்ளன.

பல்கலைக்கழகத்திற்கு சென்ற ஜனாதிபதி, அங்கு மாணவர்களுடன் நட்புறவுடன் உரையாடி அவர்களது குறைகளையும் கேட்டறிந்துகொண்டார். (செ-11)


### நிர்வாக உத்தியோகத்தர் பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணம் **கல்யாணமாலை** இலவச திருமண சேவை நிலையத்திற்கு நிர்வாக உத்தியோகத்தர் தேவை.

40 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் மட்டும் விண்ணப்பிக்க முடியும்.

அரச சேவையில் இருந்து ஓய்வுபெற்ற குடும்பப் பொறுப்பு அற்ற, யாழ்.நகருக்கு அண்மையில் இருக்கக் கூடியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**தொடர்பு:0702202208**

-பொது முகாமையாளர்

(இ)

### வட மாகாண கடமை நிறைவேற்று அதிபர்களுக்கான முக்கிய அறிவித்தல்

கடமை நிறைவேற்று அதிபர்கள் தொடர்பில் முக்கிய தீர்மானங்களை எடுக்கும் பொருட்டு நாட்டில் உள்ள அனைத்து கடமை நிறைவேற்று அதிபர்களும்

**04.10.2016 செவ்வாய்க்கிழமை (நாளை)**

**காலை 07.30 மணியளவில்**

கொழும்பில் உள்ள கல்வி அமைச்சுக்கு முன்பாக ஒன்றுகூடவுள்ளனர். எனவே அதில் கலந்து கொள்ளும் பொருட்டு வட மாகாணத்தில் உள்ள சகல கடமை நிறைவேற்று அதிபர்களும் தத்தம் வலய இணைப்பாளர்களுடன் தொடர்பு கொண்டு தவறாது கல்வி அமைச்சுக்கு முன் ஒன்றுகூடுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**மேலதிக தொடர்புகளுக்கு:-0777728571**

**கடமை நிறைவேற்று அதிபர்கள் சங்கம்**

**வட மாகாணம்**

(இ)

### அறை வாடகைக்கு உண்டு

கொக்குவில் சந்தியில் பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஏற்ற வகையில் அறை வாடகைக்கு உண்டு.

**தொடர்பு:-0771440496**

(இ-5970)

### நீங்கள் தொழில் தேடுபவரா?

முன்னணி நட்சத்திர ஹோட்டேல்களில் Front Office, Restaurant, Room Service, Kitchen போன்ற பகுதிகளில் வேலைவாய்ப்புடன்

O/L உடன் Diploma in Hotel Management

CERTIFICATE - DIPLOMA - DEGREE

With FREE English Course Up to 30% Discount

- பயிற்சிக் காலத்திலேயே உழைக்கும் வாய்ப்பு
- கற்கைநெறி நிறைவில் நிரந்தர வேலைவாய்ப்பு

வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு

புதிய பிரிவுகள் ஆரம்பம் Week & Weekend Batch

அனுமதிகளுக்கு 077 3616 798

www.sikaram.lk
Sikaram Academy
021 222 0011

SIKARAM ACADEMY SCHOOL of HOSPITALITY

இல.175, 1ஆம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி), யாழ்ப்பாணம்.

(C-5968)

### டிப்பர் வாகனம் வாடகைக்குத் தேவை

கட்டட ஒப்பந்த வேலைக்கு 4 1/2 கியூப் உடைய 6 சக்கர டிப்பர் வாகனங்கள் நீண்டகால வாடகைக்குத் தேவை.

**தொடர்புகளுக்கு:- 0777554528**

(இ-5969)

### வாடகைக்கு

சுன்னாகம் சந்திக்கும் மல்லாகம் சந்திக்கும் இடையில் காங்கேசன்துறை பிரதான வீதியில் அமைந்துள்ள 10x25 விஸ்தீரணமுள்ள இரண்டுகடைகள் வாடகைக்கு உண்டு.

(6023) தொடர்புகளுக்கு :- 0775360745

### வேலையாள் தேவை

யாழ்.நகரப் பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ள புதிய மருத்துவ நிலையம் ஒன்றில் வேலையாற்ற அனுபவம் வாய்ந்த பெண் வேலையாள் தேவை.

**தொடர்பு:- 0773470647,0779604069**

(6094)

### சுத்தம் செய்யப்படும்

உங்களின் வீடுகள், கடைகள், நிறுவனங்கள், கம்பனிகளில் உள்ள மலசல கூடங்கள் நிறைந்து விட்டதா? குறைந்த செலவில் மிக சிறந்த முறையில் சுத்தம் செய்து தரப்படும்.

**T.P:-0765628137**

(6095)

### அனைத்து நாடுகளுக்குமான விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK-550*/=Kg

DELIVERY IN 3-5 DAYS (நிபந்தனைகளுக்குட்பட்டது)

மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.

**தொடர்புகளுக்கு: 0768226240**

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

V2 TRAVELS (C-5950)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.10.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.